www.tamilarangam.net

# குற்ற இயல்

## வழக்குகளை எதிர்கொள்வது எப்படி?

•

'பொதுமக்களுக்கும்
இளம் வழக்கறிஞர்களுக்குமான
சட்ட வழிகாட்டி

•

பொன். சேகர், B.E., M.L.

மனித உரிமை பாதுகாப்புக் குழு
பதிவு எண் : 13/96
தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# குற்ற இயல் வழக்குகளை எதிர்கொள்வது எப்படி?

## பொதுமக்களுக்கான சட்ட வழிகாட்டி

ஆக்கம்

**பொன். சேகர்,** B.E., M.L.
வழக்கறிஞர்
திருச்சிராப்பள்ளி.

வெளியீடு
மனித உரிமை பாதுகாப்புக் குழு
பதிவு எண் : 13/96
தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு : ஜனவரி 1998

இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1999

மூன்றாம் பதிப்பு : ஜனவரி 2001

விலை ரூ.25/- : (இருபத்தைந்து)

உரிமை : மனித உரிமை பாதுகாப்புக் குழு

வெளியீடு : மனித உரிமை பாதுகாப்புக் குழு
14, தனிநபர் குடியிருப்பு
சாலை ரோடு,
திருச்சிராப்பள்ளி - 3.

அச்சு : எழில் பிரிண்ட்ஸ்,
63, என்.எஸ்.கே. சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

நூல் கிடைக்குமிடங்கள் : கீழைக்காற்று
நூல் வெளியீட்டகம்-விற்பனையகம்,
10, ஔலியா சாகிபு சந்து,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தோலைபேசி : 8412367

: ச. பாபு
21, NNN கட்டிடம்
காஜாமியான் தெரு,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**M. நடராஜ் வல்லத்தரசு,** B.A., L.L.B.
வழக்கறிஞர்,
34/1, தென்னூர் நெடுஞ்சாலை,
திருச்சிராப்பள்ளி - 17.

# அணிந்துரை

சாதாரண பாமர மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், குற்ற இயல் வழக்குகளின் நடைமுறைகளை இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது. சட்டத்துறை சம்பந்தப் படாதவர்களும், வழக்கறிஞர் தொழிலுக்கு புதிதாக வருபவர்களும் சுலபமாக புரிந்து கொள்ளும் வகையில், குற்ற இயல் வழக்குகளின் நடைமுறைகளை தெளிவாக முன் வைப்பதற்கு இந்நூலாசிரியர். திரு. பொன். சேகர், B.E., M.L., கடின முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். அவரது முயற்சி பயனுள்ளதாக இருப்பதால், முதல் முயற்சியாக இருந்தாலும் திரு. சேகர் அவர்கள் பாராட்டுக்குரியவர். வாசகர்கள் இச்சிறு நூலை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

26-01-1998
திருச்சிராப்பள்ளி

**M. நடராஜ் வல்லத்தரசு,** B.A., L.L.B.
வழக்கறிஞர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் பதிப்பிற்கான

# முன்னுரை

இந்திய நாடு "சுதந்திரம்" அடைந்து 50 ஆண்டுகள் உருண்டோடி பொன்விழாவும் கொண்டாடப்பட்டு விட்டது. ஆனால் இந்தியக் குடிமக்களுக்கு இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகள் இந்த 50 ஆண்டுகளில் பாதுகாக்கப்பட்டுள்ளதா? பெருகிவரும் காவல் துறையின் அத்துமீறல்களும், சட்டவிரோதச் செயல்களும், இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்து வருகின்றன.

காவல்துறையின் செயல்பாடுகளை மாற்றியமைக்க பலர் குரல் கொடுத்த வண்ணம் உள்ளனர். ஆனால் நடைமுறையில் மாற்றம் காண்பது குதிரைக் கொம்பாகவே உள்ளது.

கல்வி அறிவும், ஜனநாயக உணர்வும் மிகவும் பின் தங்கியுள்ளதால் நமது மக்கள் காவல்துறை என்றாலே அஞ்சி நடுங்குகின்றனர். மக்களின் அறியாமையையும், பயந்த சுபாவத்தையும் பயன்படுத்தி காவல்துறையினர் மேலும் மேலும் மக்கள்மீது அடக்கு முறைகளை ஏவி, அடிப்படை உரிமைகளைப் பறித்து வருகின்றனர்.

மனித உரிமை இயக்கங்களின் தொடர்ச்சியானப் போராட்டங்களின் விளைவாக, காவல் துறையின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த அவ்வப்பொழுது உயர்நீதி மன்றங்களும், உச்சநீதி மன்றமும் காவல்துறையினருக்கு சில வழிகாட்டும் உத்தரவுகளை பிறப்பிக்கின்றன. ஒருவரைக் கைது செய்யும் பொழுது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை சமீபத்தில் உச்ச நீதிமன்றம் உருவாக்கியுள்ளது. இந்நெறிமுறைகளை மக்கள் வெகுவாகப் பாராட்டும் பொழுது காவல் துறையினரோ, தங்களது கைகள் கட்டப்பட்டதாகக் கருதுகிறார்கள். காலனியக் கால காவலர்களின் மனநிலையிலிருந்து, இந்தியக் காவல்துறையினர் இன்னும் விடுபடவில்லை என்பதையே இது காட்டுகிறது.

கட்சிகள் மாறினாலும், ஆட்சிகள் மாறினாலும் காவல் துறையினரின் நிலை மாறாத போது மனித உரிமை இயக்கங்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராட்டங்களும் ஓயாது, ஏகாதிபத்திய தன்னார்வக் குழுக்கள் சில மனித உரிமை அமைப்புகளை முடமாக்கி வருகின்ற இன்றைய சூழ்நிலையில் மக்களின் போராட்டங்களுக்கு உண்மையாகவே உதவி செய்யக்கூடிய மனித உரிமை அமைப்புகளை பலப்படுத்த வேண்டியது பொது மக்களின் கடமையாகும். எனவே காவல் துறையின் சட்ட விரோதச் செயல்களை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்த வேண்டும் என்றால் பொதுமக்கள் சட்டங்களைத் தெரிந்து கொள்வதும், காவல்துறை மற்றும் நீதிமன்ற நடைமுறைகளைத் தெரிந்து கொள்வதும் அவசியமானது. இந்த அவசியத்தைக் கருதியே "குற்ற இயல் வழக்குகளை எதிர்கொள்வது எப்படி ? " என்ற இச்சிறு நூலை வெளியிடுகிறோம்.

இந்தியக் குடிமக்களுக்கு கருத்துரிமை, பேச்சுரிமை உண்டு என இந்திய அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்தாலும், இவையும் ஆதிக்கச் சக்தியினர் மற்றும் காவல் துறையினரின் அதிகாரத்துக்கு உட்பட்டே நடைமுறைப் படுத்தப்படுகிறது. ஒருவரது கருத்துரிமை, பேச்சுரிமை பறிக்கப்படும் பொழுது என்ன செய்ய வேண்டும் என்பதையும் இந்நூலில் தெளிவு படுத்தியுள்ளோம்.

மக்களின் சமூக விடுதலைக்காகப் போராடும் புரட்சிகர அமைப்புகள், சமூக இயக்கங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளுக்கும், இளம் வழக்கறிஞர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்நூல் பெரிதும் உதவும் என்று நம்புகிறோம். முதன் முயற்சியாக, மிகக் குறுகிய காலத்தில் இந்நூல் தயாரிக்கப்பட்டதால் குறைகளை இருக்கலாம். குறைகளைச் சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்கிறோம்.

இந்நூலை தயாரிப்பதற்கு ஊக்கமளித்து, உடனிருந்து நேரடியாக உதவி செய்த வழக்கறிஞர் திரு. கோ. போஜகுமார் அவர்களுக்கும், நூலைப் படித்துத் திருத்தி, ஆலோசனைகள் வழங்கிய மூத்த வழக்கறிஞர் திரு. எம். நடராஜ் வல்லத்தரசு அவர்களுக்கும், பிரதி எடுக்க உதவிய தோழர்கள் உமா, உஷா ஆகியோருக்கும், அச்சிட்ட திருச்சிராப்பள்ளி சுப்ரா பைன் பிரிண்ட் நிறுவனத்தாருக்கும் நூல் வெளிவர உதவிய அனைவருக்கும் எமது நன்றியை உரித்தாக்குகிறோம்.

31-01-1998.

**பொன். சேகர்**
வழக்கறிஞர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாம் பதிப்பிற்கான

# முன்னுரை

இந்நூலின் முதல் பதிப்பு வெளியிட்ட மிகக் குறுகிய காலத்திற்குள் அனைத்துப் பிரதிகளும் விற்பனையாகிவிட்டன. நூல் தேவை குறித்து வழக்கறிஞர்கள் முதல் சிறைக் கைதிகள் வரை பலர் நேரிலும் கடிதங்கள் மூலமும் விசாரித்த வண்ணம் உள்ளனர். சட்டப் பிரச்சனைகளை தமிழில் விளக்கினால் வாசகர்களுக்கு பெரிதும் உதவும் என்பதை வாசகர்கள் காட்டும் ஆர்வத்திலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது. மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தில் சில சேர்க்கைகளுடன் இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிடுகிறோம். இரண்டாம் பதிப்பு வெளிவர உதவிய திருச்சி வழக்கறிஞர் திரு. கோ. போஜகுமார் அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு. ஏ. இராகுல் அவர்களுக்கும் , திருச்சி 'பெல்' திரு. **K. கந்தசாமி,** B.E., B.L., அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*30-1-99*

**பொன். சேகர்,** B.E., M.L.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**K. கந்தசாமி,** B.E., B.L.
**C3/267, BHEL**
**கைலாசபுரம்,**
**திருச்சிராப்பள்ளி - 14**

# மதிப்புரை

" குற்ற இயல் வழக்குகளை எதிர்கொள்வது எப்படி ? " என்ற இந்நூலைப் படித்தவுடன் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். சட்டம் என்றால் என்னவென்றே தெரியாத ஒடுக்கப்பட்ட மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், எளிய முறையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆதிக்கச் சக்தியினராலும், ஆளும் வர்க்கத்தினராலும் அடக்கு முறைக்கு உள்ளாகும் ஒடுக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும். நூலாசிரியர் திரு. பொன். சேகர் அவர்களின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

30-01-99
திருச்சிராப்பள்ளி - 14

**K. கந்தசாமி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**A. இராகுல்**
**உயர்நீதி மன்ற வழக்கறிஞர்,**
**G/H, பிரஸ் அபார்ட்மென்ட்,**
**11, ஜீவரத்தினம் நகர், அடையார்,**
**சென்னை - 600 020.**

# மதிப்புரை

காவல் துறைக்கும்-பொது மக்களுக்குமான முரண்பாடு, காவல்துறைக்கும்-மாணவர்களுக்குமான மோதல், காவல்துறைக்கும்-வழக்கறிஞர்களுக்குமான பூசல் தொடர்ந்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒருவர் எந்தப் பிரச்சனையிலும் தலையிடாமல் ஒதுங்கிச் செல்ல முயன்றாலும் கூட, ஏதோ ஒரு வகையில் அவர் காவல்துறையின்ரையோ, ரவுடிகளையோ எதிர்கொள்ள நேரிடுகிறது. இத்தகைய சூழலில் சிக்கிக் கொள்ளும் ஒருவர் பிரச்சனைகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை இந்நூல் எளிய முறையில் விவரிக்கிறது.

சட்டத்தை வழக்கறிஞர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும், வழக்கறிஞர்கள் மட்டுமே காவல் துறையை எதிர்கொள்ள முடியும் என்ற நிலையை மாற்றி சாதாரண மக்களும் சட்டத்தைப் புரிந்து கொண்டு காவல் துறையை எதிர்கொள்ள முடியும் என்ற துணிவை இந்நூல் ஏற்படுத்தும். வழக்கறிஞர் பணியைத் தொடங்கிய மிகக் குறுகிய காலத்திற்குள் இந்நூலை ஆக்கிய திரு. பொன். சேகர் அவர்களின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

30-1-99 **A. இராகுல்**
சென்னை - 20. **வழக்கறிஞர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்

பகுதி I : காவல்துறையை எதிர்கொள்ளல் பக்கம்

1. முதல் தகவல் அறிக்கை 1

1. பாதிக்கப்பட்ட ஒருவர் காவல் நிலையத்தில் எவ்வாறு புகார் தருவது ?

பிடியாணை வேண்டாக் குற்றங்களில் முதல் தகவல் அறிக்கை

புகார் கொடுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை

முதல் தகவல் அறிக்கையை காவல் நிலைய அதிகாரி பதிவு செய்ய மறுத்தால் என்ன செய்வது ? 3

பிடியாணை வேண்டும் குற்றங்களின் முதல் தகவல் அறிக்கை

2. ஒருவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் என்ன செய்வது ? 6

முதல் தகவல் அறிக்கையின் விவரங்களை எவ்வாறு தெரிந்து கொள்வது, அதன் நகலை எவ்வாறு பெறுவது ?

முதல் தகவல் அறிக்கையை உண்மை அல்ல என்று தள்ளுபடி செய்தல் 7

3. மாதிரிப் படிவங்கள் 8

2. கைது 10

தடுப்புக்காவல் 11

ஒருவரை எவ்வாறு கைது செய்ய வேண்டும் ? 12

எத்தகைய சூழ்நிலையில் ஒருவரைக் கைது செய்யலாம் ? 13

யார் கைது செய்யலாம் ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | |
|---|---|
| கைதாகும்போது என்ன செய்ய வேண்டும் ? | 14 |
| ஒரு நபரைத் தேடுதல் | 17 |
| முன்னெச்சரிக்கைக் கைது | |
| கைதாகும்போது தவிர்க்க வேண்டியவை | |
| கைதாவதை எவ்வாறு தவிர்ப்பது ? | |
| கைவிலங்கு | 18 |
| உடலைச் சோதனையிடுதல் | |
| மருத்துவ சிகிச்சை | 19 |
| காவல் அடைப்பில் இருக்கும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ? | 20 |
| 1. அடையாளம் காட்டல் | |
| 2. விசாரணை | 21 |
| 3. காவல் நிலைய சித்திரவதைகள் | 22 |
| ஒரு இடத்தை சோதனையிடுதல் மற்றும் பொருட்களை கைப்பற்றுதல் | 24 |
| அலுவலக ஊழியர் கைது செய்யப்பட்டால் என்ன செய்ய வேண்டும் ? | 26 |
| கைதான போது கைப்பற்றப்பட்ட பொருட்களை திரும்பப் பெறுவது எப்படி ? | |
| **3. காவல்துறையின் சட்டவிரோதச் செயல்கள்** | 27 |
| சட்டவிரோத விசாரணைகள் | |
| 1. காவல்துறையின் சட்டவிரோத விசாரணைகள் எவ்வாறு அமைகின்றன ? | |
| 2. சட்டவிரோத விசாரணைகளை எவ்வாறு எதிர்கொள்வது ? | 28 |
| சட்டவிரோதக் காவல் அடைப்பும், சட்டவிரோதமாக அழைத்துச் செல்வதும் | 29 |




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4. பிணை

குற்றங்களின் தன்மை
1. பிணை விடு குற்றம்
2. பிணை விடா குற்றம்
உடனடியாக எவ்வாறு பிணை பெறுவது 34
காவல் நிலையத்தில் என்ன செய்ய வேண்டும் ? 35
நீதிமன்றத்தில் என்ன செய்ய வேண்டும் ? 36
பிணை மறுப்பு
பிணை வழங்குதல் 37
பிணையாட்கள் 38
பிணை மேல்முறையீடு 39
பிணை நிபந்தனை நீக்கம்
பிணை நீக்கம் 40
இடைக்காலப் பிணை
எதிர்நோக்குப் பிணை 41
விடுமுறை நாட்களில் பிணைபெற முடியுமா ? 42
அழைப்பாணைக்குப் பிறகு நீதிமன்றத்தில் முன்னிலையாதல் 44
பகுதி II வழக்கு விசாரணையும் தீர்ப்புரையும்
1. வழக்கு விசாரணை
1. ஒருவர் மீது காவல்துறை புனைந்துள்ள வழக்குகள் மீதான நீதிமன்ற விசாரணை
நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பினால் என்ன செய்ய வேண்டும் ? 45
குற்ற அறிக்கை 46
வாய்தா 47
பிடியாணை பிறப்பிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும் ? 48



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழக்கு விசாரணை தாமதமானால் என்ன செய்ய வேண்டும் ?

வழக்கு விசாரணையை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவது எப்படி ? 50

சாட்சிகள் விசாரணையும் தற்காப்பு சாட்சியமும் 51

**2. ஒருவர் மீது குற்ற முறையீடு செய்வது எப்படி ?** 52

**3. வழக்குகளைத் திரும்பப் பெறுதல்** 53

**4. வழக்குகளை இணக்கம் செய்து கொள்ளல்** 54

2. தீர்ப்புரையும் மேல் முறையீடும் 55

தீர்ப்புத் தேதியில் என்ன செய்ய வேண்டும் ?

வழக்கிலிருந்து விடுதலை

தண்டனை விதிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும் 56

மேல் முறையீடு 57

மேல் முறையீட்டுக்கான கால வரையறை 59

சீராய்வு

பகுதி III பொது ஒழுங்கமைதி 60

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள்

ஒலிபெருக்கி பயன்படுத்துதல் 63

தட்டி, சுவரொட்டி, சுவரெழுத்துப் பிரச்சாரம் மற்றும் பிரசுரங்கள் விநியோகம்

பகுதி IV பிற சட்டங்கள் 64

மனித உரிமை பாதுகாப்புச் சட்டம்

வன்கொடுமை தடுப்புச் சட்டம் 72

சொல் விளக்கம் 85



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பகுதி - I

**காவல்துறையை எதிர்கொள்ளல்**

ஒருவரது நடவடிக்கைகளைத் தொடர்ந்து அவர் காவல்துறையை எதிர்கொள்ள நேரிடும். சில சமயங்களில் ஆதிக்கச் சக்திகள், ரௌடிகள் மற்றும் சமூக விரோதிகளையும் கூட எதிர்கொள்ள நேரிடும். அவ்வாறு எதிர்கொள்ள நேரிடும் சமயங்களில் ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகிறது.

**1. முதல் தகவல் அறிக்கை**

**பிடியாணை வேண்டாக் குற்றங்கள்** (Cognizable offence)

குற்ற இயல் நடைமுறைச் சட்டம் முதல் அட்டவணையின்படியோ அல்லது நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்தின்படியோ ஒரு குற்றச் செயலில் ஈடுபட்ட ஒரு நபரை பிடியாணை இல்லாமல் காவல் அதிகாரி கைது செய்யலாம். இக்குற்றச் செயல்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்கள் எனப்படும்.

**பிடியாணை வேண்டும் குற்றங்கள்** ( Non-Cognizable offence)

ஒரு குற்றச் செயலில் ஈடுபட்ட ஒரு நபரை காவல் அதிகாரி பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடாது. இக்குற்றச் செயல்கள் பிடியாணை வேண்டும் குற்றங்கள் எனப்படும்.

**முதல் தகவல் அறிக்கை** (First Information Report)

ஒரு சம்பவத்தைப் பற்றி, முதன் முதலாக குற்ற சாட்டுதலாகவோ அல்லது தக்கவல்களாகவோ அல்லது குற்ற இயல் சட்டம் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்திலோ காவல் நிலைய அதிகாரியிடம் தரப்படும் புகார் தகவல் அறிக்கை எனப்படும்.

**குற்றமுறையீடு** (Complaint)

ஒரு குற்றச் செயலினால் பாதிக்கப்பட்ட ஒருவர், அக்குற்றச் செயலில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, குற்றச்சாட்டு புனைந்து, எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ நேரடியாக நீதிமன்றத்தில் தரப்படும் புகார் குற்றமுறையீடு எனப்படும்.

**1. பாதிக்கப்பட்ட ஒருவர் காவல் நிலையத்தில் எவ்வாறு புகார் தருவது?**

**பிடியாணை வேண்டாக் குற்றங்களில் முதல் தகவல் அறிக்கை**

பிடியாணை வேண்டாக் குற்றச் செயலில் ஈடுபட்ட நபர்கள் மீது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அச்செயலினால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் காவல் நிலைய அதிகாரியிடம் புகார் செய்ய வேண்டும். எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ புகார் தரலாம். அவ்வூர் காவல் நிலைய பொறுப்பு அதிகாரி முகவரியிட்டு புகார் கொடுக்க வேண்டும். வாய்மொழியாக புகார் தரும்பொழுது காவல் நிலைய அதிகாரி அவற்றை எழுத்து வடிவில் பதிவு செய்து, பின் அதை தகவல் கொடுப்பவரிடம் படித்துக் காட்டி, அதில் தகவல் கொடுப்பவரின் கையொப்பத்தை பெற வேண்டும். அவ்வாறு தரப்படும் புகார் அல்லது தகவலை காவல் நிலைய அதிகாரி முதல் தகவல் அறிக்கை புத்தகத்தில் கு.ந.மு.ச. பிரிவு *154*-ன்படி, படிவம் எண்.*81*-ல் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படும், அறிக்கை தான் முதல் தகவல் அறிக்கையாகும். மேலும் காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் காவல் நிலைய பதிவேட்டிலும் அப்புகார் சாரத்தைப் பதிவு செய்ய வேண்டும் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ததற்கான ரசீதையும், முதல் தகவல் அறிக்கையின் நகலையும் புகார் கொடுத்தவருக்கு அப்பொழுதே இலவசமாக வழங்க வேண்டும்.

**புகார் கொடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை.**

காவல்நிலைய அதிகாரியிடம் கொடுக்கப்படும் புகாரில் கீழ்க்கண்ட விவரங்கள் இருக்க வேண்டும்.

*1.* தகவல் கொடுப்பவரின் பெயர், முகவரி

*2.* சம்பவ இடம்

*3.* சம்பவ நாள், தேதி நேரம்.

*4.* சம்பவத்தில் காயம் ஏற்பட்டிருந்தால் அக்காயத்தின் தன்மை (உட்காயம், சிறுகாயம், கொடுங்காயம்), எதனால் ஏற்பட்டது? (கல், உருட்டுக்கட்டை, கத்தி போன்றவை)

*5.* வேறு பாதிப்புகள் அல்லது இழப்புக்கள் என்றால் யாருக்கு ஏற்பட்டது, யாரால் ஏற்படுத்தப்பட்டது, பாதிப்பின் அளவு தன்மை.

*6.* சம்பவம் யார் யார் முன்னிலையில் *(சாட்சிகள்)* நடைபெற்றது அல்லது சம்பவத்தை யார் யார் பார்த்தார்கள் சாட்சிகளின் முகவரி.

*7.* சம்பவம் தொடர்பான பொருட்கள்

*8.* சம்பவத்தின் நோக்கம், முன் விரோதம் போன்ற விவரங்கள்.

*9.* குற்றவாளியின் பெயர், முகவரி மற்றும் அடையாளங்கள்.

*10.* சம்பவத்திற்குத் தொடர்புடைய பிற விவரங்களும் உண்மை நிலைகளும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

11. புகார் கொடுக்கப்படும் தேதி, நேரம். சம்பவம் நடந்த பிறகு எவ்வளவு விரைவாக புகார் தரமுடியுமோ அவ்வளவு விரைவாக தர வேண்டும். புகார் கொடுப்பதற்கு கால தாமதம் ஏற்பட்டால் தாமதத்திற்கான காரணத்தையும் புகாரில் தெரிவிக்க வேண்டும்.

முதல் தகவல் அறிக்கையை சம்பவம் நடந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திலும் தரலாம். ஆனால் சம்பவம் தங்களுடைய காவல் நிலைய எல்லைக்குள் நடக்கவில்லை என்று சொல்லி முதல் தகவல் அறிக்கையை பிற காவல் நிலையங்களில் பதிவு செய்ய மறுக்கிறார்கள். அவ்வாறு பதிவு செய்ய மறுப்பது சட்ட விரோதம்.

முதல் தகவல் அறிக்கையை பாதிக்கப்பட்ட நபரும் தரலாம். அல்லது குற்றச்செயல் பற்றி தெரிந்த அல்லது விவரங்களை முழுமையாகக் கேள்விப்பட்ட வேறு எந்த நபரும் தரலாம். ஒரு குற்றச் செயலில் குற்றம் சுமத்தப்பட்டவரும், தனக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அதைப் பற்றியும் முதல் தகவல் அறிக்கை தரலாம்.

**முதல் தக்வல் அறிக்கையை காவல்நிலைய அதிகாரி பதிவு செய்ய மறுத்தால் என்ன செய்வது?**

சாதாரண மக்கள் கொடுக்கும் புகார்கள் பெரும்பாலும் காவல் நிலையத்தில் பதிவு செய்யப் படுவதில்லை. குற்றம் புரிந்தவர்கள் காவல் நிலைய அதிகாரிகளுக்கு வேண்டியவர்களாக இருந்தாலோ அல்லது அரசியல் பலம், ஆள் பலம் உள்ளவர்களாக இருந்தாலோ அல்லது சாதி, மத ஆதிக்கச் சக்தியினராக இருந்தாலோ அவர்கள் மீது தரப்படும் புகாரை பதிவு செய்யாமல் அதைக் கிழித்து குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு புகார் கொடுத்தவர் மீதே பொய் வழக்கு பதிவு செய்வதுண்டு. மேலும் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய, வேண்டுமென்றே கால தாமதம்செய்வதும் உண்டு. இது போன்ற சமயங்களில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யக் கோரி காவல்துறை கண்காணிப்பாளருக்கு பதிவு அஞ்சலில் புகாரை அனுப்பி வைக்க வேண்டும். புகாரின் நகல்களை காவல்துறை துணை இயக்குனர், இயக்குனர் போன்ற உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். அதன் பிறகும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து புலனாய்வு செய்வதற்கு குற்ற இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு 156-ன் கீழ் குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில், பரிந்துரை கோர வேண்டும். அல்லது முதல் தகவல்அறிக்கையை பதிவு செய்ய உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மூலம் உத்தரவு கோர வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றவாளிகள் கடுமையான குற்றங்களைச் செய்திருந்தால் அதைச் சாதாரண குற்றங்களின் கீழ் வரும் வகையில் புகார் கொடுத்தவரை மிரட்டி, வேறு ஒரு புகாரை அவரிடம் எழுதி வாங்குவதும் உண்டு. சில சமயம் எதிரிகளைக் காப்பாற்றுவதற்காக மோசடியான புலனாய்வு செய்து, புலனாய்வுக்குப் பிறகு நிறுத்தக் குறிப்புடை வழக்கு (Reffered case) என்று வழக்கை காவல் துறையினர் முடித்துக் கொள்வார்கள். காவல்துறை கண்காணிப்பாளர் மூலமோ அல்லது குற்றத்துறை நடுவர் நீதிமன்றம் மூலமோ அல்லது உயர்நீதிமன்ற நீதிப் பேராணை உத்தரவின் மூலமோ பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையைக் கூட நிறுத்தக் குறிப்புடை வழக்கு என்று காவல் துறையினர் முடித்துக் கொள்வார்கள். மேற்கண்டவாறு நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு காவல்துறையை நம்புவது பயனற்றது. அச்சமயங்களில் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு குற்ற இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு *200*-ன் கீழ் குற்றமுறையீடு மூலம் குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனி வழக்கு தொடுக்க வேண்டும்.

சில சமயங்களில் ஒரே சம்பவத்தில் இரு தரப்பினருக்கும் பாதிப்புகள் ஏற்படுவது உண்டு. அப்பொழுது ஒரு தரப்பினரின் புகாரை மட்டும் பதிவுசெய்து கொண்டு மற்றொரு தரப்பினரின் புகாரை பதிவு செய்ய காவல்துறை மறுப்பதுண்டு. அப்படியே பதிவு செய்தாலும் புலனாய்வுக்குப் பிறகு அதை நிறுத்தக் குறிப்புடை வழக்கு என்று முடித்துக் கொள்வார்கள். இத்தருணங்களில் குற்ற இயல் நடைமுறைச் சட்டம் பிரிவு *200*-ன் கீழ் குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் எதிர் வழக்காக (Counter case) தனி வழக்கு தொடுக்க வேண்டும்.

★ சம்பவம் நடந்த எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்திலும் அல்லது வேறு எந்த காவல் நிலையத்திலும் முதல் தகவல் அறிக்கை தரலாம். புறக்காவல் நிலையத்தில் தரப்படும் தகவல் முதல் தகவல் அறிக்கை அல்ல. (1976 Cr. L.J 262)

★ காவல் நிலையத்தில் புகாரை பதிவு செய்ய மறுக்கும் போது கண்காணிப்பாளருக்கு பதிவு அஞ்சலில் அனுப்பும் புகார் தகவல் அறிக்கையாக கருதப்படும். (1976 LW. Cr. P2)

★ சம்பவத்தை நேரில் பார்க்காத நபர் தான் கேட்டறிந்த விவரங்களைக் கொண்டு முதல் தகவல் அறிக்கை தரலாம்.

(A.I.R. 1973 SC. 491), (A.I.R. 1970 SC. 1305)

★ காயப்பட்ட நபர் விழுந்து கிடப்பதாக தொலைபேசி மூலம் தரப்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவரமான செய்தி முதல் தகவல் அறிக்கைக்கு அடிப்படை ஆகிறது. (1969) 3 SCC. 730.

★ உண்மைதான் என உறுதி செய்யப்பட்ட விரல் ரேகை பதித்த அசல் தந்தி முதல் தகவல் அறிக்கைக்கு அடிப்படை ஆகிறது. (1933) 35 PUNJ. L.R. 363

★ குற்றங்களை புலனாய்வு செய்வதற்கு அரசைத் தூண்டுவதே முதல் தகவல் அறிக்கை ஆகும். A.I.R. (1996) SC 977

★ முன் விரோதம் கொண்டோ அல்லது கெட்ட எண்ணம் கொண்டோ அது எதுவாக இருந்தாலும் ஒரு நபர் கொடுக்கும் புகாரை பதிவு செய்ய வேண்டும். (1987) 1 SCC 258.

★ முதல் தகவல் அறிக்கையில் எல்லா விவரங்களும் இருக்க வேண்டுமென்று எதிர் பார்ப்பது தவறு. A.I.R. (1988) SC 628.

★ முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளியின் பெயர் இல்லை என்பதால் தகவல் அறிக்கை உயிரற்றதாகி விடாது.

A.I.R. (1971) SC. 1064.

★ முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளிகளின் பெயர் இல்லை என்றால் புலனாய்வின் போது எடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் பெயர் தெரியவந்தால் அது கூடுதல் முதல் தகவல் அறிக்கை என்று கொள்ளல் ஆகாது. 1996 SC (cr.) 421.

★ ஒரு சம்பவத்தில். குற்றம் சுமத்தப்பட்டவரும் தனக்கு எதிராக பிறர் குற்றம் இழைத்ததாக காவல் துறையிடம் முதல் தகவல் அறிக்கை தரலாம். A.I.R. (1966) S.C. 119

★ ஒரு சம்பவத்திற்கு ஒரே முதல் தகவல் அறிக்கை தான்உண்டு. A.I.R. (1958) M.P. 380.

★ முதல் தகவல் அறிக்கை தாமதத்திற்கான காரணம் போதுமான அளவு சொல்லப்பட வேண்டும். A.I.R. (1973) SC. 501.

★ முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்வதற்குத் தாமதமாகி அத்தாமத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றால் அம்முதல் தகவல் அறிக்கை அதன் மதிப்பை இழக்கிறது.

(1990) Cr. L.J. 850. (ACC)

★ கால தாமதத்திற்கான காரணம் சொல்லப்பட்டிருந்தால் முதல் தகவல் அறிக்கை சந்தேகத்திற்கு உரியதல்ல. A.I.R. (1974) SC 606.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ காவல் நிலையத்திற்கு இரண்டு மைல் தொலைவில் நடந்த சம்பவம் பற்றி *20* மணி நேரம் கழித்து பதிவு செய்யப்படும் முதல் தகவல் அறிக்கை சந்தேகத்திற்குரியது. A.I.R. (1973) SC. 501

**பிடியாணை வேண்டும் குற்றங்களில் முதல் தகவல் அறிக்கை**

பிடியாணை வேண்டும் குற்றங்களில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதைப் பற்றி சென்னை காவலர் நிலை ஆணைகள் கட்டளை *583* வழிவகை செய்கிறது. இவ்வழக்கு தொடர்பான புகாரை காவல் நிலைய பொது நாட்குறிப்பு (GENERAL DIARY) புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும், புகாரை பெற்றுக் கொண்டதற்கு படிவம் 100-A ன் படி புகார் கொடுத்தவருக்கு ரசீது தர வேண்டும்.

★ காவல் நிலைய பொறுப்பு அதிகாரிக்கு தெரிவிக்கப்படாமல் தினசரி நாட்குறிப்பில் காவலரால் பதிவு செய்யப்படுபவை முதல் தகவல் அறிக்கையாகாது. A.I.R. (1973) SC.1

**2. ஒருவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் என்ன செய்வது?**

**முதல் தகவல் அறிக்கையின் விவரங்களை எவ்வாறு தெரிந்துகொள்வது. அதன் நகலை எவ்வாறு பெறுவது ?**

உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைக் காரணம் காட்டியோ அல்லது நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாகச் சொல்லியோ ஒருவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படலாம். சில சமயங்களில் ஒருவரை அலைக் கழிப்பதற்காகவும், அச்சுறுத்துவதற்காகவும், அவரது இயல்பான அன்றாட செயல்பாடுகளை முடக்குவதற்காகவும் காவல்துறையினர் தாமாகவே ஒரு புகாரை தயார் செய்து, தங்களுக்கு வேண்டிய ஒரு நபரிடம் அதில் கையெழுத்துப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வது உண்டு. பதிவு செய்யப்படும் ஒவ்வொரு முதல் தகவல் அறிக்கையும் குற்றத்துறை நடுவர் மன்றத்திற்கு தாமதமின்றி அனுப்பி வைக்கப்படவேண்டும். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் சேர்க்கப்பட்ட உடனே ஒரு வழக்கறிஞர் துணை கொண்டு முதல் தகவல் அறிக்கையின் விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். விவரங்கள் முழுமையாக குறித்துக் கொள்வது நல்லது. மேலும் குற்ற இயல் நடைமுறை விதிகள் பிரிவு *339 (1)*-ன் கீழ் மனு செய்து முதல் தகவல் அறிக்கையின் அத்தாட்சி நகலை விரைவில் பெற வேண்டும். முதல் தகவல் அறிக்கையின் விவரங்களைத் தெரிந்து கொள்வது அல்லது அதன் அத்தாட்சி நகலைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(Certified Copy) பெறுவது பிணை மனு தாக்கல் செய்வதற்கும், முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்வதற்கும் அவசியமானதாகும். ஒருவர் வேண்டுமென்றே பொய்யான தகவல்களுடன் புகார் கொடுத்திருந்தால், விசாரணைக்குப் பின் காவல்துறையினர் அந்த நபர் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு *182, 211*-ன் கீழ் வழக்கு பதிவு செய்யலாம்.

**முதல் தகவல் அறிக்கை உண்மை அல்ல என்று தள்ளுபடி செய்தல்**

ஒருவர் மீது காவல்துறை பொய்யான குற்றச் சாட்டுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால் அம்முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். பிடியாணை வேண்டும் குற்றங்கள் அல்லது பிடியாணை வேண்டாக் குற்றங்கள் எதுவும் நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை வெளிப்படுத்தவில்லையென்றால் ஒருகுடிமகன் அலைக்கழிக்கப்படுவதை தடுப்பதற்காக குற்ற இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு *482*-ன் கீழ் உயர்நீதி மன்றத்தில் முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்யக் கோரலாம். அல்லது இந்திய அரசியல் சட்டம் பிரிவு *226*-ன் கீழ் புலனாய்வை தள்ளுபடி செய்யக்கோரி உயர்நீதிமன்றத்தில் செயல் உறுத்தும் நீதிப் பேராணை தாக்கல் செய்யலாம். இதற்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உடனே அதன் அத்தாட்சி நகலை பெற்றுக் கொள்ள வேண்டும்.

★ முதல் தகவல் அறிக்கை ஒரு பொது ஆவணம், முதல் தகவல் அறிக்கையின் அத்தாட்சி நகலை குற்றவாளி பெறுவதற்கு உரிமையுடையவர். (1992) Cr. L.J. 2377 (GUJ)

★ குற்ற இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு *482*-ன் படி உயர்நீதிமன்றம் தனது உள்ளியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்யலாம். (1975) Cr. L.J. 687.

★ பிடியாணை வேண்டும் குற்றங்கள் எதுவும் நடந்ததாக முதல் தகவல் அறிக்கை வெளிப்படுத்தவில்லை என்றால் நீதிமன்றம் முதல் தகவல் அறிக்கையை தள்ளுபடி செய்யலாம்.

A.I.R.(1992) SC.949.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 3. மாதிரிப்படிவங்கள்

## மாதிரிப் படிவம் -1

### காவல் நிலையத்தில் தரும் புகார்

அனுப்புதல்      பெறுதல்

........................................   உயர்திரு. உதவி ஆய்வாளர்

........................................   அவர்கள்,

........................................   ....................................காவல் நிலையம்,

........................................   ........................................

ஐயா,

பொருள் : ______________ தேதியில் ......................மணிக்கு ........................................ இடத்தில் .............................. நடந்த சம்பவம் பற்றிய புகார் மனு.

நான் ................................ அன்று ..............................மணிக்கு எனது வீட்டில் இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது என்னுடன் எனது மனைவி ..................................., எனது தம்பி .................................... ஆகியோர் இருந்தனர். அப்போது எனது வீட்டு வாசலில் ஒரு ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து காக்கிச்சட்டை அணிந்த .................... என்ற காவலரும் (காவலர் எண் ..................), .................... என்ற காவலரும் (காவலர் எண் ..................), மற்றும் சாதாரண உடையில் இருந்த அடையாளம் தெரிந்த ஆனால் பெயர் தெரியாத இரண்டு பேரும் எனது வீட்டிற்குள் திபு திபுவென நுழைந்தனர். அனைவரும் கையில் லத்தி வைத்திருந்தனர். யார்டா "X" என்று கேட்டனர். அது நான்தான் என்றேன். "நீ மந்திரிக்கு எதிரா கூட்டம் போட்டு பேசுறியா?. என்று கேட்டு ______________ என்ற காவலர் லத்தியால் எனது தலையில் அடித்தார். அடியிலிருந்து தப்பிக்க நான் ஒதுங்கியபோது அடி எனது இடது கண் புருவத்தில் பட்டு காயம் ஏற்பட்டது. அதே நேரத்தில் .......................... என்ற காவலர் தனது லத்தியால் எனது முகத்தில் குத்தியதால் அடி எனது மூக்கில் பட்டு ரத்தம் வழிந்தது. "ஏன் என்னை இவ்வாறு அடிக்கிறீர்கள். நான் ______________ இயக்கத்தின் கிளைச் செயலாளர்" என்று சொன்னேன். உடனே சாதாரண உடையில் இருந்த மற்ற இருவரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்களது பூட்ஸ் காலால் என்னை மாறி மாறி எட்டி உதைத்தனர். மேலும் எனது சட்டையில் இருந்த ரூ. 450/- ஐ .................................... என்ற காவலர் எடுத்துக்கொண்டார் .................................... என்ற காவலர் வாட்சைக் கழற்றிக் கொண்டார். பிறகு என்னை வலுக்கட்டாயமாக போலீஸ் ஜீப்பில் (டிராக்ஸ் வேன் எண் ***********) ஏற்றி ........................ காவல் நிலையம் அழைத்துச் சென்று எனது உடைகளைக் களைந்து விட்டு ஜட்டியுடன் லாக்கப்பில் அடைத்து வைத்தனர். எனது மூக்கில் ரத்தம் வழிந்து கொண்டே இருந்தது என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கேட்ட போது மீண்டும் என்னை அந்த இரண்டு காவலர்களும் அடித்து உதைத்தனர். அதன் பிறகு எனது மனைவி எனது வழக்கறிஞருக்கு செய்தி சொல்லி அனுப்பிய பிறகு எனது வழக்கறிஞர் வந்த போது, அவரை சந்திக்க அனுமதி மறுத்து விட்டனர். பிறகு என் மீது இந்திய தண்டனை சட்டம் .................................... பிரிவுகளின் கீழ் பொய் வழக்குப் பதிவு செய்து .................................... தேதியில் .................................... நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். அதன் பிறகு நான் பிணையில் வெளிவந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றேன்.

மேற்கண்ட நான்கு பேரும் எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, பணத்தையும் வாட்சையும் அபகரித்து, என்னைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர். எனவே எதிரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி தங்களிடம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேதி : இப்படிக்கு

நாள் : தங்கள் உண்மையுள்ள

**மாதிரிப் படிவம் -2**

குற்ற இயல் நடைமுறைச் சட்டம் பிரிவு *154 (3)*-ன் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பும் மனு (பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனுப்புதல் பெறுதல்

........................................ காவல்துறை கண்காணிப்பாளர்

........................................ அவர்கள்.

........................................ ........................................

........................................ ........................................மாவட்டம்.

ஐயா,

பொருள் : குற்ற இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு *154 (3)* கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தல்.

*1.* ........................ இடத்தில் ................ தேதியில் ................ மணிக்கு நடந்த சம்பவம் பற்றி நான் ................ தேதி ................மணிக்கு ................காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களிடம் ஒரு புகார் கொடுத்தேன்.

*2.* சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ய மறுத்துவிட்டார் *(மறுத்ததற்கான காரணத்தை விளக்கவும்)* குற்றவாளிகள் கடுமையான குற்றங்களைச் செய்துள்ளனர். *(2,3 வரிகளில் குற்றச் செயலை விவரிக்கவும்)*

*3.* முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாததால் நான் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், இவ்வழக்கை, தாங்களே புலனாய்வு செய்யவோ அல்லது தங்களுக்கு கீழ் உள்ள காவல் அதிகாரி ஒருவர் புலனாய்வு செய்யவோ, இதில் எது பொறுத்தமானதோ அவ்வாறு செய்ய தங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

இடம் :

நாள் :

இணைப்பு : காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் நகல்.

**2. கைது** (Arrest)

கைது என்ற சொல்லுக்கு சட்ட ரீதியான வரையறை அல்லது விளக்கம் எதுவும் சொல்லப்படவில்லை. நீதிமன்ற உத்தரவிற்கு கீழ்படியச் செய்வதற்காகவோ, குற்றம் புரிவதை தடுப்பதற்காகவோ, குற்றச்சாட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது சந்தேகத்திற்கு உள்ளானவர் நீதிமன்றத்தின் முன் வந்து பதில் அளிக்கும்படி செய்வதற்காகவோ ஒருவரது உடற் சுதந்திரத்தை உரிய அதிகாரம் உள்ளவர் கட்டுப்படுத்துதல் கைது என்று சொல்லப்படுகிறது.

குற்றம் செய்தவர்களை, அவர்கள் மீது புகார் கொடுக்கப்படும் பட்சத்தில் நீதி மன்றத்தின் மூலம் தண்டிப்பதற்காகவும் மேலும் அவர்கள் தொடர்ந்து அவ்விதமான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுவதை தடுப்பதற்காகவும் அந்நபர் கைது செய்யப்படுவதாக சொல்லப்படுகிறது.

**தடுப்புக்காவல்** (Detention)

விசாரணை என்ற பெயரில் ஒரு நபரை காவல்நிலையத்தில் அடைத்து வைப்பதை நீங்கள் அடிக்கடிகேள்விப்பட்டிருப்பீர்கள். கைதுக்கும், ஒருவரை காவல் நிலையத்தில் அடைத்து வைப்பதற்குமான காரணங்கள் பலருக்குத் தெரிவதில்லை.

ஒரு நபரைக் கைது செய்யாமல் விசாரணைக்காக மட்டும் காவல் நிலையத்தில் அடைத்து வைப்பதற்கு இந்தியாவில் உள்ள எந்த ஒரு காவல் அதிகாரிக்கும் அதிகாரம் கிடையாது.

ஒரு நபரைக் கைது செய்வதற்கு காவல் நிலைய அதிகாரிக்குள்ள அதிகாரம் பற்றி குற்ற இயல் நடைமுறைச் சட்டம் பிரிவு *41*-ன் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது.

*1.* ஒரு நபருக்கு எதிராக நியாயமான புகார் கொடுக்கப்பட்டிருந்தால் அல்லது

*2.* அந்தநபருக்கு எதிராக நம்பக்கூடிய தகவல்களை பெற்றிருந்தால் அல்லது

*3.* அந்நபர் மீது நியாயமான சந்தேகம் இருந்தால் அல்லது அந்நபர் பிடியாணை வேண்டாக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருந்தால் அவரை அக்காவல் நிலைய அதிகாரி கைது செய்யலாம்.

மேற்கண்ட அடிப்படை எதுவுமின்றி ஒரு நபரைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவோ அல்லது காவல் நிலையத்தில் அடைத்து வைக்கவோ கூடாது. ஆனால் சில சமயம் ஒரு குற்றத்தை புலனாய்வு செய்வதற்கு ஒரு சிலரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அடைத்து வைக்கிறார்கள். ஒரு குற்றச்செயல் குறித்து ஒருவரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்று காவல் நிலைய அதிகாரிகள் கருதினால் கு.ந.மு.ச. பிரிவு *160*-ன் கீழ் அந்நபருக்கு எழுத்து மூலமான உத்தரவு கொடுத்த பிறகே காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். அவ்வாறு உத்தரவு அனுப்பிய பிறகும் ஒருவர் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றால் அவரை பலவந்தமாக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவோ அல்லது அழைத்துச் சென்று துன்புறுத்தவோ காவல் துறைக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. எழுத்து மூலமான உத்தரவு பெற்ற பிறகு ஒருவர் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் அவர் மீது இ.த.ச. பிரிவு *174*-ன் கீழ் பொது ஊழியரின் உத்தரவை மதிக்கவில்லை என்று குற்றம் சாட்டி குற்ற இயல் வழக்குத் தொடரலாம்

விசாரிக்கப்பட வேண்டிய நபர் *15* வயதுக்குட்பட்டவராக இருந்தாலோ அல்லது பெண்ணாக இருந்தாலோ அவர்களை விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாது. மாறாக அவர்களது வசிப்பிடத்திலேயே அவர்களை விசாரிக்க வேண்டும்.

கைது செய்யாமல் ஒரு நபரை சட்ட விரோதமாகக் காவல் நிலையத்தில் அடைத்து வைத்தால் தற்காப்புக் கருதி அத்தகைய தவறான தண்டனையை தடுப்பதற்கு அந்நபருக்கு உரிமை உண்டு. அல்லது சட்ட விரோத தடுப்புக் காவலை எதிர்த்து சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரி மீது உரிமையியல் மற்றும் குற்ற இயல் வழக்குகளை தொடுக்கலாம். மேலும் சட்ட விரோத தடுப்புக் காவலில் உள்ள ஒருவரை விடுவிக்கக் கோரி உறவினர்கள் மூலம் உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு நீதிப் பேராணை தாக்கல் செய்யலாம்.

ஒரு குற்றச் செயலில் சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே ஒருவர் கைது செய்யப்படுவதாக அறிவித்து அந்நபரை தடுப்புக் காவலில், காவல் நிலையத்தில் அடைத்து வைக்கலாம். வேறு எந்த நபரையும் காவல் நிலையத்தில் அடைத்து வைப்பதற்கு காவல் நிலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது.

★ கைது செய்யப்பட்டவரை *24* மணி நேரத்திற்குள் குற்றத்துறை நடுவர் முன்பு ஒப்படைப்பதை மிகவும் கவனத்துடன் செய்ய வேண்டும். (1981) 1 SCC 627

**ஒருவரை எவ்வாறு கைது செய்ய வேண்டும்?**

ஒரு நபரின் உடலைத் தொட்டோ அல்லது தடுத்தோ அந்நபரைக் கைது செய்யலாம். *(கு.ந.மு.ச. பிரிவு 46)* கைது செய்யும் போது,. கைது செய்வதை பலவந்தமாக ஒரு நபர் தடுத்தாலோ அல்லது கைதாவதிலிருந்து தப்பிக்க முயற்சி செய்தாலோ அனைத்து வழிமுறைகளையும் கையாண்டு அந்நபரைக் கைது செய்யலாம். ஒரு நபரின் குற்றச் செயல்கள் பிடியாணை வேண்டாக் குற்றங்களாக இருந்தால் மட்டுமே அந்நபரை பிடியாணை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதுவுமின்றி காவல்துறை அதிகாரிகள் கைது செய்யலாம்

ஒரு நபர் பிடியாணை வேண்டும் குற்றங்களைச் செய்திருந்தால் நீதிமன்றம் பிடியாணையின்றி அந்நபரைக் காவல் நிலைய அதிகாரிகள் கைது செய்யக்கூடாது. பிடியாணையுடன் கைது செய்யும்போது பிடியாணையை பார்ப்பதற்கு அந்நபருக்கு உரிமை உண்டு. (கு.ந.மு.ச. பிரிவு *75)*

★ "நான் உங்களைக் கைது செய்கிறேன்" என்று சொல்லித்தான் ஒருவரைக் கைது செய்ய வேண்டும். (1974) 215 ASR 321

**எத்தகைய சூழ்நிலையில் ஒருவரைக் கைது செய்யலாம்?**

*1.* ஒருவர் பிடியாணை வேண்டாக் குற்றம் செய்ததாக புகார் அல்லது தகவல் கிடைத்திருந்தாலோ அல்லது நியாயமான சந்தேகம் ஏற்பட்டிருந்தாலோ அல்லது பிடியாணை வேண்டாக் குற்றச் செயலில் சம்பந்தப்பட்டிருந்தாலோ,

*2.* பணியில் இருக்கும் காவல் அதிகாரியை பணி செய்ய விடாமல் தடுத்தாலோ அல்லது காவல் அடைப்பிலிருந்து தப்பிக்க முயற்சித்தாலோ அல்லது தப்பித்தாலோ,

*3.* ஒருவர் பிடியாணை வேண்டாக் குற்றத்தை செய்வதற்கு தயாரிப்பு செய்து கொண்டிருப்பதாக சந்தேகப்பட்டாலோ,

*4.* ஒரு காவல் நிலைய அதிகாரி முன்பு பிடியாணை வேண்டும் குற்றச் செயலை செய்து விட்டு ஒருவர் தனது பெயர் மற்றும் முகவரியை கொடுக்க மறுத்தாலோ அல்லது தவறான பெயர் முகவரியை கொடுத்தாலோ, அந்நபரைக் காவல் நிலைய அதிகாரி கைது செய்யலாம்.

**யார் கைது செய்யலாம்?**

*1.* காவல் நிலைய அதிகாரி (கு.ந.மு.ச பிரிவு *42)*

*2.* பொது மக்கள் : தன் முன்பு பிணை விடாக்குற்றம் மற்றும் பிடியாணை வேண்டாக் குற்றங்களில் ஈடுபடும் நபரை ஒரு பொது நபர் கைது செய்யலாம். (கு.ந.மு.ச. பிரிவு *43)*

*3.* குற்றத்துறை நடுவர் : தன் முன்பு, ஒரு குற்றச் செயல் நடைபெற்றால், குற்றச் செயலில் ஈடுபட்ட நபர்களைக் குற்றத் துறை நடுவர் கைது செய்யலாம். (கு.ந.மு.ச. பிரிவு *44)*

★ எதிர்காலத்தில் பிடியாணை வேண்டாக் குற்றத்தை ஒருவர் செய்வார் என்ற காரணம் காட்டி காவல் அதிகாரி ஒருவரைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைது செய்யக்கூடாது. (1962) Cr. L.J. 673.

★ சாதாரண சந்தேகத்தை வைத்துக் கொண்டு பிடியாணையின்றி ஒருவரைக் காவல் அதிகாரி கைது செய்ய முடியாது. A.I.R. 1965 Sc 1039

★ கைது செய்வதற்கு முன்பு ஒருவர் மீது நியாயமான சந்தேகம் இருக்க வேண்டும். A.I.R. 1943 Mad 207.

★ பிடியாணை வேண்டாக் குற்றங்களோ அல்லது பிடியாணை வேண்டும் குற்றங்களோ தனது முன்னிலையில் நடைபெற்றால் ஒரு பொது நபர் குற்றச் செயலில் ஈடுபடும் நபரைக் கைது செய்யலாம்.

A.I.R. 1960 Ori. 23, 1977 Cr. L.J. (NOC) 2 U.P.

★ சாதாரண சந்தேகத்தின் பேரில் ஒரு பொது நபர் ஒருவரைக் கைது செய்ய முடியாது. 1965 Ker L.J. 697

**கைதாகும்பொழுது என்ன செய்ய வேண்டும்?**

*1.* ஒருவர் கைது செய்யப்பட்டால் எதற்காக கைது செய்யப்படுகிறார் என்பதற்கான காரணங்கள் அவருக்கு முழுமையாக சொல்லப்பட வேண்டும். (கு.ந.மு.ச. பிரிவு *50*)

*2.* கைது செய்யப்பட்ட *24* மணி நேரத்திற்குள் அருகாமையிலுள்ள குற்றத்துறை நடுவர் முன்பு முன்னிலைப்படுத்த வேண்டும் (கு.ந.மு.ச. பிரிவு *57*)

*3.* பிணைவிடு குற்றங்களைச் செய்திருந்தால் பிணையில் விடுதலையாகலாம் என்பதை கைது செய்யப்பட்ட நபருக்கு தெரிவிப்பது காவல் அதிகாரியின் கடமையாகும் (கு.ந.மு.ச. பிரிவு *50*)

*4.* ஒருவர் கைது செய்யப்படும் பொழுது சமீபத்தில் உச்சநீதி மன்றம் கொடுத்த கீழ்கண்ட வழிகாட்டுதல்களை காவல் துறையினர் கடைபிடிக்க வேண்டுமென வலியுறுத்த வேண்டும்.

**காவல் துறைக்கு உச்சநீதி மன்றத்தின் 11 கட்டளைகள்**

A.I.R. 1997 SC 610)

*1.* **கைது மற்றும் விசாரணை செய்யும் காவல் நிலைய அதிகாரி தன் பெயர் மற்றும் அடையாளம் காண்பிக்கும் பட்டை (பேட்ஜ்) அணிய வேண்டும். விசாரணைசெய்யும் எல்லாக் காவல் துறை அதிகாரிகளின் பெயர் குறித்த பெயரேடு வைத்திருக்க வேண்டும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*2.* கைது செய்யும் காவல் நிலைய அதிகாரி உடனடியாக கைது விவரக் குறிப்பு (அரெஸ்ட் மெமோ) தயார் செய்து, அதில் கைது செய்தவுடன் குற்றம் சாட்டப்பட்டவரின் உறவினரோ அல்லது அந்த பகுதியில் வாழும் பிரமுகரிடமோ சாட்சி கையெழுத்துப் பெற்று, அதில் கைதியின் கையெழுத்து, கைது செய்யப்பட்ட நேரம், தேதி முதலியன குறிக்கப்பட வேண்டும்.

*3.* கைது செய்யப்பட்டபோது தயாரிக்கப்பட்ட கைது விவரக் குறிப்பில் (அரெஸ்ட் மெமோ) கைதியின் உறவினர் கையெழுத்து வாங்கப்படாதபோது, கைதியின் உறவினர் அல்லது அவர் நலனில் அக்கறை கொண்டவருக்கு எவ்வளவு துரிதமாக முடிகிறதோ அவ்வளவு விரைவாக தெரிவிக்கப்பட வேண்டும்.

*4.* கைது செய்யப்பட்டவர் வேறு மாவட்டத்தில் இருக்கும் பட்சத்தில் அந்த மாவட்டத்தின் சட்ட உதவி நிலையத்திற்கும். சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கும் கைது செய்யப்பட்ட நேரம், இடம் போன்ற தகவல்களைத் தந்தியின் மூலம் கைது செய்யப்பட்ட *8*லிருந்து *12* மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

*5.* தான் சம்பந்தப்பட்டவருக்கு தனது கைது பற்றி தெரிவிக்க தன்க்கு உரிமை உண்டு என்ற தகவலை கைது செய்யப்பட்டவருக்கு கைது செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி தெரிவிக்க வேண்டும்.

*6.* கைது செய்வது பற்றிய நாட்குறிப்பு (டைரி) எழுதப்பட்டு அதில் காவலில் வைக்கப்பட்ட இடம், கைது பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்ட கைதியின் உறவினர் பெயர், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரியின் பெயர் முதலியன இடம் பெற்றிருக்க வேண்டும்.

*7.* கைதி விரும்பும் பட்சத்தில் கைது செய்யப்பட்டபோது அவர் உடலில் உள்ள சிறிய மற்றும் பெரிய காயங்களைப் பரிசோதனை செய்து, ஒரு பரிசோதனை சான்றிதழ் தயார் செய்து அதில் கைதி மற்றும் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரியின் கையெழுத்திடப்பட்டு அதன் நகலை கைதிக்கு தர வேண்டும்.

*8.* கைது செய்யப்பட்டதிலிருந்து *48* மணி நேரத்திற்குள் ஒரு முறை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் குழு மூலம் கைதியை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

*9* கைது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகலை சம்பந்தப்பட்ட இலாகா குற்றத்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*10.* விசாரணையின் மொத்த நேரத்தில் இல்லாவிடினும் விசாரணையின் போது கைதி தனது வழக்கறிஞரை பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்.

*11.* எல்லா மாவட்டத் தலைமையகங்கள் மற்றும் மாநிலத் தலைமையகத்திலும், காவல்துறை தகவல் நிலையம் நிறுவப்பட்டு அங்கு கைது பற்றிய எல்லாத் தகவல்களும், கைது செய்யப்பட்டதிலிருந்து *12* மணி நேரத்திற்குள் கைது செய்த அதிகாரி தெரிவிக்க வேண்டும்.

★ மேற்கண்ட கட்டளைகளை கடைபிடிக்காத காவல்துறை அதிகாரிகள் மீது துறை நடவடிக்கை மேற்கொள்வதோடு அவர்களை நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காக தண்டிக்க வேண்டும். நீதிமன்ற அவமதிப்பு வழக்கை உயர்நீதி மன்றத்தில் தொடுக்க வேண்டும். A.I.R. 1997 SC 610.

★ கைது செய்யப்பட்டதற்கான காரணத்தைச் சொல்லாமல் ஒருவரைக் காவலில் வைக்கக் கூடாது. (இந்திய அரசியல் சட்டம் பிரிவு *22(1))*.

★ பிடியாணை வைத்துக் கொண்டு கைது செய்ய வந்தால் பிடியாணையை ஒருவருக்கு காட்ட வேண்டும். 46 M.L. 447

★ பிடியாணையில் உள்ள விவரங்கள் ஒருவருக்குத் தெரிவிக்க வேண்டும். I.L.R. 26 Cal 748

★ பிணை பெறுவதற்கோ அல்லது ஆட்கொணர்வு நீதிப் பேராணை தாக்கல் செய்வதற்கோ அல்லது வழக்கு விசாரணைக்கான தற்காப்பு சாட்சியங்களை தயாரிப்பதற்கோ, கைது செய்யப்பட்டதற்கான காரணத்தை ஒருவருக்குச் சொல்ல வேண்டும். A.I.R. 1956 ALL 56

★ ஆரம்பத்தில் கைது நியாயமானதாக இருந்தாலும் காரணங்கள் சொல்லப்படவில்லை என்றால் கைது அரசியல் சட்டத்திற்கு எதிரானது, செல்லாதது.

A.I.R. 1948 Pat 135

★ சட்டப்பிரிவுகளை மட்டும் சொல்வது போதுமானதல்ல.

A.I.R. 1956 Aii 56

★ காரணங்கள் சொல்லாமல் ஒருவரைக் கைது செய்து காவலில் வைப்பது சட்டவிரோதமாகும்.

A.I.R. 1969 SC 1014



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒரு நபரைத் தேடுதல்**

*1.* பிடியாணை பெற்ற பிறகு காவல் நிலைய அதிகாரி ஒரு நபரைத் தேடலாம்.

*2.* ஒரு வழக்கில் பிடியாணை வழங்கப்படலாம் என்றும் ஆனால் பிடியாணை பெறுவதற்கு முன்பு அந்நபர் தப்பித்து விடுவார் என்றும் காவல் அதிகாரி நம்பினால் அந்நபரைத் தேடலாம்.

*3.* ஒரு நபரைத் தேடும்போது அவர் இருக்கும் இடத்தில் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டால் அவ்விடத்தை உடைத்துக் கொண்டு காவல் அதிகாரி உள்ளே நுழையலாம்.

(கு.ந.மு.ச. பிரிவு *47*)

**முன்னெச்சரிக்கை கைது** (Preventive Arrest)

ஒருவர் பிடியாணை வேண்டாக் குற்றத்தை செய்வதற்கு திட்டமிட்டுக் கொண்டிருந்தால் அக்குற்றத்தைத் தடுப்பதற்கு வேறு வழியில்லாத நிலையில் முன்னெச்சரிக்கையாக அந்நபரை கு.ந.மு.ச. பிரிவு *151*-ன் கீழ் காவல் அதிகாரி கைது செய்யலாம்.

முன் எச்சரிக்கையாக கைது செய்யப்பட்ட ஒரு நபரைக் காவலில் வைப்பதற்கு அல்லது காவலை நீட்டிப்பதற்கு குற்றத்துறை நடுவர் அனுமதிக்கவில்லை என்றால் அவரை *24* மணி நேரத்திற்குமேல் தடுப்புக் காவலில் வைக்கக் கூடாது. (மேலும் விவரங்கள் எதிர் நோக்கு பிணையில் காண்க)

**கைதாகும்போது தவிர்க்க வேண்டியவை**

தற்காப்புக் கருவிகள், நாட்குறிப்பேடு, அதிகப் பணம், கைக்கடிகாரம், பிரசுரம், புத்தகங்கள், வெளியீடுகள் ஆகியவற்றை கைதாகும்போது உடன் வைத்திருப்பது கூடாது. பெண்களாக இருந்தால் நகை அணிந்து செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

**கைதாவதை எவ்வாறு தவிர்ப்பது ?**

கைது செய்யப்பட்டால் தான் காவலர்களால் கொடுமைப்படுத்தப்படலாம் என்று ஒருவர் கருதினால் அவர் ஏதேனும் ஒரு குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைவது நல்லது. அல்லது தலைமறைவாக இருந்து கொண்டு எதிர்நோக்குப் பிணை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். முன் எச்சரிக்கை கைதாக நேரிடும் என்றால் எதிர்நோக்குப் பிணை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் அல்லது காவல் அதிகாரிகள் கையில் சிக்காமல் இருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கைவிலங்கு (HandCuf)**

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகப் போராடும் அரசியல் கைதிகள், நோய்வாய்ப்பட்டவர்கள், வயதானவர்கள், இளம் குற்றவாளிகள், பெண் கைதிகள் ஆகியோரை விலங்கிடக் கூடாது.

★ கடுங்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்பதற்காக ஒருவருக்கு கைவிலங்கிடக் கூடாது. A.I.R. 1980 SC 1535

★ பொது நன்மைக்காக ஆர்ப்பாட்டம் செய்து தாமாக கைதாகும் போது, ஆர்ப்பாட்டம் நீதிமன்றத்தில் செய்திருந்தாலும் நல்ல கல்விப் பின்னணியில் உள்ள, தங்களை பொது சேவைக்காக அர்ப்பணித்துக் கொண்டவர்களை கைவிலங்கிடுவது இந்திய அரசியல் சட்டப் பிரிவு *21*-ஐ மீறிய செயலாகும்.

1990 SCC (Cr) 440, (1990) 3 SCC 119

★ இந்திய அரசியல் சட்டப்பிரிவு *21*-ஐ மீறி கைவிலங்கிட்டதற்காக இழப்பீடு வழங்க அளித்த தீர்ப்பளிப்பு சரியானதே.

1991 SCC (Cr) 656, 2 SCC 373

★ விசாரணைக் கைதிகளுக்கு கைவிலங்கிடுவது இந்திய அரசியல் சட்டம் பிரிவு *21*-ஐ மீறிய செயலாகும். A.I.R. 1995 SC 31

★ விசாரணைக் கைதிகளை சிறையிலிருந்து நீதிமன்றத்திற்கும், நீதிமன்றத்திலிருந்து சிறைக்கும் அழைத்துச் செல்லும்போது கைவிலங்கிடுவதற்கு சிறை நிர்வாகமோ அல்லது குற்றத்துறை நடுவரோ அனுமதி அளித்திருந்தாலும் கைவிலங்கிடுவதை நியாயப்படுத்த முடியாது. கைவிலங்கிடுவதற்கு அனுமதி இல்லாத போது ஒருவருக்கு கைவிலங்கிடுவது தெரிந்த பிறகும் அதைத் தடுக்க முயற்சி செய்யாத குற்றத்துறை நடுவரும், சிறை நிர்வாகமும், கைவிலங்கிட்ட காவலர்களும் கண்டனத்துக் குறியவர்கள். கண்டனக் குறிப்பு அவர்களது ஊழியர் கோப்பில் வைக்கப்பட வேண்டும். A.I.R. 1996 SC 2299.

**உடலைச் சோதனையிடுதல்**

1. கைது செய்யப்பட்ட ஒருவரின் உடலைச் சோதனையிடவும் அவரிடமுள்ள பொருட்களை கைப்பற்றவும் காவல் நிலைய அதிகாரிக்கு உரிமை உண்டு. அவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களுக்கு காவல் அதிகாரி ரசீது தர வேண்டும்.

2. பெண் கைதிகளாக இருந்தால் பெண் காவலர்கள்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களைச் சோதனையிட வேண்டும்.

★ ஒரு பெண் மற்றொரு பெண்ணால்தான் சோதனை செய்யப்பட வேண்டும். A.I.R. 1962 SC 1189.

**மருத்துவச் சிகிச்சை**

1. கைது செய்யப்பட்ட ஒரு நபரை மருத்துவ பரிசோதனை செய்வதன் மூலம் குற்றத்திற்கான ஆதாரங்கள் கிடைக்குமென காவல் நிலைய அதிகாரி கருதினால் அந்நபரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தலாம்.

2. கைது செய்யப்பட்ட நபரும் தான் குற்றம் எதுவும் செய்யவில்லை என்று நிரூபிப்பதற்கு மருத்துவ பரிசோதனை அவசியம் என்று கருதினால் அவர் தன்னை மருத்துவ பரிசோதனை செய்யக்கோரலாம்.

3. கைது செய்யப்பட்ட நபருக்கு காயம் ஏற்பட்டிருந்தால் தன்னை மருத்துவ சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும் என்று காவல் நிலையத்தில் முறையிட்டு, விவரக் குறிப்பு பெற்றுக் கொண்டு மருத்துவமனையில் சேர்ந்து உடனடி சிகிச்சை பெற வேண்டும்.

4. மருத்துவ சிகிச்சை தருவதற்கு காவல்துறை ஏற்பாடு செய்யவில்லை என்றால், தான் குற்றத்துறை நடுவரிடம் முன்னிலைப்படுத்தப்படும் பொழுது காயத்தின் அளவு மற்றும் தன்மைகளைக் குறிப்பிட்டு ஒரு விவரக் குறிப்பை நீதிபதியிடம் கொடுத்து மருத்துவ சிகிச்சைக்கு அனுப்ப உத்தரவிடுமாறு கோர வேண்டும். (கு.ந.ச. பிரிவு *54)*

5. கைது செய்யப்பட்ட நபர் காவல் துறையினரால் சித்திரவதை செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டிருந்தால் பாதிக்கப் பட்ட நபர் எழுத்து பூர்வமான விபரக்குறிப்பு கொடுத்து காவல் துறையின் சித்திரவதையை நிரூபிப்பதற்கு தன்னை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்று குற்றத்துறை நடுவரிடம் வலியுறுத்த வேண்டும். (கு.ந.ச. *54)*

6. கைது செய்யப்பட்டவர் பெண்ணாக இருந்தால் அவரை ஒரு பெண் மருத்துவர் மட்டுமே பரிசோதிக்க வேண்டும்.

7. ஒரு குற்றச் செயலின் போது இரு தரப்பினருக்கும் கடுமையான காயங்கள் ஏற்படலாம். உடனடியாக சிகிச்சை அளிக்காவிட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். அச்சமயங்களில் காயம் அடைந்தவர் உடனடியாக அருகிலுள்ள அரசு மருத்துவமனையிலோ அல்லது தனியார் மருத்துவமனையிலோ சேர்ந்து சிகிச்சை பெற வேண்டும். சிகிச்சை தருவது மருத்துவரின் கடமையாகும். மேலும் அது பற்றி அம்மருத்துவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காவல் துறைக்கு தெரிவிக்க வேண்டும். அந்தந்த ஊர்களிலுள்ள, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் மருத்துவமனைகளை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

8. மருத்துவமனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற்றதற்கான மருத்துவச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்று பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். எதிரிகள் மீது வழக்கு தொடுப்பதற்கும் அல்லது ஒருவர் தன் மீதுள்ள வழக்கை எதிர்கொள்வதற்கும் அவை பெரிதும் பயன்படும்.

★ வழக்கை முறியடிப்பதற்கு மருத்துவப் பரிசோதனை அவசியம் எனக் கருதினால் ஒருவரை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். A.I.R. 1989 SC 378

★ மருத்துவப் பரிசோதனை கோரும் பொழுது வெளிப்படையான ஊறுகள் இல்லை என்று மருத்துவப் பரிசோதனையை மறுப்பது மோசமானதாகும். 1990 Cr. LJ. 1923

★ கைது செய்யப்பட்ட நபர் பிணையில் விடுதலையான பிறகு கூட மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தலாம். A.P. 1997 Cr. LJ. 1797, 1981 Cr. LJ. 125 Bom

**காவல் அடைப்பில் இருக்கும்போது எவ்வாறு நடந்துகொள்வது ?**

ஒருவர் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கருதி காவல்துறை அவரைக் கைது செய்து தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பார்கள். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை *24* மணி நேரத்திற்குமேல் காவல் அடைப்பில் வைக்கக்கூடாது. கைது செய்யப்பட்ட ஒருவர் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்படும் போது வழக்கின் புலனாய்வு தேவைக்காக அந்நபர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மீண்டும் காவல் அடைப்பில் ஒப்படைக்கப்படலாம். ஒரு வழக்கிற்குத் தேவையான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக அவ்வழக்கு பற்றிய விவரங்கள் தெரிந்த ஒருவரை விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லலாம். மேற்கண்ட நிலைமைகளில் ஒருவர் காவல் அடைப்பில் அதாவது காவல் நிலையத்தில் இருக்கும்பொழுது அந்நபருக்குரிய உரிமைகள் என்ன, காவல் நிலைய அதிகாரிக்கு உள்ள அதிகாரங்கள் என்ன, என்பதைப் பார்ப்போம்.

**1. அடையாளம் காட்டல்** (Identification)

கைதிகள் அடையாளம் காட்டும் சட்டம் *1920*-ன் படி காவல் அடைபபில் உள்ள ஒருவரைக் காவல் நிலைய அதிகாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ புகைப்படம் எடுக்கலாம்.

★ அடையாளங்கள் எடுக்கலாம் (விரல் ரேகை, கால் ரேகை) ஆனால், கீழ்க்கண்ட நிலைமைகளில்தான் மேற்கண்டவாறு செய்வதற்கு காவல்நிலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் உண்டு.

1. ஏற்கனவே கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. ஏற்கனவே ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்டவர்கள், மேலும் கூடுதலாக தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும்.

3. ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டவர் அவ்வழக்கின் புலனாய்வுக்கு அவரது புகைப்படம், அடையாளங்கள் தேவை என குற்றத்துறை நடுவர் உத்தரவு கொடுக்க வேண்டும்.

மற்ற சாதாரண சூழ்நிலைகளில் கைது செய்யப்பட்ட நபரை புகைப்படம் எடுக்க காவல் நிலைய அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது. நீதிமன்ற உத்தரவு இல்லாமல் புகைப்படம் எடுப்பதற்கும், ரேகை எடுப்பதற்கும் ஒரு காவல் நிலைய அதிகாரி முயற்சி செய்தால் அதைத் தடுக்க ஒருவருக்கு உரிமை உண்டு.

நீதிமன்ற உத்தரவின் பேரில் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு நபரைப் புகைப்படம் எடுத்திருந்தால் அவ்வழக்கிலிருந்து அந்நபர் விடுவிக்கப்படும் பொழுது புகைப்படத்தின் படச்சுருள், நகல்களை அழித்து விடவேண்டும். அல்லது அந்நபரிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

★ கைது செய்யப்பட்டவரின் மாதிரிக் கையெழுத்தையோ அல்லது கையொப்பத்தையோ பெறுவதற்கு சட்டத்தில் இடமில்லை.

A.I.R. 1969 Mani 22, A.I.R. 1979 Mad 85.

## 2. விசாரணை (Interrogation)

ஒரு வழக்கை புலனாய்வு செய்யும் காவல் அதிகாரி, அவ்வழக்கின் விவரங்கள் ஒருவருக்கு தெரியும் எனக் கருதினால் அந்நபரைச் சாட்சியாக அழைத்து விசாரிக்க கு.ந.ச. பிரிவு *161* அதிகாரம் வழங்குகிறது. ஒருவர்மீது குற்றம் சுமத்தப்படவில்லை என்றாலும் ஒருவர் கைது செய்யப்படவில்லை என்றாலும் அவரை ஒரு வழக்கு தொடர்பாக ஒரு காவல் அதிகாரி விசாரணை செய்யலாம். காவல் அதிகாரியின் நியாயமான கேள்விகளுக்கு அவர் பதில் சொல்லக்கடமைப்பட்டவர். ஆனால் ஒருவழக்கில் ஒருவரைச் சம்பந்தப்படுத்தி அவர்மீது குற்றம் சுமத்தும் வகையிலோ, உடந்தையாக்கும் விதத்திலோ கேள்விகள் கேட்டால் அதற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அத்தகைய சமயங்களில் வழக்கறிஞரை கலந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆலோசிக்கலாம். அச்சமயங்களில் வழக்கறிஞரை உடன் அழைத்து வர உரிமை உண்டு. வழக்கறிஞரை சந்திக்க தொலைபேசி மூலமோ அல்லது வேறு வகையிலோவாய்ப்புகள் தரப்பட வேண்டும். வழக்கறிஞரை சந்திக்க காவல் நிலைய அதிகாரிகள் அனுமதி மறுத்தால் அது சட்ட விரோதமாகும், இது குறித்து எழுத்து மூலமாக நீதிமன்றத்தில் புகார் கொடுக்க வேண்டும்.

காவல் நிலைய அதிகாரி விசாரணை செய்யும் பொழுது வெள்ளைத் தாளிலோ அல்லது ஏதேனும் அறிக்கையிலோ கையெழுத்துப் போடக் கூடாது. காவல்துறை மிரட்டி ஒரு அறிக்கையில் கையெழுத்துப் பெற்றால் அதை நீதிமன்றத்தில் ஒருவருக்கு எதிரான ஆதாரமாக பயன்படுத்தமுடியாது. ஆனால் ஒரு குற்றத்துறை நடுவர் முன்னிலையில் ஒரு அறிக்கையில் கையெழுத்துப்போட்டால் அதை ஒருவருக்கு எதிரான ஆதாரமாகப் பயன்படுத்த முடியும்.

குற்றத்தை ஒப்புக் கொள்வதற்கோ அல்லது உண்மையை தெரிந்துகொள்வதற்கோ காவல் துறையினர் மூன்றாம் தர முறைகளைப் பயன்படுத்தி ஒருவரை அடித்து, உதைத்து சித்திரவதை செய்து விசாரணை செய்கின்றனர். அவ்வாறு செய்வதற்கு எந்த நாட்டுக் காவல் துறைக்கும் எந்தச் சட்டமும் அதிகாரம் வழங்கவில்லை.

★ விசாரணையின் போது வன்முறையைப் பயன்படுத்தவோ, துன்புறுத்தவோ கூடாது. காவல்துறையிடமிருந்து விடுதலை பெறுவதற்கு ஒருவர் குற்றத்தில் தன்னை உடந்தையாக்கி கொள்வதற்கோ அல்லது அமைதியாக இருப்பதற்கோ இந்திய அரசியல் சட்டப்பிரிவு *20 (3)* ன் படி உரிமை உள்ளது.
1994 Cr. LJ. 3139

### 3. காவல்நிலைய சித்திரவதைகள்

எந்த ஒரு மனிதனையும் போலவே காவல் துறை ஊழியர்களும் சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்களே. காவல் அடைப்பில் உள்ள ஒருவருக்கு உணவளிக்கவும், தங்குவதற்கு இடமளிக்கவும், ஒவ்வொரு காவல் நிலைய அதிகாரியும் கடமைப்பட்டவர். மேலும் பெண்கள், சிறுவர்களைக் கையாளும்போது அவர்களை மிகவும் நாகரீகமாகவும், கண்ணியமாகவும் நடத்த வேண்டும். சட்ட விரோதச் செயலைச் செய்யும் ஒரு காவல் அதிகாரி அதற்கு பொறுப்பாவார். உடல் அல்லது உளவியல் ரீதியான சித்திரவதைகள் எதுவாக இருந்தாலும் அது சட்டவிரோதமாகும்.

ஒருவரிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக அவரை காயப்படுத்துவதோ, கொடுமைப்படுத்துவதோ இந்திய தண்டனைச் சட்டப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றமாகும். காயங்கள் ஏற்படுத்தினால் ஏழு ஆண்டு சிறையும், அதுவே கடுங்காயமாக இருந்தால் பத்து ஆண்டு சிறை தண்டனையும் விதிக்கலாம். விவரங்களையோ, உண்மைகளையோ பெறுவதற்கு முயலும்போது முரட்டுத்தனமாகவோ நடந்து கொண்டால் அது ஒருவரைத் தாக்க (ASSAULT) முயன்றதற்கான குற்றமாகும்.

சித்திரவதை செய்யும் காவல் அதிகாரி மீது இ.த.ச. பிரிவு *330* மற்றும் கு.ந.ச. பிரிவு *197*-ன் கீழ் குற்ற வழக்குத் தொடரலாம். எனவே ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டால்,

1. சித்திரவதை செய்தவரின் பெயர் மற்றும் காவலர் எண்ணைக் குறித்துக்கொள்ள வேண்டும்.

2. சித்திரவதை செய்யப்படும்போது முடிந்தால் நண்பர்களையோ, உறவினர்களையோ, வழக்கறிஞரையோ சந்திக்க முயல வேண்டும்.

3. ஒரு பதிவு செய்யப்பட்ட மருத்துவரிடம் காண்பித்து பரிசோதனை செய்து, காயத்தின் அளவு மற்றும் தன்மைகளைப் பற்றி சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டும்.

*4.* காவலர்களால் தாக்கப்பட்டதையும், காயம் பற்றியும் குற்றத்துறை நடுவரிடம் புகாய் செய்ய வேண்டும். அவர் மேலும் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைப்பார்.

சட்ட விரோதக் குற்றங்கள் செய்த ஒரு காவல் அதிகாரி மீது வழக்கு தொடுப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. வெற்றிகரமாக குற்ற வழக்குகளை தொடுப்பது எப்படி என்பது உண்மையில் பலருக்குத் தெரியாது. சித்திரவதை செய்த காவல் அதிகாரி பற்றி காவல் துறை ஆணையர் அல்லது கண்காணிப்பாளர் அல்லது காவல்துறை இயக்குனர் போன்ற உயர் அதிகாரிகளுக்கு உடனடியாக புகார் அனுப்ப வேண்டும். புகாரின் நகலை உள்துறை அமைச்சருக்கும் அனுப்ப வேண்டும். புகார் பற்றிய விவரம் செய்தி ஏடுகளில் வெளிவருவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரத்தில் குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனிப்புகார் மூலம் குற்ற முறையீடு தாக்கல் செய்ய வேண்டும்.

காவல் அடைப்பில் இருக்கும்பொழுது ஒருவரை அடித்துக் கொலை செய்து விடுவார்கள் என்ற அச்சம் இருக்குமேயானால், தான் தாக்கப்படும்பொழுது பலத்தைப் பயன்படுத்தி தற்காத்துக் கொள்ளலாம். ஒருவர் தான் தாக்கப்படுவதை தடுப்பதற்காக மட்டுமே தனது பலத்தைப் பயன்படுத்த வேண்டும். தான் கொலை செய்யப்படலாம் என்ற சூழ்நிலையில் தனது காப்புரிமையை (RIGHT OF PRIVATE DEFENCE) பயன்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னைத் தாக்குபவரை அவர் கொலை கூட செய்யலாம்.

★ கைது செய்யப்பட்ட நபரிடம் ஆயுதங்களும் இல்லை. தப்பிக்கவும் முயற்சி செய்யவில்லை என்றால் அவரை அடித்துக் கைது செய்வது சட்ட விரோதமாகும். 1997 All Cr. R. 488

★ காவல் பாதுகாப்பில் உள்ளவர் மோசமான முறையில் சாகடிக்கப்பட்டதால் சிபிஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. 1986 Cr. LJ. 1624

★ புலனாய்வு தேவைக்காக எந்த வகையில் சித்திரவதை செய்தாலும் அதை நியாயப்படுத்த முடியாது. காவல் நிலையத்தில் சித்திரவதை செய்வது இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் மனித உரிமைகளை மீறிய செயலாகும்.
1985 Cr. LJ. 974 (978) Guj.

**ஒரு இடத்தை சோதனையிடுதல் மற்றும் பொருட்களை கைப்பற்றுதல்.**

ஒருவரையோ அல்லது ஒருவருடைய இடத்தையோ காவல் நிலைய அதிகாரிகள் சோதனையிட்டு அங்குள்ள பொருட்களை கைப்பற்றலாம். நீதிமன்றப் பிடியாணை இல்லாமல் ஒரு இடத்தை சோதனையிடக் கூடாது. நீதிமன்றம் கொடுத்துள்ள பிடியாணையில் சொல்லப்பட்டுள்ள இடத்தை மட்டுமே காவல் நிலைய அதிகாரிகள் சோதனையிட முடியும். சோதனையிடுவதற்கு முன்பு பிடியாணையில் உள்ளவற்றை முழுமையாக படித்துக் காட்ட வேண்டும். ஒரு இடத்தைச் சோதனையிடும் பொழுது அருகாமையிலுள்ள இரண்டு நபர்களைச் சாட்சியாக வைத்து அவர்கள் முன்னிலையில்தான் சோதனையிட வேண்டும். சோதனையின்போது கைப்பற்றபட்ட பொருட்களின் பட்டியலை தயாரித்து, எந்தெந்த பொருட்கள், எந்தெந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது என்ற விவரங்களையும் குறிப்பிட்டு அப்பட்டியலில் சாட்சிகளின் கையொப்பம் பெற்று அதன் நகல் ஒன்றை பொருட்களின் சொந்தக்காரரிடம் கொடுக்க வேண்டும். சோதனையை பார்வையிடுவதற்கு அவரை அனுமதிக்க வேண்டும். சோதனையின் போது ஒருவர் சாட்சியாக இருப்பதற்கு மறுத்தால் அது இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு *187*-ன் கீழ் குற்றமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீதிமன்றத்திலிருந்து முறையான உத்தரவு எதுவும் இல்லாமல்

1. காவல் நிலைய அதிகாரிகள் ஒருவருடைய இடத்தில் நுழைவதற்கு முயற்சி செய்தால் அதை அவர் மறுக்கலாம்.

2. அவ்விடத்திலிருந்து செல்லுமாறு காவல் நிலைய அதிகாரிகளை கோருவதற்கு அவருக்கு உரிமை உண்டு.

*3.* காவல் நிலைய அதிகாரிகள் அவ்விடத்திலிருந்து செல்வதற்கு மறுத்தால் அவர்களை அகற்றுவதற்கு ஒருவர் நியாயமான அளவுக்கு பலத்தைப் பயன்படுத்தலாம். அவ்வாறு செய்வதற்கு இ.த.ச. பிரிவு *97* மற்றும் பிரிவு *99* அதிகாரம் வழங்குகிறது.

கைது செய்யப்பட்ட ஒரு நபரிடமிருந்து அணிகலன்களை தவிர்த்து பிற பொருட்களை காவல் அதிகாரிகள் கைப்பற்றலாம். அல்லது நீதிமன்ற பிடியாணையில் குறிப்பிட்டுள்ள ஒரு நபரிடமுள்ள பொருட்களையும் கைப்பற்றலாம். கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான ரசீதை பொருளுக்கு உரிய சொந்தக்காரரிடம் தர வேண்டும்.

கொலை, கொள்ளை போன்ற வழக்குகளில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்யவும் வழக்குக்கு ஆதாரமான பொருட்களை கைப்பற்றவும் தகுந்த காரணங்களைச் சொல்லி ஒரு காவல் நிலைய அதிகாரி பிடியாணை எதுவுமின்றி ஒரு இடத்தைச் சோதனையிடலாம்.

எப்பொழுதெல்லாம் காவல் நிலைய அதிகாரிகள் ஒருவரது பொருட்களைக் கைப்பற்றுகிறார்களோ அப்பொழுதெல்லாம் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கான ரசீதை கேட்டுக் பெற வேண்டும்.

- ★ வெளியீடுகளை கைப்பற்றுவதற்கான காரணம் பிடியாணையில் சொல்லப்பட வேண்டும். A.I.R. 1977 S.C. 202
- ★ குற்றம் சுமத்தப்பட்டவர் குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டால் வெளியீடுகளை கைப்பற்றுவதற்கோ அல்லது அழிப்பதற்கோ விசாரணை நீதிமன்றம் உத்தரவிட முடியாது. கைப்பற்றிய வெளியீடுகளை உரியவரிடம் ஒப்படைக்க உத்தரவிட வேண்டும் A.I.R. 1955 Mad 429
- ★ சோதனையிடுவதற்கும் பிடியாணை வழங்குவதற்குமான காரணங்களைச் சொல்ல வேண்டியது குற்றத்துறை நடுவரின் கடமையாகும். A.I.R. 1980 S.C. 185
- ★ பிடியாணையில் சொல்லப்படாத இடத்தைச் சோதனையிடக் கூடாது. 1989 Cr. L.J. 1386 Bom



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ கைப்பற்றப்பட்ட பொருட்கள் பட்டியலில் காட்சிகள் கையொப்பம் பெற வேண்டும். 7 Cr. L.J. 411

**அலுவலக ஊழியர்கள் கைது செய்யப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

அரசுத் துறை, பொதுத்துறை அல்லது தனியார் துறை ஊழியர்கள் ஒரு குற்ற வழக்கு தொடர்பாகவோ அல்லது முன் எச்சரிக்கையாகவோ கைது செய்யப்பட்டாலோ அல்லது *24* மணி நேரத்திற்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டாலோ அல்லது அவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டாலோ அவரைத் தற்காலிக பணி நீக்கம் செய்வதற்கு நிலை ஆணைகள் அல்லது நடத்தை விதிகள் வழிவகை செய்தாலும் அவ்வாறு செய்வது அந்நிறுவனத்திற்குத் தான் நட்டத்தை ஏற்படுத்தும். சில குறிப்பிட்ட வழக்குகளைத் தவிர பெரும்பாலும் வழக்கின் தீர்ப்பு வந்த பிறகுதான் அதற்கேற்ப துறை நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள்.

ஆனால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பிறகு பிணையில் வெளிவருவதற்கு காலதாமதமானால் முன் அறிவிப்பு எதுவுமின்றி ஒருவர் விடுப்பில் இருப்பது, நடத்தை விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வழிவகுக்கும். எனவே கைதாகி சிறை சென்றவுடன் தன் மீது பொய் வழக்குப் புனைந்து சிறைக்கு அனுப்பி விட்டார்கள், அதனால் பணிக்கு வர இயலவில்லை என்பதை நிர்வாகத்திற்குத் தெரிவித்துவிட வேண்டும். நிலைமையைப் பொறுத்து வேறு காரணங்களைக் கூட சொல்லிக் கொள்ளலாம்.

★ ஒரு அலுவலக ஊழியர் கைது செய்யப்பட்டால் அவர் பணிக்கு வராத காலத்தை அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாகக் கருத வேண்டும். A.I.R. 1994 S.C. 552

**கைதான போது கைப்பற்றப்பட்ட பொருட்களை திரும்பப் பெறுவது எப்படி?**

ஒரு நபர் கைது செய்யப்படும் பொழுது காவல் துறையினர், வழக்குக்குத் தேவையான அல்லது தொடர்பான பொருட்களை கைப்பற்றிச் செல்வதோடு மட்டுமின்றி, வேறு சில பொருட்களையும் அள்ளிச் செல்கின்றனர். காவல் துறையினர் அவ்வாறு எடுத்துச் செல்லும் பொருட்களின் அளவு, எண்ணிக்கைக்கான பட்டியலை தயார் செய்து அவ்விடத்தில் உள்ள ஒருவரிடம் கையெழுத்துப் பெற்று, கைப்பற்றும் அதிகாரியின் கையொப்பமிட்ட நகல் ஒன்றை கொடுக்க வேண்டும். அவ்வாறு காவல் துறை செய்யவில்லை என்றால், பொருட்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடாது. காவல் துறையினரால் எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் வழக்கு தொடர்பான பொருட்களாக சேர்க்கப்பட்டு முதல் தகவல் அறிக்கையுடன் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். இல்லை என்றால் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி மீது குற்ற வழக்குப் பதிவு செய்யலாம். மேலும் நீதி மன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பொருட்களை குற்ற இயல் நடைமுறை சட்டப்பிரிவு *451*-ன் கீழ் மனு செய்து திரும்பப் பெறலாம்.

**3. காவல் துறையின் சட்ட விரோதச் செயல்கள்**

**சட்ட விரோத விசாரணைகள்**

விவசாயிகள், ஆலைத் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், மாணவர்கள், பெண்கள் உள்ளிட்ட பல்வெறு பிரிவுகளைச் சார்ந்தவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுறைமாகவோ சமூக, அரசியல், கலாச்சார இயக்கங்களுக்கு உதவி செய்கின்றனர். சிலஅமைப்புகளின் செயல்பாடுகளை முடக்குவதற்கு காவல் துறையும், மத்திய மாநில அரசுகளின் உளவுப் பிரிவும், மேற்கண்ட அமைப்புகளின் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் விசாரணை என்ற பெயரில் சட்ட விரோதமான முறைகளில் அச்சுறுத்தி வருகின்றனர். குறிப்பாக தமிழக காவல் துறையின் "கியூ" பிரிவு காவலர்களே இவ்வேலையை அதிகமாகச் செய்கின்றர். மேலும் மத்திய அரசின் உளவுப் பிரிவான ஐபி. பிரிவினரும் இவ்வேலையைச் செய்கின்றனர்.

**1. காவல் துறையின் சட்ட விரோத விசாரணைகள் எவ்வாறு அமைகின்றன?**

*1.* சில அமைப்புகளில் செயல்பட்டால், தொடர்பு வைத்திருந்தால் பாதிப்புகள் வரும் என்று நேரடியாக மிரட்டுவது.

*2.* சம்பந்தப்பட்டவர்கள் இல்லாத சமயங்களில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று குடும்ப உறுப்பினர்களை, பெண்களை மிரட்டுவது.

*3.* சம்பந்தப்பட்டவர்கள் வேலை செய்யும் அலுவலக அதிகாரிகளுக்கு, அவர்களைப் பற்றி ரகசியப் புகார்அனுப்பவது, அலுவலக அதிகாரியின் துணை கொண்டு நேரடியாக மிரட்டுவது.

*4.* தொடர்பு இல்லாத சம்பவங்களை இணைத்து, அது தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்று சொல்லி உளவுப் பிரிவு அலுவலகங்களுக்கோ அல்லது ரகசிய இடங்களுக்கோ அழைத்துச் சென்று மிரட்டுவது, அடித்துத் துன்புறுத்தி சித்தரவதை செய்வது.

*5.* தேடுதல் என்ற பெயரில் வீடுகளுக்குள் புகுந்து புத்தகங்கள், ஆவணங்களை எடுத்துச் செல்வது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**2. சட்ட விரோத விசாரணைகளை எவ்வாறு எதிர்கொள்வது?**

*1.* விசாரணை செய்யப்படும் காவல் அதிகாரியின் பெயர் மற்றும் முகவரியை கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு வருபவர் யார் என்பதற்கான அடையாள அட்டையை காட்டச் சொல்ல வேண்டும். மேற்கண்ட விவரங்களை தெரிவிப்பதற்கு மறுத்தால் அந்நபரிடம் பேச முடியாது என்று திருப்பி அனுப்பி விட வேண்டும்.

*2.* அமைப்பு, உறுப்பினர்கள். போராட்டங்கள் பற்றி விவரம் கேட்டால் அவ்வமைப்பின் செயலாளரை சந்திக்குமாறு திருப்பி அனுப்பி விட வேண்டும். மேலும் உளவுப் பிரிவினர் கேட்கும் விவரங்களைச் செல்ல முடியாது என்று மறுக்க வேண்டும். அவ்வாறு விசாரணைக்கு செய்வதற்கு சட்டப்படி அவர்களுக்கு உரிமை கிடையாது.

*3.* குடும்ப உறுப்பினர்களை விசாரிக்கும்போது மேற்கண்டவாறு பதில் சொல்வதற்கு பயிற்றுவிக்க வேண்டும்.

*4.* விசாரணைக்காக குறிப்பிட்ட இடத்திற்கு வர வேண்டும் என்ற வற்புறுத்தினால், வர முடியாது என்று மறுத்து உச்சநீதிமன்றத்தின் *11* கட்டளைகளை கடைபிடிக்குமாறு கோர வேண்டும்.

*5.* பலவந்தமாக அழைத்துச் சென்றால் அது சட்ட விரோதக்காவலாகும். சட்டவிரோதக் காவலிலிருந்து விடுவிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனடியாக செய்ய வேண்டும்.

*6.* சட்ட விரோதக் காவலின் போது சாதியைச் சொல்லி திட்டினாலோ, அல்லது சித்திரவதை செய்தாலோ அல்லது பணம்பொருட்களை அபகரித்துக் கொண்டாலோ அவர்கள் மீது சட்டப்படி குற்ற இயல் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்ய வேண்டும். மேற்கண்ட சட்டவிரோதச் செயலில் ஈடுபடும் காவல் அதிகாரிகளின் பெயர், விசாரணை செய்யப்பட்ட இடம் ஆகியவற்றை தெரிந்துகொள்ள வேண்டும்.

*7.* உளவுப் பிரிவினரின் புகாரின் பேரில் அலுவலக அதிகாரிகள் சில சமயம் தனியாகவோ, சில சமயம் புகார் கொடுத்த உளவுப் பிரிவு அதிகாரி முன்னிலையிலோ விசாரணை செய்வதுண்டு. அதுபோன்ற விசாரணைகளில் அலுவலக அதிகாரியின் எழுத்து மூலமான உத்தரவி இல்லாமல் விசாரணைக்குச் செல்லக்கூடாது. அதையும் மீறி விசாரணை செய்தால் அதற்கு பதில் சொல்லவோ ஆவணங்களில் கையெழுத்துப் போடவோ கூடாது. அலுவலக விதி முறைகளை கடைபிடித்தால் மட்டுமே அதற்கு ஒத்துழைக்க முடியும் என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*8.* சில சமயம் உள்ளூர் காவல் துறையின் துணை கொண்டு உளவுப் பிரிவினர் ஒருவரது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ளவர்களைத் தாக்கி பொருட்களை சூரையாடிச் செல்லும் சமயங்களில், அவ்வாறு ஈடுபட்டவர்களின் விவரங்களைத் தெரிந்து கொண்டு அவர்கள் மீது குற்ற இயல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**சட்டவிரோதக் காவல் அடைப்பும் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வதும்.**

கைது செய்யப்பட்ட ஒரு நபரை *24* மணி ரேத்திற்குள் குற்றத்துறை நடுவர் முன்பு முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவ்வாறு செய்யாமல் மேற்கொண்டு காவல் நிலையத்தில் வைத்திருந்தால் அது சட்ட விரோத அடைப்பாகும். சட்ட விரோத விசாரணைக்காக ஒருவரை வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்வதும் அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்பதைதெரிவிக்காமல் இருப்பதும் சட்ட விரோத காவல் அடைப்பாகும். ஒருவர் அவ்வாறு சட்ட விரோதக் காவல் அடைப்பில் வைக்கப்பட்டிருந்தால் உடனடியாக உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், தனது அமைப்பைச் சார்ந்தவர்களுக்கும் செய்தி அனுப்ப முயற்சிக்க வேண்டும். சட்ட விரோதக் காவல் அடைப்பில் வைத்துள்ள காவல் அதிகாரியின் பெயர், மற்றும் அடைக்கப்பட்டுள்ள இடத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். உறவினர்கள்,. நண்பர்கள் அல்லது தனது அமைப்பைச் சார்ந்தவர்கள் மூலம் ஒருவரை விடுவிக்கக் கோரி காவல் துறை உயர் அதிகாரிகளுக்கும் மாவட்ட ஆட்சியருக்கும் உள்துறை அமைச்சருக்கும் பதிவு அஞ்சல், தந்தி., பேக்ஸ் மூலம் தகவல் அனுப்ப வேண்டும். நேரிலும் முறையிட வேண்டும். மேலும் கைது செய்யப்பட்ட *24* மணி நேரத்திற்குள் குற்றத்துறை நடுவர் முன்பு முன்னிலைப்படுத்த வில்லை என்றாலோ அல்லது காவல் அடைப்பிலிருந்து விடுதலை செய்யப்படவில்லை என்றாலோ ஒருவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள காவல் நிலையத்தின் பெயர் மற்றும் காவல் அதிகாரியின் பெயர் ஆகிய விவரங்களுடன் உயர்நீதி மன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு நீதிப் பேராணை தாக்கல் செய்ய வேண்டும். காவல் துறையைச் சாராத ஒருவர் (ரெளடிகள்,. ஆதிக்கச் சக்தியினர்) மற்றொரு நபரை கடத்திச் சென்று அடை வைத்தாலும் காவல் துறைக்கு புகார் அனுப்புவதோடு ஆட்கொணர்பு நீதிப் பேராணையும் தாக்கல் செய்ய வேண்டும்.

★ காவல்நிலைய பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யாமல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழக்கும் பதிவு செய்யாமல் ஒருவரைக் காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருந்தால் ஆட்கொணர்வு நீதிப்பேராணை தாக்கல் செய்யலாம். சம்பந்தப்பட்ட காவல்நிலைய அதிகாரிக்கு தண்டத்தொகை விதிக்கலாம். 1984 Cr. L.J. 57 Punj.

★ கைது செய்யப்பட்டவருக்கு எதிராகப் புகார் எதுவும் இல்லை. பிடியாணை வேண்டாக் குற்றங்களைச் செய்து கொண்டிருப்பதற்கான சந்தேகத்திற்கு ஆதாரம் எதுவும் இல்லை. கைது நியாயத்திற்கு புறம்பானது சட்டபத்திற்கு எதிரானது. A.I.R. 1987 s.C. 1652

★ சட்டவிரோதக் கைதை எதிர்ப்பது குற்றமாகாது. A.I.R. 1930 Lah 348

★ எந்த அதிகாரத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதைத் தெரிந்து கொள்ள ஒருவருக்கு உரிமை உண்டு. அவ்வதிகாரம் அவருக்கு தெரிவிக்கப்படவில்லை என்றால் தண்டணையிலிருந்து தப்பிப்பதற்காக அவர் தனது பலத்தைப் பயன்படுத்தி தப்பித்துச் செல்லலாம். A.I.R. 1924 Mad 555

### *4.* பிணை (BAIL)

கைது செய்யப்பட்ட ஒரு நபர் நீதிமன்ற விசாரணை தொடங்கும் வரை விடுவிக்கப்படுவதை பிணை என்று சொல்லலாம். அல்லது கைது செய்யப்பட்ட நபர் ஒரு குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாவதை உறுதி செய்வதற்கு பிணையம் கொடுத்து அவரை விடுதலை செய்வதை பிணை என்று சொல்லலாம்.

பிணை மறுக்கப்பட்டால் நீதிமன்ற விசாரணை தொடங்கும் வரை காவல் அடைப்பிலோ அல்லது சிறையிலோ வைக்கப்படலாம். நண்பர்களின் அல்லது தான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் ஆலோசனையைப் பெறவும், வழக்கறிஞரை கலந்தாலோசிக்கவும் தற்காப்புக்காக சாட்சிகளைத்தேடிப்பிடித்து ஆதாரங்களைத் திரட்டவும். அன்றாட வேலைகளைத் கவனிக்கவும் பிணை ஒருவருக்குச் சுதந்திரம் அளிக்கிறது.

### குற்றங்களின் தன்மை

குற்றங்களை அவைகளின் தன்மைக்கேற்ப இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம் அவை

*1.* பிணைவிடு குற்றங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. பிணைவிடாக் குற்றங்கள்

குற்ற இயல் நடைமுறைச் சட்டம் முதல் அட்டவணையில் பிணைவிடுதல் (Bailable) என்று சொல்லப்பட்டுள்ளவை பிணைவிடு குற்றங்கள் எனப்படும். மற்ற குற்றங்கள் யாவும் பிணைவிடாக் (Non-Bailable) குற்றங்கள் எனப்படும்.

**இந்திய தண்டனைச் சட்டத்தின் பிணைவிடு மற்றும் பிணைவிடாக் குற்றப் பிரிவுகளின் பட்டியல்**

| வ. எ. | குற்றத்தின் தன்மை | பிணைவிடு குற்றப் பிரிவுகள் | பிணைவிடாக் குற்றப் பிரிவுகள் |
|---|---|---|---|
| 1. | குற்ற உடந்தை | - | 115,118,119 |
| 2. | அரசுக்கு எதிரான குற்றங்கள் | 129 130 | 121 முதல் 128 வரை |
| 3. | இராணுவம், கடற்படை விமானப்படை தொடர்பான குற்றங்கள் | 135 முதல் 138 வரை, 140 | 131 முதல் 134 வரை |
| 4. | பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள் | 143 முதல் 145 வரை, 147,148, 151 முதல் 158 வரை, 160 | 153 எ, 153 பி |
| 5. | பொது ஊழியர் தொடர்பான குற்றங்கள் | 166 முதல் 169 வரை, 171 | 170 |
| 6. | தேர்தல் தொடர்பான குற்றங்கள் | 171-எ முதல் 171-ஐ வரை | |
| 7. | அதிகாரம் பெற்ற பொது ஊழியரை அவமதித்தல் | 172 முதல் 190 வரை | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| 8. | பொய்ச் சான்று மற்றும் நீதிமுறைக்கு எதிரான குற்றங்கள் | 193,197 முதல் 221 வரை, 223 முதல் 225 பி வரை, 228,229 | 194,195,222 225 (பகுதி) |
| 9. | நாணயம் மற்றும் அரசு முத்திரைத்தாள் தொடர்பான குற்றங்கள் | 259 முதல் 263எ வரை | 231 முதல் 258 வரை |
| 10. | எடை மற்றும் அளவு தொடர்பான குற்றங்கள் | 164,165,166 | --- |
| 11. | பொதுநல பாதுகாப்பு, சுகாதாரம், நற்பாங்கு மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கும் குற்றங்கள் | 269 முதல் 294எ வரை | --- |
| 12. | சமயம் தொடர்பான குற்றங்கள் | 296 முதல் 298 | 295, 295எ |
| 13. | உடலுக்கு ஊறு விளைவிக்கும் குற்றங்கள் | 304எ, 309 | 302,303,304, 304பி,305 முதல் 308 வரை, 311 |
| 14. | நீதிவழுவுதல் விளைவிப்பது | 312,317,318 | 313 முதல் 316 |
| 15. | காயம் | 325,330,332, 334 முதல் 338 வரை | 326 முதல் 329 வரை 331, 333 |
| 16. | முறையின்றித் தடுத்தல் மற்றும் முறையின்றி சிறைப்படுத்துதல் | 339 முதல் 348 வரை | |
| 17. | வன்முறைத் தாக்குதலும் தாக்க முனைதலும் | 349 முதல் 358 | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | | |
|---|---|---|---|
| 18. | ஆட்கவர்தல், ஆட்கடத்தல் அடிமைப்படுத்துதல் மற்றும் வலுக்கட்டாயப் படுத்துதல் | 359 முதல் 363 வரை 370,374 | 363எ முதல் 368 வரை, 371, 372, 373 |
| 19. | பாலியல் குற்றங்கள் | 376 | 376 எ முதல் 376 டி வரை, 377 |
| 20. | சொத்துக்கள் குறித்த குற்றங்கள் | 385,388,389 403,404,417 முதல் 419 வரை 421 முதல் 435 வரை, 440 முதல் 448 வரை 451, 462 | 378 முதல் 384 வரை, 386,387 392 முதல் 402 வரை, 406 முதல் 416 வரை, 420 436 முதல் 439 வரை 449,450, 451 (பகுதி) 452 முதல் 461 வரை |
| 21. | ஆவணங்கள் குறித்த குற்றங்கள் | 465,469 முதல் 475 வரை, 477எ முதல் 489 வரை 489இ | 466 முதல் 468 வரை, 476,477 489எ முதல் 489 டி வரை |
| 22. | ஒப்பந்த மீறல் குற்றங்கள் | 491 | |
| 23. | திருமணம் தொடர்பான குற்றங்கள் | 494 முதல் 498 வரை | 493 |
| 24. | கணவனோ அல்லது கணவனுடைய உறவினர்களோ கொடுமைப்படுத்துதல் | | 498 எ |
| 25. | அவதூறு | 499, 502 | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| 26. மிரட்டுதல், அவமதித்தல் மன அமைதி குலைத்தல் | 503,504,508 முதல் 510 வரை | 505, 506 (1) 506 (2) |

| | |
|---|---|
| 1. பிரிவு 109, 110, 113, 114, 116, 117, 119, 120 | குற்ற உடந்தைக்கு ஏற்றவாறு பிணைவிடு குற்றமாகவோ அல்லது பிணைவிடாக் குற்றமாகவோ இருக்கும். |
| 2. பிரிவு 120 பி | சதித்திட்டத்தினால் விளையும் குற்றத்திற்கேற்ப பிணைவிடு குற்றமாகவோ அல்லது பிணைவிடாக் குற்றமாகவோ இருக்கும் |
| 3. பிரிவு 149, 150 | குற்றத்திற்கு ஏற்ப பிணைவிடு குற்றமாகவோ அல்லது பிணைவிடாக் குற்றமாகவோ இருக்கும். |
| 4. பிரிவு 511 | குற்றவாளி எந்தக் குற்றத்தைச் செய்ய முனைகிறாரோ அதற்கேற்ப பிணைவிடு குற்றமாகவோ அல்லது அதற்கு மாறாகவோ இருக்கும். |

பிணைவிடு குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் புலனாய்வுக்குத்தேவைப்படாத போது அவர் பிணையில் விடுதலையாவதற்கு சட்டப்படி உரிமையுடையவர். காவல் நிலையத்திலேயே அவர் பிணை பெறலாம். காவல் அதிகாரி அவருக்கு பிணை மறுக்கக் கூடாது.

பிணைவிடாக் குற்றங்களில் நீதிமன்றத்தின் மூலம் மட்டுமே பிணை பெற முடிகிறது. எனினும் ஒரு புகார் மீது மேற்கொண்டு விசாரணை தேவைப்படுவதாகக் காவல் நிலைய அதிகாரி கருதினால் கு.ந.ச. பிரிவு 437 (2) ன் கீழ் காவல் நிலைய அதிகாரியே பிணையில் விடலாம்.

**உடனடியாக எவ்வாறு பிணை பெறுவது?**

நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவதற்கு முன்பே காவல் அடைப்பில் இருக்கும்பொழுது ஒருவர் பிணையில் விடுதலையாகலாம். பிடியாணை எதுவுமின்றி பிணைவிடு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தால் காவல் நிலையத்திலேயே பிணையில் விடுதலையாகலாம். கு.ந.ச. பிரிவு 436ன் கீழ் பிணையாட்கள் எதுவுமின்றி சொந்த பிணை முறையிலேயே காவல் நிலைய அதிகாரி விடுவிக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**காவல் நிலையத்தில் என்ன செய்ய வேண்டும்.**

*1.* கைது செய்யப்பட்டுள்ளதற்கான காரணத்தை காவல் நிலைய அதிகாரியிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். கு.ந.ச. பிரிவு *50*-ன் கீழ் விவரங்களைச் சொல்ல வேண்டியது காவல் நிலைய அதிகாரியின் கடமையாகும். அதேபோல் பிணைவிடு குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தால் காவல் நிலையத்திலலே பிணையில் செல்வதற்கு உரிமையுடையவர் என்பதை காவல் நிலைய அதிகாரி சொல்ல வேண்டும். மேலும் பிணை விடு குற்றத்திற்காக கைது செய்யப்பட்டவர் காவல் நிலையத்தில் பிணை கோரினால் காவல் அதிகாரி அவருக்குப் பிணை வழங்க வேண்டும்.

*2* பிணை பெறுவதற்காக குற்றத்தில் தன்னை உடந்தையாக்கிக் கொள்ளும் வகையில் வாக்குமூலம் கொடுக்கக்கூடாது. பின்னர் அது அவருக்கு எதிராகவோ அமைந்து விடலாம்.

*3.* பிணை விடாக் குற்றங்களில் கைது செய்யப்பட்ட *24* மணி நேரத்திற்குள் குற்றத்தை நடுவர் முன்பு முன்னிலைப்படுத்தவில்லை என்றால் காவல் நிலைய அதிகாரிகள் கைதியை பிணையிலோ அல்லது சொந்தப் பிணை முறியிலோ கண்டிப்பாக விடுதலை செய்ய வேண்டும்.

*4.* காவல் நிலையத்தில் பிணையில் விடுவிக்கப்படவில்லை என்றால் நண்பர்களையோ, உறவினர்களையோ, வழக்கறிஞரையோ தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதற்கு உரிமைய உண்டு. பெயர், வயது, தந்தை பெயர், முகவரி, குற்ற எண், குற்றப் பிரிவுகள் முன்னிலைப்படுத்தவிருக்கும் நீதிமன்றம்,. பிணையாட்களின் விவரம், எந்த நேரத்தில் நீதிமன்றத்திற்கு கொண்டுவருவார்கள் போன்ற விவரங்களை வழக்கறிஞரிடம் தெரிவிக்கவும். வழக்கறிஞர் கிடைக்கவில்லை என்றால், நண்பர்கள் அல்லது உறவினர்களிடம் மேற்கண்ட விவரங்களைக் கூறி வழக்கிறஞர் மற்றும் பிணையாட்களை ஏற்பாடு செய்து கொண்டு நீதிமன்றத்திற்கு வரச் சொல்லவும். முன் கூட்டியே பிணை மனுவை தயாரிப்பதற்கு மேற்கண்ட விவரங்கள் அவசியமானதாகும். இவ்வாறு செய்வது ஒருவர் தேவையில்லாமல் சிறையில் அடைக்கப்படுவதை தவிர்க்க உதவும்.

★ பிணைவிடு குற்றத்தில், குற்றம் சாட்டப்பட்டவர் பிணைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து பிணை மனு கொடுத்தால் அதை நிராகரிப்பதற்கு காவல் நிலைய அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது. 1978 Cr. L.J.864



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நீதிமன்றத்தில் என்ன செய்ய வேண்டும்?**

பிணைவிடு குற்றங்களில் காவல் நிலையத்தில் பிணை கிடைக்கவில்லை என்றாலோ, பிணைவிடாக் குற்றங்களில் கைது செய்யப்பட்டிருந்தாலோ நீதிமன்றத்தில்தான் பிணை பெற முடியும். குற்ற எண், குற்றப்பிரிவுகள், முதல் தகவல் அறிக்கையின் விவரங்களைக் காவல் நிலையத்தில் தெரிவிக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் தெரிந்து கொள்ள வேண்டும்.

குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளாக இருந்தால் நடுவர் நீதிமனறத்தில் பிணை மனு தாக்ல செய்ய வேண்டும்.

அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் வழக்குகளாக இருந்தால் அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்ய வேண்டும்.

ஒரு வழக்கில் சில பிரிவுகள் குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தாலும் சில பிரிவுகள் அமர்வு நீதி மன்றத்தாலும் விசாரிக்க வேண்டியவை என்றால் அவ்வழக்கு அமர்வு நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்படும். அத்தகைய நிலையில் அமர்வு நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்ய வேண்டும்.

**பிணை மறுப்பு**

பிணைவிடாக் குற்றங்களாக இருந்தால் அரசு வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுத்த பிறகே பிணை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். கீழ்கண்ட காரணங்களைச் சொல்லி பிணை தரக் கூடாது என காவல் துறை தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கலாம்

1. வழக்கு விசாரணைக்கு வரமாட்டார்கள்.
2. சாட்சிகளையும், ஆதாரங்களையும் சீர்குலைக்க முயல்வார்கள்.
3. பிணையில் விடுதலை செய்தால் மேலும் குற்றமிழைப்பார்கள்.
4. காவல் விசாரண (Investigation) முடிவடையவில்லை.
5. வழக்கில் சம்பந்தப்பட் மற்றொரு குற்றவாளி தலை மறைவாகியுள்ளார்.

காவல் அடைப்பில் வைப்பதற்கான காரணங்கள் காவல் அறிக்கையிலிருந்து தெரிந்து கொண்டு அக்காரணங்களை மறுத்து பிணை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஒருவரின் படிப்பு, வேலை, சார்ந்திருக்கின்ற குடும்பத்தினர் பாதிக்கப்படுவார்கள் என்பதை எடுத்துக்கூறி பிணைபெற முயற்சிக்க வேண்டும்.

★ பிணைவிடு குற்றங்களில் பிணைக்கான தேவைகளை பூர்த்திசெய்து பிணை கேட்டால் குற்றத் துறை நடுவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுக்கக்கூடாதும். 1969 Mad L.w. (Cr. ) 88

★ நியாயமான ஒரு சட்டத்தின்படி இல்லாமல் வழக்கு முடியும் வரை பிணையில் விடமுடியாது என்று பிணை மனுவை தள்ளுபடி செய்வது தனி மனித சுதந்திரத்திற்கு விலங்கிடுவதாகும். 1986 Cr. L.J. 270

★ சாட்சிகளை பயமுறுத்தவோ, அச்சுறுத்தவோ வாய்ப்புகள் இருப்பதாகக் கருதினால் அதற்கான ஆதாரத்தை அரசு தரப்பில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தபட்சம் சாட்சிகளிடமிருந்து ஆணையுறுதிப் (Affidavit) பெற்று நீதிமன்றத்ல தாக்கல் செய்ய வேண்டும். 1966 Cr. L.J. 863

★ தலைமறைவாகிடலாம் என்று கருதினால் பிணை மறுக்கப்படலாம். குற்றம் சுமத்தப்பட்டவரின் கடந்த கால நடத்தையைக் கொண்டு தலைமறைவாவதை நிரூபிக்க வேண்டும். A.I.R. 1968 Bom 344

★ எந்திர கதியில் பிணை மனுவை தள்ளுபடி செய்யக்கூடாது. 1988 Cr. L.J. 938

★ கைதி தப்பிவிடுவார் என்ற காரணத்திற்காக பிணை விடு குற்றங்களில் பிணை மறுக்கக்கூடாது.
A.I.R. 1967 Cal 402/ 1966 Cr. L.J. 267.

★ முதல் தகவல் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்காக பிணை மறுக்கக்கூடாது. 57 Cal LT 448

**பிணை வழங்குதல்**

நிபந்தனைகள் எதுவும் அன்றியோ அல்லது சில நிபந்தனைகளின் பேரிலோ பிணை வழங்கப்படலாம். நிபந்தனைகள் கடுமையானதாக இருந்தால் நிபந்தனை தேவையில்லை என்று நீதிமன்றத்தில் வாதாடலாம். நிபந்தனையை நீக்குவதற்கு நீதிமன்றம் மறுத்துவிட்டால் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு விடுதலையாகலாம். அல்லது நிபந்தனைகளை ஏற்க முடியாது என்று சொல்லி சிறை செல்லலாம். அதன் பிறகு நிபந்தனையை நீக்கக் கோரி மேல் முறையீடு செய்யலாம். பிணை கிடைத்து விட்டால் சொந்தப்பிணை முறையில் விடுதலை செய்வதற்கு நீதிபதியிடம் முறையிட வேண்டும்.

★ பிணை மறுப்பதை விட பிணை கொடுப்பதே சட்டத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்கையாக இருக்க வேண்டும். 1967 Cr. L.J. 1704

★ சாட்சிகளை அச்சுறுத்துவதற்கும் புலனாய்வை இடையூறு செய்வதற்குமான சூழ்நிலை நிலவாத போது சிறைக்கு அனுப்புவதைவிட பிணையில் விடுவது அடிப்படை விதியாக இருக்க வேண்டும். A.I.R 1977 S.C, 2447

★ சொந்தப் பிணை முறியில், குற்றம் சுமத்தப்பட்டவரை விடுதலை செய்யலாம். 1991 Cr. L.J. 1176

★ பெண்கள், வயதானவர்கள், நோயாளிகளுக்கு பிணை வழங்குவது நீதிமன்றத்தின் கடமையாகும். 1986 Cr. L.J. 365

★ காவல் அடைப்பில் வைத்ததற்கான நோக்கம் நிறைவேறிவிட்டால் பிணை வழங்க வேண்டும். 1977 Cr. L.J. (NOC) 183 H.P.

★ காவல்துறை, சாட்சிகள் விசாரணையை தாமதப்படுத்தினால் பிணை வழங்க வேண்டும். A.I.R. 1967 S.c. 163

★ வரையறுக்கப்பட்ட நாட்களுக்குள் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால், பிணை மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் குற்றம் சுமத்தப்பட்டவரை விடுதலை செய்ய வேண்டும். 1982. Cr. L.J. 687, 1987 Cr. L.J. 645

**பிணையாட்கள்** (Surities)

1. பொருத்தமான பிணையாட்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வர வேண்டும்.

2. பிணையாட்கள் நீதிமன்றம் வரவில்லை என்றால் பிணை கிடைத்தாலும் விடுதலையாக முடியாது.

3. பிணையாட்கள் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். பிணையாட்களுக்கு நிரந்தர முகவரி, பிணைத் தொகையை ஈடு செய்யுமளவுக்கு போதுமான சொத்து இருக்க வேண்டும். பிணையாட்களின் குடும்ப அட்டை, வாடகை ரசீது, வரி ரசீது, நிலவரி ரசீது, சம்பளச் சான்றிதழ் அல்லது சம்பளச் சீட்டு, வருமான வரி ரசீது போன்ற ஆவணங்கள் இருப்பின் அவற்றை நீதிமன்றத்திற்கு எடுத்து வரவேண்டும்.

4. ஒரு குற்றவாளிக்கு குறைந்தது 2 பிணையாட்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. உறவினர்கள், நண்பர்களை பிணையாட்களாக கொண்டு வரலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிணையாட்கள் குற்றம் சுமத்தப்பட்டவர் வசிக்கும் பகுதியைச் சேர்ந்தவராக இருப்பது நல்லது. வேறு பகுதியைச் சேர்ந்தவராக இருந்தால் அப்பகுதி வட்டாட்சியரிடம் பிணைச் சான்றிதழ் பெற்று வரவேண்டும்.

6. பிணையாட்களோடு வைப்புத் தொகையும் செலுத்த வேண்டும் என்றால் அத்தொகையை, உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

நீதிமனறத்திலிருந்து பிணை ஆணை பெற்றுக் கொண்டு மாலை 5 மணிக்குள் சிறையில் ஒப்படைத்தால் அன்றே விடுதலை ஆகலாம்.

★ நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட விவரங்களின்படி, குற்றம் சுமத்தப்பட்டவர் தலைமறைவாக வாய்ப்பில்லை என்றால் சொந்தப் பிணை முறியில் (Own Bond) பிணை வழங்கலாம் A.I.R. 1977 S.C. 1360

★ சொந்த மாவட்டத்திலிருந்து பிணையாட்கள் கோருவது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது, சட்டவிரோதமானது.

ஒரு கொத்தனாரிடம். ரூ. 10,000 /.- த்துக்கு பிணையம் கோருவது மிகவும் அதிகம். ஆயிரம் ரூபாய்க்கு சொந்தப் பிணை முறையில் விடுதலை செய்யப்பட்டார். A.I.R. 1978 S.C. 1594

★ வைப்புத் தொகை கேட்டதற்கு சட்டத்தில் இடமில்லை. எனினும் பிணை முறியை ஏற்றுக் கொள்ளலாம். 1977 Cr. L.J. 405.

**பிணைமேல்முறையீடு**

1. குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் பிணை மறுக்கப்பட்டால் அமர்வு நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ மேல் முறையீடு செய்யலாம்.

2. அமர்வு நீதிமன்றத்தில் பிணை மறுக்கப்பட்டால் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம். கு.ந.ச. பிரிவு 439-ன் கீழ் உயர்நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்ய வேண்டும்.

3. மேல்முறையீட்டு மனுவில் போதுமான காரணங்களைச் சொல்வதோடு சிறப்புக் காரணங்கள் இருந்தால் அதையும் சொல்ல வேண்டும்.

4. மேல் முறையீட்டிலும் பிணை மறுக்கப்பட்டால் மூன்று நாட்கள் கழித்து மீண்டும் அதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

**பிணை நிபந்தனை நீக்கம்** ( Condition Relaxation)

நிபந்நதனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டால் 1 வாரம் அல்லது 10 நாட்கள் கழித்து நிபந்தனையை தனர்த்தக் கோரியோ அல்லது தள்ளுபடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யக்கோரியோ சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் மனு செய்ய வேண்டும். பிணை நிபந்தனை தள்ளுபடி செய்யப்பட வில்லையென்றாலோ அல்லது தளர்த்தப்படவில்லையென்றாலோ அமர்வு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து பரிகாரம் தேட வேண்டும்.

**பிணை நீக்கம்** (Cancelation of Bail)

சில சமயம் ஏற்கனவே வழங்கப்பட்ட பிணையை நீக்கக் கோரி காவல்நிலைய அதிகாரிகள் நீதிமன்றத்தில் முயற்சி செய்யக்கூடும். நம்பத்தகுந்த, போதுமான அடிப்படைக் காரணங்கள் இருந்தால் மட்டுமே பிணை நீக்கம் கோர முடியும். பிணையில் விடுவிக்கப்பட்ட நபருக்கு, பிணை நீக்கத்தை மறுப்பதற்கான வாய்ப்புத் தராமல் பிணை நீக்கம் செய்யக்கூடாது. பிணையில் விடுவிக்கப்பட்டவருக்குத் தெரிவிக்காமலோ அல்லது வாய்ப்புத் தராமலோ காவல்துறை, பிணை நீக்கத்திற்கு முயற்சி செய்தால் எச்சரிக்கையுடன் இருந்து அவர்களின் முயற்சியை முறியடிக்க வேண்டும்.

★ பிணை நீக்கத்திற்கு, குற்றம் சுமத்தப்பட்டவர் எந்த வகையில் சட்ட நடவடிக்கைகளில் குறுக்கிடுகிறார் என்பது கண்டிப்பாக நிரூபிக்கப்படவேண்டும்.
A.I.R. 1978 S.C. 1961, 1988 Cr. L.J. 1463 Bom

★ சாட்சிகளை அச்சுறுத்துவதற்கான வாய்ப்புகள் இருந்தால் பிணை நிக்கம் செய்யலாம். A.I.R. 1978 S.C. 179

★ சாட்சிகளை அச்சுறுத்துவார் என்ற யூகத்தில் பிணை நீக்கம் செயயக்கூடாது. 1979 Cr. L.J. (NOC) 35 Raj

★ சம்பந்தப்பட்ட நபருக்கு போதிய வாய்ப்புத் தராமல் பிணை நீக்கம் செய்யக் கூடாது. 1981 Cr. L.J. 299, 1986. S.C.C. (Cr) 543

**இடைக்காலப் பிணை** (Interim Bail)

சில சமயங்களில் பிணை கிடைப்பதற்கு அதிக நாட்கள் ஆகலாம். இடைப்பட்ட காலத்தில் சிறையில் உள்ளவரின் குடும்பத்தினர் திருமணம், திருவிழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளோ அல்லது துயரமான சம்பங்களோ நடம்கும்பொழுது அதில் கலந்து கொள்வதற்காக இடைக்காலப் பிணை மனு தாக்கல் செய்து பிணையில் வரலாம். குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் இடைக்காலப்பிணை மறுக்கப்பட்டால் அமர்வு நீதிமன்றத்திலும், அமர்வு நீதிமன்றத்தில் மறுக்கப்பட்டால் உயர்நீதிமன்றத்திலும் இடைக்காலப் பிணை மனு தாக்கல் செய்யலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

★ அவசியமான சில சூழ்நிலைகளில் இடைக்காலப் பிணை வழங்கலாம்.

1989 Cr. LJ. (NOC) 122 (Knt). (1988) 2 Crimes 23,1987 Cr. LJ. 1200 Pat

★ மனைவியின் உடல்நிலை மிக மோசமாக இருந்தபோது கணவருக்கு இடைக்காலப் பிணை வழங்கப்பட்டது.

1986 S.C.C. (Cr.) 543

**எதிர் நோக்குப் பிணை** (Anticipatory Bail **முன்ஜாமீன்**)

ஒரு குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு நபர், காவல் துறையினரால் தேடப்படலாம். முதல் தகவல் அறிக்கையில் அவர் பெயர் இருந்தாலும், இல்லை என்றாலும், கைது செய்வதற்கு காவல் நிலைய அதிகாரிகள் தேடினால் அமர்வு நீதிமன்றத்தில் கு.ந.ச. பிரிவு *438*ன்படி கீழ் எதிர்நோக்கு பிணை பெறலாம். எதிர்நோக்கு பிணை மறுக்கப்பட்டால் உடன் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யலாம்.

அரசாங்கத்தின் தவறான கொள்கை, நடைமுறைகளை எதிர்த்தும், உள்ளூர் ஆதிக்கச் சக்திகளின் சுரண்டல், கொலை, கொள்ளை, சமூக விரோதச் செயல்கள் மற்றும் தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்தும், சாலை, போக்குவரத்து, சுகாதாரம், மருத்துவ வசதி, குடிநீர், கல்வி போன்ற எண்ணற்ற தேவைகளுக்காகவும், பேரணி, பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், சாலைமறியல் போன்ற பல்வேறு வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுக்கும் சமயங்களில், சில போராட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு போராட்டங்கள் தடை செய்யப்படுவதும் நடைபெறுகிற போராட்டங்களை தொடர்ந்து நடத்துவதற்கு முற்படும்போது போராட்டத்தை நடத்த விடாமல் தடுப்பதற்கு முன் எச்சரிக்கைக் கைது என்ற பெயரில் காவல் துறையினர் பலரைக் கைது செய்து விடுகின்றனர். இதனால் போராட்டம் பற்றிய பிரச்சாரம் தடைபடுவதோடு, போராட்டமும் நடைபெறாமல் போகிறது. இத்தகைய சூழ்நிலையில் காவல் துறையினர் கைது செய்ய நேரிடும் என்று கருதப்படும் நபர்களுக்கு, அம்மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் குற்ற இயல் நடைமுறைச் சட்டம் பிரிவு *438*-இன் கீழ் மனு செய்து எதிர்நோக்குப்பிணை பெறவேண்டும்.

எதிர்நோக்குப் பிணை கோரும் நபர்களின் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், கைது செய்யப்படலாம் என்ற சந்தேகம் இருக்கும் பட்சத்தில் எதிர்நோக்குப் பிணை மனு தாக்கல் செய்யலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்நோக்குப் பிணை பெற்ற பிறகு முன் எச்சரிக்கை என்ற பெயரில் கைது செய்யப்படும் பொழுது, சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக விடுதலையாகலாம்.

எதிர்நோக்குப்பிணை உத்தரவில், "கைது செய்யப்படும் பட்சத்தில்" ( In the Event ofl Interest) என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி சில நிபந்தனைகள் விதிக்கப்படலாம். கைது செய்யப்பட்டு பிணையில் வரும்போது மட்டுமே அதை நடைமுறைப்படுத்தினால் போதும். காவல்துறை கைது செய்யாத பட்சத்தில் தாமதாகவே நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டியதில்லை. ஆனால் எதிர்நோக்குப் பிணை பெற்ற உடனே "கைது செய்யும் பட்சத்தில்" என்ற உத்தரவு இருந்தாலும்கூட ஒரு சிலர் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் தாமாகவே முன்னிலையாகி அவ்வுத்தரவின் நிபந்தனைகளை அமுல்படுத்துவது என்ற தவறைச் செய்கின்றனர். இதனால் சம்பந்தப்பட்டவர்களுக்கு தேவையற்ற அலைச்சலும் செலவும் ஏற்படுகிறது.

- ★ பிணை விடாக் குற்றம் செய்ததாக ஒருவரைக் கைது செய்யலாம் என்பதற்கு, நியாயமான காரணங்கள் இருந்தாலே எதிர்நோக்குப் பிணை பெறலாம். AIR1994 S.C.1775
- ★ முதல் தகவல் அறிக்கையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதற்காக எதிர்நோக்குப் பிணை மறுக்கக்கூடாது.

  1975 C.R. LJ 1315
- ★ முதல் தகவல் அறிக்கை தெளிவாக இல்லை என்றாலோ, குற்றச்சாட்டை நிலை நிறுத்துவதற்கான வாக்கு மூலங்கள் இல்லை என்றாலோ எதிர்நோக்குப் பிணை வழங்கலாம்.

  (1977) 79 Punj LR
- ★ பிடியாணை வேண்டும் குற்றங்கள், பிடியாணை வேண்டாக்குற்றங்கள் அல்லது பிணைவிடு குற்றங்கள், பிணைவிடாக் குற்றங்களுக்கும் எதிர்நோக்குப் பிணை வழங்கலாம். 1978 C.R. LJ 677
- ★ குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகும் எதிர்நோக்குப் பிணையின் பலன் தொடர்கிறது. 1979 C.R. LJ 1485

**விடுமுறை நாட்களில் பிணை பெற முடியுமா?**

ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் ஒருவரைக் கைது செய்து குற்றத்துறை நடுவர் முன்பு முன்னிலைப்படுத்தி, சிறையில் அடைக்கும் பொழுது உடனடியாக பிணையில் வரமுடிவதில்லை. இதனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாதாரண குற்றங்களுக்காக தேவையில்லாமல் சிறையில் அடைக்கப்படுவதுண்டு.

விடுமுறை நாட்களில் வழக்கு விசாரணை நடத்தக்கூடாது என்று குற்ற நடைமுறை விதிகள் *3 (1)* - இல் சொல்லப்பட்டிருந்தாலும் கைதிகளை விடுதலை செய்வதற்கு குற்றத்துறை நடுவருக்கு அதிகாரம் கிடையாது என்ற சொல்லவில்லை. அவசர வழக்குகளில் குற்றத்துறை நடுவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தலாம்.

கைது செய்யப்பட்டவடை சிறையில் அடைப்பதற்கு தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தும் குற்றத்துறை நடுவர்கள், பிணை மனு தாக்கல் செய்தால் அதை வாங்க மறுத்து விடுகிறார்கள். இதனால் அப்பாவிகள் சாதாரண காரணங்களுக்காக சிறைக்குச் செல்ல நேரிடுகிறது. இது நீதிக்குப் புறம்பானதாகும்.

ஒரு சிலரை மிரட்டிப் பணிய வைப்பதற்காக ஆதிக்கச் சக்தியினரும் காவல்துறையும் கூட்டு சேர்ந்து அவர்களை கைது செய்து விடுமுறை நாட்களில் சிறைக்கு அனுப்ப ஏற்பாடு செய்கின்றனர். இத்தகைய சூழ்நிலைகளில் குற்றத்துறை நடுவர்கள் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பிணைவிடா குற்றமாக இருந்தாலும் அரசு வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுக்காமலேயே குற்றம் சுமத்தப்பட்டவர்களை பிணையில் விடுதலை செய்யலாம்.

ஒருவரைச் சிறையில் அடைப்பதற்கு மட்டும் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, பிணை மனுவை வாங்க மறுக்கும் குற்றத்துறை நடுவர்கள் மீது, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் அனுமதி பெற்று குற்ற இயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- ★ ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பிணை மனுவை வாங்க மறுப்பது இந்திய அரசியல் சட்டம் பிரிவு *21*-ஐ மீறிய செயலாகும். (1989) 2 Goa L.T. 221 (225) Bom
- ★ கைது செய்யப்பட்ட *24* மணி நேரத்திற்குள் அருகாமையில் உள்ள குற்றத்துறை நடுவர் முன்பு அவரது வீட்டில் முன்னிலைப்படுத்தும் பொழுது வாய்மொழி பிணை விண்ணப்பத்தை அவர் மறுக்கவோ, காவல் வைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கிறதா என்பதை பரிசீலிக்க தனது மூளையைப் பயன்படுத்த மறுக்கவோ, அவசியமான ஆவணங்களோடு மீண்டும் கைது செய்யப்பட்டவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னிலைப்படுத்துமாறு கூறவோ, பிணையில் விடுவதற்கு தனது வசிப்பிடத்தில் போதுமான வசதிகள் இல்லை என்றோ சொல்லக்வடாது. அவ்வாறு நடந்துகொள்வது இந்திய அரசியல் சட்டப்பிரிவுகள் *21* மற்றும் *22 (2)* ஐ மீறிய செயலாகும்.

(1986) 1 Crimes 620

**அழைப்பாணைக்குப் பிறகு நீதிமன்றத்தில் முன்னிலையாதல்**

(Appear on Summon)

கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுபவர்கள் அழைப்பாணை கிடைத்த பிறகு நீதிமன்றத்தில் முன்னிலை ஆவதற்கான உத்தரவு கோரி பிணை பெறும் அன்றே நீதிபதியிடம் கோர வேண்டும். அவ்வாறு செய்யப்படும் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரிப்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை. புலனாய்வு முடியாமல், குற்றப் பத்திரிக்கையும் தாக்கல் செய்யாமல் உள்ள இடைப்பட்ட காலத்தில் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. குற்றப் பத்திரிகை தாக்கலான பிறகு நகல்களை பெற்றுக் கொள்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைத்த பிறகு வாய்தாவுக்குச் செல்ல வேண்டும். அதுவரை நீதிமன்றம் செல்லவேண்டிய அவசியம் இல்லை.

★ பிணையில் விடுதலையான ஒருவர் குற்ற அறிக்கை தாக்கலாகி அழைப்பாணை பெறும் வரை நீதிமன்றம் செல்ல வேண்டியதில்லை. பிணையில் உள்ள ஒருவரை *15* நாட்களுக்கு ஒருமுறை நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்று குற்றத்துறை நடுவர் நீதிமன்றங்கள் கோருவது மோசமான செயலாகும். AIR 1982 S.C. 1463

**பகுதி-II விசாரணையும், தீர்ப்புரையும்**

**1. வழக்கு விசாரணை** (Trial)

ஒரு வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன் வழக்கு விசாரணை தொடங்குகிறது. விசாராணையின் முடிவு விடுதலையாகவும் இருக்கலாம் அல்லது தண்டனையாகவும் இருக்கலாம்.

*1.* ஒருவர் மீது காவல்துறை புனைந்துள்ள வழக்குகள் மீதான விசாராணை

**சிறு குற்ற வழக்குகள்** (Summons Cases)

இரண்டு ஆண்டுகளுக்கு குறைவான தண்டனை வழக்குகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறு குற்ற வழக்குகள் எனப்படும். இவற்றை அழைப்பாணை வழக்குகள் என்றும் அழைக்கலாம்.

**பெருங்குற்ற வழக்குகள் ( Warrant Cases)**

இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமான சிறை தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை விதிக்கக்கூடிய வழக்குகள் பெருங்குற்ற வழக்குகள் எனப்படும். இவற்றை பிடியாணை வழக்குகள் என்றும் அழைக்கலாம்.

**சொற்ப வழக்குகள் (Petty Cases)**

ஆயிரம் ரூபாய்க்கு மிகாமல் தண்டத்தொகை விதிக்கக்கூடிய வழக்குகள் சொற்ப வழக்குகள் எனப்படும்.

**மேல் விசாரணை (Commital)**

அமர்வு நீதிமன்றம் விசாரிக்க வேண்டிய பெருங்குற்ற வழக்குகளை, குற்றத்துறை நடுவர் நீதிமன்றம் மேல் விசாரணைக்காக அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்கு மேல் விசாரணை என்கிறோம்.

**நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பினால் என்ன செய்ய வேண்டும்?**

புலனாய்வுக்குப் பிறகு குற்ற அறிக்கை தயார் செய்து காவல்துறையினர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும். குற்ற அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் நீதிமன்றம், விசாரணைக்காக வழக்கை கோப்பில் எடுத்துக்கொள்ளும். அதன் பிறகு விசாரணைக்கான தேதியைக் குறிப்பிட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பவேண்டும். சம்மந்தப்பட்ட காவல் நிலையத்தின் மூலம் எதிரிகளிடம் அழைப்பாணையைச் சேர்க்க வேண்டும். அழைப்பாணை பெற்றுக்கொண்ட பிறகு அதில் குறிப்பிட்டுள்ள தேதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றம் செல்லவில்லை என்றால் பிடியாணை பிறப்பிக்கப்படும். எனவே, எக்காரணத்தைக் கொண்டும் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு நீதிமன்றம் செல்லாமல் இருக்கக்கூடாது. சில தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நீதிமன்றம் செல்ல முடியவில்லை என்றால் வழக்கறிஞர் மூலம் கு.ந.ச.பிரிவு *317*-ன் கீழ் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

ஒரு வழக்கில் ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றவாளிகள் இருந்தால் ஒரு சிலர் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டு நீதிமன்றம் செல்கின்றனர். ஒரு சிலர் அழைப்பாணையை பெறுவதற்குத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தயங்குகின்றனர். அவ்வாறு செய்வதால் மற்றவர்கள் அலைகழிக்கப்படுகிறார்கள். எனவே அழைப்பாணை வாங்குவதை தாமதப்படுத்த வேண்டாம். அழைப்பாணை கிடைக்கவில்லை என்றாலும், வாய்தா தேதி தெரியும் பட்சத்தில் நீதிமன்றத்தில் முன்னிலையாகவது நல்லது.

**குற்ற அறிக்கை** (Charge Sheet)

அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாகும் பொழுது குற்ற அறிக்கை தரப்படவேண்டும். வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து குற்றவாளிகளும் நீதிமன்றம் சென்றால்தான் குற்ற அறிக்கை வழங்குப்படும். குற்ற அறிக்கையின் நகல்கள் தயாராகவில்லை என்று சொல்லி சில சமயங்களில் குற்ற அறிக்கை வழங்கப்படுவது தாமதமாகலாம். கால தாமதத்தை தவிர்ப்பதற்கு உடனடியாக குற்ற அறிக்கை வழங்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் முறையிட வேண்டும்.

குற்ற அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன், வழக்கை நடத்துவதற்கு சிறந்த வழக்கறிஞரை ஏற்பாடு செய்யவேண்டும். குற்ற அறிக்கையுடன் வழக்கிற்கான ஆவணங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். ஏதேனும் ஆவணங்கள் விடுபட்டிருந்தாலோ அல்லது மறுக்கப்பட்டிருந்தாலோ அந்த ஆவணங்களைப் பெறுவதற்கு நீதிமன்றத்தில் முறையிடவேண்டும்.

குற்ற அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சாட்சிகளின் முகவரிகளுக்குச் சென்று, அவர்கள் உண்மையான சாட்சிகளா அல்லது பொய்ச் சாட்சிகளா என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். மேலும் வழக்கை முறியடிக்க சாட்சிகளின் தன்மையைத் தெரிந்துக்கொள்ளவேண்டும்.

குற்ற அறிக்கை வழங்கப்பட்ட அன்றோ அல்லது அதற்கு அடுத்த நாளோ, குற்ற அறிக்கையை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று நீதிமன்றத்தில் கேள்வி கேட்பார்கள். அவ்வாறு கேள்வி கேட்கும்போது என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து தெரிந்து கொள்ளவேண்டும்.

★ குற்ற அறிக்கையின் நகல் கொடுப்பது குற்றத்துறை நடுவரின் கடமையாகும். அதை அவர் உத்திரவாதப்படுத்த வேண்டும்.

1989 Cr. LJ 1553

★ ஒருவர் கொடுத்த ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குமூலங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்தையும் பெறுவதற்கு குற்றம் சுமத்தப்பட்டவருக்கு உரிமை உண்டு. 1984 Cr. LJ 864 DCL

★ இரண்டு ஆண்டுகள் 3 மாதங்கள் கழித்தும் காவல்துறை குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் கைது செய்யப்பட்டவர் மீது அநேகமாக வழக்கு எதுவும் இல்லை என்று கருதலாம். A.I.R 1979 S.C. 1360

★ மூன்று ஆண்டுகளாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படாமல் ஒருவர் சிறையில் இருந்தால். ரூ. 550-க்கான சொந்தப்பிணை முறியில் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. A.I.R. 1982 S.C 1096

**குற்றத்திலிருந்து விடுவிக்கக்கோருதல்** (Discharge)

குற்ற அறிக்கையில், குற்றங்களுக்கான முகாந்திரம் இல்லை என்று கருதினால் கு.ந.ச. பிரிவு 239-இன் கீழ் நீதிமன்றத்தில் மனு செய்து குற்றங்களிலிருந்து விடுவிக்கக் கோர வேண்டும். குற்றத்துறை நடுவர் நீதிமன்றம் குற்றத்திலிருந்து விடுவிக்கவில்லை என்றால், அமர்வு நீதிமன்றத்திலோ (அ) உயர்நீதிமன்றத்திலோ சீராய்வு மறு தாக்கல் செய்ய வேண்டும். அமர்வு நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும். குற்றத்திற்கான முகாந்திரம் இல்லை என்று நீதிமன்றம் கருதினால் மனு செய்யாமலேயே நீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தானாகவே குற்றத்திலிருந்து ஒருவரை விடுவிக்கலாம்.

★ குற்றத்திற்கு ஆதாரங்கள் இல்லை என்று தெரிந்தால் குற்றம் சுமத்தப்பட்டவரை விடுவிக்கலாம். சிறிதளவும் ஆதாரம் இல்லை என்பதிலும் அல்லது சாட்சிகள் ஒத்திசைவாக இல்லை என்பதிலும் குற்றத்துறை நடுவர் திருப்தியடைய வேண்டும் 1977 Mad LJ. (Cr.) 167.

★ ஆவணங்கள் சரிபார்த்த பிறகு, போதுமான ஆதாரங்கள் இல்லை என்று அமர்வு நீதிமன்றம் கருதினால் குற்றம் சுமத்தப்பட்டவரை குற்றத்திலிருந்து விடுவிக்கலாம்.
A.I.R. 1977 S.C. 1489.

**வாய்தா** (Hearing)

நீதிமன்றம் குறிப்பிடும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும். ஏதேனும் ஒரு வாய்தாவிற்கு வரமுடியவில்லை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றால், வாய்தா தேதிக்கு முதல் நாளே வழக்கறிஞரை சந்தித்து தான் வர இயலாது என்பதை எடுத்துக்கூறி கு.ந.ச. பிரிவு *317* -இன் கீழ் மனு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். தொடர்ந்து *3* வாய்தாவுக்கு மேல் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் இருக்கக்கூடாது. வாய்தா தேதியில் நீதிமன்றம் செல்லவில்லை என்றாலோ அல்லது வழக்கறிஞரை சந்தித்து மனுதாக்கல் செய்ய ஏற்பாடு செய்யவிலைல்யென்றாலோ நீதிமன்றம் பிணையிலாப் பிடியாணை (Non Bailable warrant) பிறப்பிக்கும். அப்பிடியாணையை வைத்துக் கொண்டு காவல் அதிகாரிகள் ஒருவரைக் கைது செய்து சிறையில் அடைப்பார்கள். மீண்டும் பிணையில் வருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இது தேவையில்லாத அலைச்சலையும் பொருட்செலவையும் ஏற்படுத்தும். எனவே ஒவ்வொரு வாய்தா தேதியிலும் நிதிமன்றம் செல்வதற்கு தயார் செய்து கொள்ள வேண்டும்.

வழக்கு விசாரணையின் போது ஒவ்வொரு வாய்தாவிற்கும் சில முக்கியப் பணிகள் காரணமாக ஒருவர் நீதிமன்றம் வர முடியாது என்று கருதினால் குற்ற அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் கு.ந.ச. பிரிவு *205*-ன் கீழ் மனு செய்து நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்குப் பெற வேண்டும். அவ்வாறு விலக்குப் பெற்றவர்கள் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றம் வரவேண்டியதில்லை. மாறாக நீதிமன்றம் எப்பொழுது வரவேண்டும் என்று சொல்கிறதோ அப்பொழுது மட்டும் செல்ல வேண்டும்.

சொற்ப வழக்குகளாக இருந்தால் கு.ந.ச. பிரிவு *205*-இன் கீழ் விலக்குப் பெற்று வழக்கறிஞரே வழக்கை நடத்தலாம்.

**பிடியாணை பிற்பபிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்.**

ஒருவர் மீது பிணையிலாப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டால் உடனடியாக வழக்கறிஞரை சந்தித்து கு.ந.ச. பிரிவு *70(2)* -இன் கீழ் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் சரணடைய வேண்டும். காலதாமதம் செய்யாமல் உடனடியாக நீதிமன்றத்தில் சரணடைந்தால் பிற்ப்பிக்கப்பட்ட பிடியாணை நீக்கரவு செய்யப்படும். காலம் கடந்து கரணடைந்தால் சிறையில் அடைக்கப்படுவார்கள். பிறகு மீண்டும் பிணையில் விடுதலையாவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**வழக்கு விசாரணை தாமதமானால் என்ன செய்ய வேண்டும்?**

குற்ற அறிக்கை குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட பிறகு வழக்குகளை விரைவாக முடிக்க வேண்டும். ஆனால் நடைமுறையில் வழக்கு விசாரணை பல நீதிமன்றங்களில் ஆண்டுக் கணக்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தப்படுகிறது. விசாரணை தேதியில் சாட்சிகள் வரவில்லை என்று சொல்லி வாய்தா தேதி மாற்றப்படுகிறது. இவ்வாறு தேவையில்லாமல் நீதிமன்றத்தில் அலைக் கழிக்கப்படுவதை தடுத்து நிறுத்தி, வழக்கை விரைவாக முடிக்க வேண்டும் என்று கோரி, குற்றவாளிகள் தாமாகவோ, அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத் தலைமயின் மூலமாகவோ வழக்கை நடத்தும் சம்பந்தப்பட்ட நீதிபதிக்கும் அல்லது தலைமை குற்றத்துறை நடுவருக்கும் மனு செய்யலாம். அல்லது வழக்கறிஞர் மூலமாகவும் மேற்கண்டவாறு நடவடிக்கை எடுக்கலாம். அல்லது வழக்கை விரைவில் முடிக்க கோரி நீதிப் பேராணை மூலம் உயர்நீதி மன்றத்தில் உத்தரவு கோரலாம்.

மேலும் வழக்கை விரைவில் முடிப்பதற்காக, வாய்தா தேதியில் நீதிமன்றத்திற்கு சாட்சிகளை அழைத்து வரக்கோரி சம்பந்தப்பட்ட காவல்துறை ஆய்வாளர், கண்காணிப்பாளர் காவல்துறை துணைத் தலைவர் (D.I.G) ஆகியோருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பம் செய்வதோடு நேரிலும் சந்தித்துப் பேச வேண்டும்.

முடிக்கப்படாமல் இருக்கும் வழக்குகளை விரைவில் முடிப்பது குறித்து உச்சநீதிமன்றம் கீழ்கண்ட உத்தரவுகளைக் கொடுத்துள்ளது (J.J) 1996 (4 S.C. 701)

1. மூன்று ஆண்டுகளுக்கு மிகாத தண்டனைக்குரிய குற்றங்களின் வழக்கு விசாரணை ஓர் ஆண்டுக்கு மேலும் நீடிக்கும் நிலையில் குற்றவாளி சிறையில் இருந்தால் அவரை உடனடியாக பிணையில் விட வேண்டும்.

2. ஐந்து மற்றும் ஏழு ஆண்டுகளுக்கு மிகாத தண்டனைக்குரிய குற்றங்களின் வழக்கு விசாரணை இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் நீடிக்கும் நிலையில் குற்றவாளி சிறையில் இருந்தால் அவரை உடனடியாக பிணையில் விடவேண்டும்.

3. அழைப்பாணை கொடுக்காமலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ 2 ஆண்டுகளுக்கு மேலாக போக்குவரத்து தொடர்பான குற்றங்களில் குற்ற வழக்குகளில் உள்ள குற்றவாளிகளை விடுவித்து வழக்கை முடித்துக் கொள்ளவேண்டும்.

4. நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் இணக்கம் காணக்கூடிய குற்றங்களின் வழக்கு விசாரணை 2 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையில் இருந்து விசாரணை தொடங்காமல் இருந்தால் குற்றவாளியை விடுதலை செய்து வழக்கை முடித்துக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*5.* பிடியாணை வேண்டுதற்குரிய மற்றும் பிணை விடு குற்றங்கள் *2* ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையில் இருந்து வழக்கு விசாரணை தொடங்கவில்லை என்றால் குற்றவாளியை விடுதலை செய்து வழக்கை முடித்துக் கொள்ள வேண்டும்.

*6.* தண்டத்தொகை மட்டுமே விதிக்கக்கூடிய குற்றங்கள் ஓர் ஆண்டுக்கு மேலாக நிலுவையில் இருந்து வழக்கு விசாரணை தொடங்கவில்லை என்றால் குற்றவாளியை விடுதலை செய்து வழக்கை முடித்துக் கொள்ள வேண்டும்.

*7.* ஓர் ஆண்டுக்கு மிகாத தண்டனைக்குரிய குற்றங்கள் ஓர் ஆண்டுக்கு மேலாக நிலுவையில் இருந்து விசாரணை தொடங்கவில்லை என்றால் குற்றவாளியை விடுவித்து வழக்கை முடித்துக்கொள்ள வேண்டும்.

*8.* மூன்று ஆண்டுகளுக்கு மிகாத தண்டனைக்குரிய குற்றங்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்து விசாரணை தொடங்கவில்லை என்றால் குற்றவாளியை விடுவித்து வழக்கை முடித்துக் கொள்ள வேண்டும்

**வழக்கு விசாரணையை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றுவது எப்படி?**

ஒரு மாவட்டத்திற்குள் ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றத்துறை நடுவர் நீதிமன்றங்களில் ஒருவர் மீதோ அல்லது ஒரு சிலர் மீதோ வெவ்வேறு வழக்குகள் விசாரணைக்கு வரும்பொழுது எல்லா வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் நடத்தினால் நீதி கிடைக்கும் என்று ஒருவர் கருதினால் அவ்வழக்குகளை தான் விரும்புகின்ற குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி கு.ந.மு.ச. பிரிவு *408*-இன் கீழ் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மனு செய்ய வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட குற்றத்துறை நடுவரிடம் வழக்கை நடத்தினால் நீதி கிடைக்காது எனக் கருதினால், அவ்வழக்கை வேறு குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேற்கண்ட பிரிவின் கீழ் மனு செய்ய வேண்டும்.

அதே போல் ஒரு குறிப்பிட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கை நடத்தினால் நீதி கிடைக்காது என ஒருவர் கருதினால் அவ்வழக்கை வேறு மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றக் கோரி உயர்நீதிமன்றத்தில். கு.ந.மு.ச.பிரிவு *407* -இன் கீழ் மனு செய்ய வேண்டும்.

★ எத்தகைய காரணங்களுக்காக வழக்கு விசாரணையை வேறு நீதிமன்றத்திற்கு மாற்றலாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

A.I.R. 1979 S.C. 468, 1984 Cr. L.J. (NOC) 146 (H.P)

★ வழக்கு பதிவு செய்யப்பட்ட இடத்திற்குச் செல்வது அல்லது சரண் அடைவது தனது உயிருக்கு ஆபத்தானது என்றால் வழக்கை வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ளலாம்

1990 Cr. L.J. 400 (All)

★ சொல்லப்பட்டுள்ள காரணங்கள் சட்டத்திற்கு உட்பட்டவை இல்லை என்றாலும், நீதியை நிலைநாட்டும் பொருட்டு அமர்வு நீதிமன்றம் ஒரு வழக்கை வேறு குற்றத்துறை நடுவரிடம் மாற்றலாம். 1972 Mad L.J. (Cr) 546

★ ஒரே மாதிரியான நான்கு வழக்குகளில் மூன்று வழக்குகள் ஒரு இடத்திலும், ஒரு வழக்கு மாற்றொரு இடத்திலும் விசாரிக்கப்படுமானால், வழக்குகளை ஒரே இடத்திற்கு மாற்ற போதுமான காரணமாகும். A.I.R. 1973 S.C. 203

**சாட்சிகள் விசாரணையும் தற்காப்பு சாட்சியமும்**

ஒருவருக்கு எதிராக சாட்சி சொல்ல, குற்ற அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சாட்சிகளை நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரிப்பார்கள். சாட்சிகளைப் பற்றி விவரங்கள் எதுவும் தெரியவில்லை என்றால் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கும், சாட்சியங்களை முறியடிப்பதற்கும் சிரமங்கள் ஏற்படும். எனவே, சாட்சி விசாரணை தொடங்குவதற்கு முன்பு சாட்சிகளின் முகவரிக்குச் சென்று சாட்சிகளின் இருப்பிடம், தொழில், நடத்தை, சமூகத்தில் அவர்களுக்குள்ள மதிப்பு, ஏற்கனவே ஏதேனும் குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விவரம், சாட்சிகளின் மனநிலை ஆகியவற்றைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

சாட்சிகள் விசாரணை முடிந்த பிறகு சாட்சியங்களை படித்துக் காட்டி அது பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று நீதிமன்றத்தில் கு.ந.மு.ச. பிரிவு *313*-இன் கீழ் கேள்வி கேட்பார்கள். மேலும் தற்காப்பு சாட்சிகள் ஏதேனும் உண்டா என்று கேட்பார்கள். தனக்கு எதிராக சாட்சி சொல்லியிருந்தால் அவை பொய் சாட்சியம் என்று மறுக்க வேண்டும். தற்காப்பு சாட்சி அவசியம் என்று கருதினால் சாட்சிகளின் பட்டியலையும், ஆவணங்கள் இருப்பின், அவற்றையும் நீதிமன்றத்திற்கு தரவேண்டும். கு.ந.மு.ச. பிரிவு *313*-இன் கேள்வி மற்றும் தற்காப்பு சாட்சிகள் பற்றி வழக்கறிஞர் கொடுக்கும் வழிகாட்டுதலை கடைபிடிக்க வேண்டும். கு.ந.மு.ச. பிரிவு *313*-இன் கேள்வியின் போது நீதிமன்றம் செல்லவில்லை என்றாலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு சிலர் வரவில்லை என்றாலோ கேள்வி கேட்பது ஒத்திவைக்கப்பட்டு வழக்கு விசாரணை நீட்டிக்கப்படும்.

**2. ஒருவர் மீது நீதிமன்றத்தில் குற்ற முறையீடு (Complaint) செய்வது எப்படி?**

ஒருவர் கொடுத்த புகாரை காவல் நிலையத்தில் பதிவு செய்ய மறுத்தாலோ, புகாரை பதிவு செய்யாமல் எதிரிகளுக்குச் சாதகமான வகையில் பதிவு செய்தாலோ அல்லது புலனாய்வுக்குப் பிறகு வழக்கை முடித்துக் கொண்டாலோ குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் கு.ந.மு.ச. பிரிவு *200*-இன் கீழ் எதிரிகள் மீது குற்ற முறையீடு செய்யவேண்டும்.

குற்றத்துறை நடுவர் நீதிமன்றங்களில் குற்ற முறையீட்டை அவ்வளவு எளிதில் கோப்புக்கு எடுத்துக் கொள்ளமாட்டார்கள்.

வழக்கை தாக்கல் செய்வதற்கு சிறந்த வழக்கறிஞரை ஏற்பாடு செய்ய வேண்டும். வழக்கை கோப்புக்கு எடுக்கும் பொழுதே குற்ற முறையீடு செய்பவரையும் சாட்சிகளையும் விசாரணை செய்வார்கள். எனவே சாட்சிகள் உறுதியானவர்களாகவும். தெளிவாக சாட்சியம் சொல்பவர்களாகவும் இருக்க வேண்டும். சாட்சியம் தெளிவாக இல்லை என்றால் வழக்கு கோப்புக்கு எடுக்கப்படாமலேயே தள்ளுபடி செய்யப்படும்.

ஒருவேளை ஒருவரின் குற்ற முறையீடு, குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் கோப்புக்கு எடுக்கப்படவில்லை என்றால் தலைமை குற்றத்துறை நடுவர் நீதிமன்றத்தில் முறையிட வேண்டும். அல்லது அமர்வு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

குற்ற முறையீடு செய்பவர் ஒவ்வொரு வாய்தாவிற்கும் நீதிமன்றம் செல்லவேண்டும். ஒரு வாய்தாவிற்குச் செல்லவில்லை என்றால் வழக்கு தள்ளுபடி செய்யப்படும். எனவே ஒரு வாய்தா தேதியில் முறையீடு செய்தவர் வரமுடியவில்லை என்றால் முன்கூட்டியே வழக்கறிஞரை சந்தித்து கு.ந.மு.ச. பிரிவு *256*-இன் கீழ் மனு தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒரு வேளை வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டால் வழக்கு மீண்டும் கோப்பில் எடுத்துக் கொள்ள உத்தரவு கோரி மாவட்ட அமர்வு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

குற்ற முறையீடு வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு. எதிரிகள் மீது குற்றச்சாட்டு புனையப்பட்ட பிறகு, குற்றத்திலிருந்து விடுவிக்கக் கோரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரிகள் கு.ந.மு.ச.பிரிவு *239*-இன் கீழ் மனு செய்வார்கள். அல்லது சாட்சிகள் விசாரணை முடிந்து உடனே கூட அவ்வாறு செய்யலாம். அம்மனுவை ஏற்றுக் கொண்டு வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தால் கீழமை நீதிமன்றத்தின் உத்தரவு நீக்கறவு செய்யக்கோரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கு.ந.மு.ச. பிரிவு *399*-இன் கீழும், உயர்நீதிமன்றத்தில் கு.ந.மு.ச. பிரிவு *401*-இன் கீழும் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

ஒருவர் கொடுத்த வழக்குப் பிரிவுகளில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு புனையாமல், ஒரு சில பிரிவுகளில் மட்டும் குற்றச்சாட்டு புனைந்தால், மற்ற பிரிவுகளிலும் குற்றச்சாட்டு புனையக்கோரி கு.ந.மு.ச. பிரிவு *399*-ன் கீழ் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், கு.ந.மு.ச. பிரிவு *410*-ன் கீழ் உயர்நீதிமன்றத்திலும் சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டும்.

★ அஞ்சலில் அனுப்பப்படும் குற்ற முறையீடுகளை மறுக்கக்கூடாது. 1970 Cr. L.J. 922

★ குற்ற முறையீடு செய்பவர் நேரடியாக வரவேண்டிய அவசியமில்லை 1985 Cr L.J. (NOC) 73 Punj

★ பிடியாணை வேண்டாக் குற்றங்களில் இருப்பிடம் காண முடியாத நபர்கள் மீதும் குற்ற முறையீடு செய்யலாம். குற்றத்துறை நடுவர் கு.ந.மு.ச. பிரிவு *156* அல்லது *202*-இன் கீழ் புலனாய்வு செய்யக் கோர வேண்டும். A.I.R. 1969 guj 14

★ தன்னை ஏமாற்றியவர் பெயரை குற்ற முறையீட்டில் குறிப்பிடவில்லை என்பதற்காக தள்ளுபடி செய்ய முடியாது. 1976 Cr. L.J. 1778

## 3. வழக்குகளைத் திரும்பப் பெறுதல்

காவல் நிலைய வழக்குகளாக இருந்தாலும் அல்லது குற்ற முறையீடு வழக்குகளாக இருந்தாலும், அவை அழைப்பாணை வழக்குகளாக இருந்தால், வழக்கு விசாரணையின் போது எந்த நேரத்திலும் வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். காவல் வழக்குகளை அரசு வழக்கறிஞர் கு.ந.மு.ச. பிரிவு *321*-இன் கீழ் திரும்ப பெற்றுக்கொள்ளலாம். குற்ற முறையீடு வழக்குகளில் முறையீடு செய்வதர் ஒரு வாய்தாவிற்குச் செல்லவில்லை என்றால் வழக்கு தானாகவே தள்ளுபடி செய்யப்படும்.

பிடியாணை வழக்குகளை திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு சட்டத்தில் வழியில்லை. பிடியாணை வழக்குகளை திரும்பப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெறவேண்டுமானால் வழக்குகளை இணக்கம் செய்து கொள்ளலாம்.

★ காவல்துறை தாக்கல் செய்த குற்ற அறிக்கையை ஒரு தனிநபரோ அல்லது புகார் கொடுத்தவரோ திரும்பப் பெறமுடியாது. 1991. Cr. L.J. 749 (A.P.)

★ அரசாங்கம் வழக்குகளைத் திரும்பப் பெறுவதில் நீதியை நிலைநாட்டுவதை அதிமுக்கியமானதாகக் கருதவேண்டும். A.I.R. 1972 SC. 496, 1980 Cr. L.J. (NOC)(136 Punj)

★ என்னென்ன காரணங்களுக்காக ஒரு வழக்கு திரும்பப் பெறப்படலாம். A.I.R. 1980 S.C. 1510, 1989 Cr. L.J. 727 (Ker)

★ அரசு உதவி வழக்கறிஞர் வழக்குகளைத் திரும்பப் பெற விண்ணப்பிக்கலாம். A.I.R. 1987 S.C. 877 (893)

★ நீதிமன்றத்தின் ஒப்புதலின் பேரில் அரசு உதவி வழக்கறிஞர் ஒரு வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.
A.I.R. 1987 SC 863

★ ஒரு பொது நபர் அல்லது ஒரு மூன்றாம் நபர் வழக்கு திரும்பப் பெறப்படுவதை எதிர்க்கலாம்.
A.I.R. 1987 SC. 1979 Cr. L.J. 1242

★ தகவல் கொடுத்தவரின் முயற்சியின் பேரில் காவல்துறை வழக்குகளைத் திரும்பப் பெறலாம்.
1982 Cr. L.J. 452, 1979 Cr. L.J. (NOC) 78

**4. வழக்குகளை இணக்கம் செய்து கொள்ளல்** (Compounding)

தீர்ப்பு சொல்வதற்கு முன்பாக எந்த நேரத்திலும் ஒரு வழக்கை இணக்கம் செய்து கொள்ளலாம். கு.ந.மு.ச. பிரிவு *320*-இன் கீழ் பட்டியலில் கண்டுள்ள சில குற்றங்களை நீதிமன்றத்தின் அனுமதி பெறாமலேயே இணக்கம் செய்து கொள்ளலாம். சில குற்றங்களை நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற பிறகுதான் இணக்கம் செய்து கொள்ள முடியும். சில தனிச்சிறப்பான சூழ்நிலைகளில் கு.ந.மு.ச. பிரிவு *320*-இன் கீழ் உள்ள பட்டியலில் இடம் பெறாத குற்றங்களையும், இரு தரப்பினரும் விரும்பும் பொழுது நீதிமன்றத்தின் அனுமதி பெற்று இணக்கம் செய்து கொள்ளலாம்.

★ ஆயுதங்களை தூக்கி வீசிவிட்டு நியாயமான முறையில் இருதரப்பாரும் குற்றங்களை இணக்கம் செய்து கொள்வது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறந்த நீதியாகும். (1980) 1SCC 63

★ சில சிறப்பான சூழ்நிலைகளில் சட்டப்படி இணக்கம் காண முடியாத குற்றங்களையும் நீதியின் நலன் கருதி இணக்கம் செய்து கொள்ளலாம். A.I.R. 1988 SC 2111

★ சட்டப்படி இணக்கம் செய்து கொள்ள முடியாத குற்றங்கள் தண்டனைக்குப் பிறகு, மேல்முறையீட்டில் இணக்கம் செய்து கொள்ளக்கூடிய குற்றங்களாக மாற்றப்பட்டால் குற்றங்களை இணக்கம் செய்து கொள்ளலாம். 1983 SCC (Cr) 60

★ இணக்கம் செய்து கொள்ளக்கூடிய வழக்குகளில் தீர்ப்பு நாளன்று குற்றம் சுமத்தப்பட்டவர்கள் வரவேண்டும் என்று குற்றத்துறை நடுவர் வலியுறுத்த முடியாது.
(1986) 2 Crimes 393 (Ker)

**2. தீர்ப்புரையும் மேல் முறையீடும்**

ஒவ்வொரு விசாரணைக்குப் பிறகும் விசாரணையின் இறுதி முடிவாக தீர்ப்புரை (Judgement) வழங்கப்படுகிறது.

**தீர்ப்புத் தேதியில் என்ன செய்ய வேண்டும்?**

தீர்ப்புத் தேதியில் என்ன தீர்ப்பு வழங்கப்படும் என்பது தெரியாது. வழக்கிலிருந்து விடுதலை செய்து விட்டால் பிரச்சினை எதுவும் இல்லை. தண்டனை விதிக்கப்பட்டால் அதை எதிர்கொள்வதற்கான முன் தயாரிப்போடு செல்ல வேண்டும். தீர்ப்புத் தேதியில் வழக்கறிஞரைஅழைத்துச் செல்ல வேண்டும். ஒரு நபருக்கு இரண்டு பிணையாட்கள் வீதம் பிணைக்கான ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும். தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான மனுவை முன் கூட்டியே தயாரித்து எடுத்துச் செல்ல வேண்டும்.

தண்டனை வழங்குவதற்கென நீதிபதி முடிவு செய்துவிட்டால், தண்டனை கொடுக்கப் போகிறேன், ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா? என்று கேள்வி கேட்பார். குறைந்தத் தண்டனை விதிக்கு மாறோ அல்லது மன்னித்து விடுதலை செய்யுமாறோ நீதிமன்றத்தில் வேண்டிக் கொள்ளலாம்.

**வழக்கிலிருந்து விடுதலை**

குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றக் காவலில் இருந்தால் தீர்ப்புத் தேதியில் அந்நபரை நீதிமன்றத்திற்கு அழைத்துவரவேண்டும். குற்றவாளி விடுதலை செய்யப்படுவதாக இருந்தால் தீர்ப்புத் தேதியில் குற்றவாளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரவில்லை என்பதற்காக தீர்ப்புரையை தள்ளிப் போடக்கூடாது. அதேபோல தண்டனை, தண்டத் தொகை மட்டுமே என்றால் குற்றவாளி வரவில்லை என்றாலும் தீர்ப்புரையை தள்ளிப் போடக்கூடாது.

★ காரணமில்லாமல் கைது செய்திருந்தால் இழப்பீடு வழங்க வேண்டும். 1986 Cr. L.J. 1634

**தண்டனை விதிக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்?**

தீர்ப்புரையின் நகல் அன்றே இலவசமாக கொடுக்கப்பட வேண்டும். நீதிமன்றம் தரவில்லை என்றால் கேட்டுப் பெற வேண்டும்.

தண்டத்தொகை அல்லது சிறைதண்டனை விதிக்கப்பட்டால் மேல் முறையீடு செய்யப் போவதாகக்கூறி தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்து பிணையில் விடுதலை செய்வதற்கு கு.ந.மு.ச. பிரிவு *384(3)* -இன் கீழ் அதே நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும்.

தண்டத்தொகை மட்டுமே தண்டனையாக விதிக்கப்பட்டால், தண்டத் தொகையை ஒரு தவணையிலோ அல்லது *2,3,* தவணைகளிலோ செலுத்துவதற்கு கால அவகாசம் (அதிகபட்சம் *30* நாட்கள்) கேட்டு கு.ந.மு.ச. பிரிவு *424*-இன் கீழ் மனுதாக்கல் செய்ய வேண்டும்.

ஒருவர் முதன் முறையாக தண்டிக்கப்பட்டால் கு.ந.மு.ச. பிரிவு *360*-இன் கீழ் நன்னடத்தைக் கண்காணிப்பிலோ அல்லது கண்டனத்துடனோ விடுதலை செய்யுமாறு நீதிமன்றத்தில் கோர வேண்டும். *21* வயது நிரம்பிய ஒருவருக்கு தண்டத்தொகையோ அல்லது *7* ஆண்டுகளுக்கு குறைவான தண்டனை விதிக்கப்பட்டாலோ அல்லது *21* வயதுக்கு குறைவான ஒரு நபருக்கோ அல்லது ஒரு பெண்ணுக்கோ ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை அல்லாத வேறு எந்த தண்டனை விதிக்கப்பட்டாலோ அவர்களை கு.ந.மு.ச. பிரிவு *360*-இன் கீழ் நன்னடத்தை கண்காணிப்பிலோ அல்லது கண்டனத்துடனோ விடுதலை செய்யுமாறு கோர வேண்டும்.

தண்டனை தற்காலிகமாக நிறுத்தப்படாமல் நீதிமன்றம் சிறைக்கு அனுப்பினால் கண்ணியமான குடிமகனாகவோ அல்லது வருமானவரி செலுத்துபவராகவோ இருந்தால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சிறையில் சிறப்பு வகுப்பில் வைக்க உத்தரவிடுமாறு கோர வேண்டும்.

★ *21* வயது அடையாத ஒருவரின் கடந்த கால நடத்தையை வைத்து. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டாலும், அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதல் முறையாக குற்றம் செய்திருந்தால் நடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்யலாம்.

1989 Cr. LJ. 2063 (Gau)

★ ஏழ்மையின் காரணமாக *20* வயது பையன் முதன் முறையாக ஒரு சைக்கிளைத் திருடி ரூ*50*-க்கு விற்றுள்ளான். குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் முதன் முறையாக தவறு செய்துள்ளதால் அவன் கண்டித்து விடுதலை செய்யப்பட்டான். 1986 Cr. L.J. 406

*21* வயதுக்குட்பட்ட ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டால் அவர்கள் கு.ந.மு.ச. பிரிவு *360*-ன் கீழ் முதன் முறையாக தவறு செய்தார்கள் என்று சொல்லி விடுதலை செய்ய முடியாது. A.I.R. 1942 Mad 415 (2)

★ தீர்ப்புரையின் நகலை குற்றவாளிக்கு உடனே கொடுக்க வேண்டும். A.I.R. 1978 Sc 1548

**மேல்முறையீடு** (Appeal)

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒருவருக்கு எதிராக இருந்தால் தீர்ப்புரையை எதிர்த்து மேல் முறையீடு செய்ய வேண்டும்.

குற்றத்துறை நடுவர் நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலும், அமர்வு நீதிமன்றத் தீர்ப்புகளை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலும் தீர்ப்புகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்ய வேண்டும்

குற்றத்துறை நடுவர் நீதிமன்றங்கள், அமர்வு நீதிமன்றங்களில் குற்றத்தை ஒப்புக் கொண்ட பிறகு விதிக்கப்படும் தண்டனையை எதிர்த்து, சிறப்பான காரணங்கள் இல்லை என்றால் மேல் முறையீடு செய்ய முடியாது. ஆனால் குற்றத்தை ஒப்புக் கொள்ள ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தால் அதன் மீது மேல்முறையீடு செய்யலாம்.

கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் அத்தாட்சி நகலை தீர்ப்புரை வழங்கிய உடனே கீழமை நீதிமன்றத்தில் குற்ற நடைமுறை விதிகள் பிரிவு *350*-இன் கீழ் மனு செய்து பெற்றுக் கொள்ளவேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்ட பிறகு விதிக்கப்படும் தண்டனைகள் மீது மேல் முறையீடு செய்ய முடியாது.

சொற்ப வழக்குகளில் மேல் முறையீடு செய்வதை கு.ந.மு.ச. பிரிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

376 தடை செய்கிறது. ஆனால் நீதிமன்றஅவமதிப்பு குற்றத்திற்காக தண்டத்தொகை விதிக்கப்பட்டிருந்தால் அதை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம்.

ரூ200-க்கு அதிகமாக தண்டத் தொகை விதிக்கப்பட்டிருந்தாலும் அதை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம்.

ஒரு நபர் கண்டித்து விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது நன்னடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம்.

கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்த்து கு.ந.மு.ச. பிரிவு 382-இன் கீழ் மேல் முறையீடு தாக்கல் செய்ய வேண்டும். மேல் முறையீட்டிற்கான காரணங்களைத் தெளிவாக விளக்கி தீர்ப்புரையின் அத்தாட்சி நகலையும் இணைத்து மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்ய வேண்டும்.

கீழமை நீதிமன்றத்தில் தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைத்து குற்றவாளியை பிணையில் விடுதலை செய்யவில்லை என்றால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கு.ந.மு.ச. பிரிவு 381-இன் கீழ் பிணை பெற முயற்சி செய்ய வேண்டும்.

கீழமை நீதிமன்றங்களில் குற்றத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டாலோ அல்லது தண்டனை குறைவாக விதிக்கப்பட்டாலோ அதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில்தான் மேல் முறையீடு செய்ய வேண்டும். குற்ற முறையீடு வழக்குகளில் முறையீடு செய்தவர் மேல் முறையீடு செய்ய வேண்டும். காவல் வழக்குகளில் மாநில அரசு மேல் முறையீடு செய்யலாம்.

தண்டத்தொகை மட்டுமே தண்டனையாக விதிக்கப்பட்டிருந்ததால் தண்டத்தொகையை கீழமை நீதிமன்றத்தில் செலுத்திய பிறகுதான் மேல் முறையீடு செய்ய வேண்டும் என்ற நடைமுறை சில நீதிமன்றங்களில் கடைபிடிக்கப்படுகிறது. இது நீதிக்குப் புறம்பானது. தண்டத்தொகையும் ஒரு தண்டனைதான் என்பதால் அதை நிறுத்தி வைத்து மேல்முறையீடு செய்வதற்கு ஒருவருக்கு உரிமை உண்டு. எனவே கீழமை நீதிமன்றத்தில் தண்டத்தொகை செலுத்துவதற்கான காலக்கெடு முடிவதற்குள் மேல்முறையீடு செய்ய வேண்டும்.

ஆனால் சிறை தண்டனையுடன் தண்டத்தொகையும் விதிக்கப்பட்டிருந்தால் கீழமை நீதிமன்றத்தில் தண்டத்தொகையை செலுத்திய பிறகுதான் மேல்முறையீடு செய்ய முடியும். தண்டத்தொகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலுத்தியதற்கான ரசீதை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

கீழமை நீதிமன்றத்தில் தண்டனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கலாம். மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் கீழமை நீதிமன்றம் வழங்கிய பிணை நீக்கப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டால் கு.ந.மு.ச. பிரிவு *390*-இன் கீழ் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்ய வேண்டும்.

★ விடுதலை செய்யப்பட்டவருக்கு எதிராக அரசாங்கம் மேல் முறையீடு செய்தால் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும். அறிவிப்பு கொடுக்காமல் விடுதலையை ரத்து செய்வது சட்டவிரோதமாகும். A.I.R. 1981 SC 2072

★ தண்டத்தொகை மட்டும் தண்டனையாக விதிக்கப்பட்டிருந்தால் கீழமை நீதிமன்றத்தில் தண்டத்தொகை செலுத்தாமலேயே மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை முறி எழுதிக் கொடுத்தால்போதும்.
1987 Cr. L.J. 1838

★ குற்றத்தைத் தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் சூழ்ச்சியின் மூலம் தன்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகக் கூறி மேல் முறையீடு செய்யலாம்.
A.I.R. 1959 Mani 15, A.I.R. 1986 SC 1070

★ நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டத்தொகை விதிக்கப்பட்டவர் மேல்முறையீடு செய்யலாம். A.I.R. 1965 Cal 622

★ கண்டித்து விடப்பட்டிருந்தாலும் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம். A.I.R. 1959 All 351

நடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் மேல் முறையீடு செய்யலாம். A.I.R. 1957 Mys 75

★ வழக்கறிஞரோ அல்லது மேல் முறையீட்டாளரோ வரவில்லை என்பதற்காக மேல் முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்ய முடியாது. A.I.R. 1971 SC 1606, A.I.R. 1962 SC 1208

**மேல் முறையீட்டுக்கான கால வரையறை**

அமர்வு நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றம் விதிக்கும் மரண தண்டனையை எதிர்த்து *30* நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும். மரண தண்டனை அல்லாத கீழமை நீதிமன்றங்களின் பிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்டனைகளை எதிர்த்து *60* நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும்

பிற கீழமை நீதிமன்றங்களின் தண்டனைகளை எதிர்த்து *30* நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

விடுதலை செய்யப்பட்ட நபருக்கு எதிராக *90* நாட்களுக்குள் மேல் முறையீடு செய்ய வேண்டும்.

சீராய்வு *90* நாட்களில் தாக்கல் செய்ய வேண்டும்.

**சீராய்வு (Revision)**

கீழமை நீதிமன்றங்களின் உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றங்களில் சீராய்வு மனுதாக்கல் செய்யலாம்.

குற்றத்துறை நடுவர் நீதிமன்ற உத்தரவுகளை எதிர்த்து கு.ந.மு.ச. பிரிவு *397*-இன் கீழ் அமர்வு நீதிமன்றத்திலும், கு.ந.மு.ச. பிரிவு *397(B)*-இன் கீழ் உயர்நீதிமன்றத்திலும் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம். சீராய்வு மனுவை நேரடியாக உயர்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யலாம். அமர்வு நீதிமன்ற உத்தரவுகளை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம்.

கீழமை நீதிமன்றத்தின் உத்தரவினால் (Order) பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் சீராய்வு மனு தாக்கல் செய்யலாம். தண்டனையல்லாத சட்ட சிக்கல்களுக்கு சீராய்வு செய்யலாம்.

## பகுதி III பொது ஒழுங்கமைதி

**பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள்**

பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள், ஒருவர் தனது கருத்துக்களை தெரிவிக்கவும், அதை மக்களிடையே பிரச்சாரம் செய்வதற்குமான வடிவங்களாகும். இவ்வுரிமை இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள பேச்சுரிமை மற்றும் கருத்துரிமையின் ஒரு பகுதியாகும்.

*1.* பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் பங்கேற்பவர்களின் நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும் என்று காவல் துறை வழிகாட்டலாம்.

*2.* எந்தப் பாதையில் ஊர்வலம் போகலாம் அல்லது போகக்கூடாது, எந்த நேரத்தில் ஊர்வலம் செல்லலாம் அல்லது செல்லக்கூடாது என்றும் ஊர்வலத்தை அமைதியாக நடத்தவேண்டும் என்றும் காவல்துறை கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

*3.* பொது அமைதி மற்றும் பாதுகாப்புக் கருதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுக்கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் பொது மக்கள் பங்கேற்பது குறித்து காவல்துறை வழிகாட்டுதல்களைத் தரலாம்.

மேற்கண்ட வழிகாட்டுதல்களை ஒருவர் மீறும் பொழுது அவரை காவல்துறை கைது செய்யலாம். சட்டம் ஒழுங்கு சீர்குலைவதை தடுப்பதற்காக மேற்கண்ட அதிகாரத்தை தமிழ்நாடு மாநகரக் காவல் சட்டம் பிரிவு *41,* காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்குகிறது.

பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு காவல்துறையிடம் முன்கூட்டியே அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை. எனினும் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்தும் உரிமையை காவல்துறை கட்டுப்படுத்தலாம்.

காவல்துறை ஆணையர் அல்லது துணை கண்காணிப்பாளர், சில குறிப்பிட்ட பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதை தடை செய்யலாம். அவ்வாறு தடைசெய்வதற்கான உத்தரவு எழுத்து மூலமாக இருக்க வேண்டும். அவ்வுத்தரவை செய்தித்தாள்களில் வெளியிட வேண்டும். மேற்கண்ட தடை அமுலில் இருக்கும்பொழுது ஊர்வலங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு காவல்துறையிடம் அனுமதி பெறவேண்டும். இச்சட்டம் அமுலில் இருக்கும்போது *5* நாட்களுக்கு முன்பு அனுமதிகோரி விண்ணப்பிக்க வேண்டும். இச்சட்டம் அமுலில் இல்லாத போது பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு முன் அனுமதி பெற வேண்டியதில்லை.

**அனுமதி மறுக்கப்பட்டால் என்ன செய்வது ?**

ஒரு சில இடங்களில் பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. காவல்துறையின் அனுமதி உண்டா, இல்லையா என்பதை உத்தரவாதம் செய்து கொள்ளாமலேயே பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு கடைசி நேரத்தில் காவல்துறை அனுமதி மறுக்கும்பொழுது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாகின்றனர். இந்நெருக்கடிகளை சமாளிக்க கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

*1.* அனுமதி கோருவதற்கான விண்ணப்பத்தை, பொதுக்கூட்டமாக இருந்தால் அந்த எல்லைக்குட்பட்ட காவல் ஆய்வாளரிடமும், ஊர்வலமாக இருந்தால் துணை ஆணையர் அல்லது துணை கண்காணிப்பாளரிடமும் நேரில் கொடுக்க வேண்டும். விண்ணப்பத்தை நேரில் கொடுக்கும் அதே வேளையில் அவ்விண்ணப்பத்தின் நகலை பதிவு அஞ்சலில் சம்பந்தப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விண்ணப்பத்தின் நகலை காவல்துறை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்ப வேண்டும். பதிவு அஞ்சல் பெற்றுக் கொண்ட பிறகு வரும் ஒப்புதல் அட்டையையும், பதிவு அஞ்சல் பெறப்படாமல் திருப்பப்படாமல் அவ்வஞ்சலின் உறையையும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

*2.* விண்ணப்பம் கிடைத்த *3* நாட்களுக்குள் அனுமதி குறித்து எழுத்து மூலமான பதிலை அனுப்புமாறு விண்ணப்பத்தில் கோரவேண்டும். *3* நாட்களுக்குள் பதில் எதுவும் வரவில்லை என்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையோ அல்லது உயரதிகாரிகளையோ நேரில் சந்தித்துப் பேச வேண்டும். அதன் பிறகும் அனுமதி தரப்படவில்லையென்றால் மனித உரிமை நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ வழக்குத் தொடுத்து அனுமதி பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். வழக்குத் தொடுப்பதற்கான கால அவகாசம் கொடுத்து, ஒரு மாதத்திற்கு முன்பே காவல்துறையிடம் விண்ணப்பிக்க வேண்டும். வழக்குத் தொடுப்பதற்கு கீழ்கண்ட தேவைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

*1.* விண்ணப்பத்தின் நகல்

*2.* பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டை அல்லது திருப்பப்பட்ட அஞ்சல் உறை.

*3.* பொதுக்கூட்டம், ஊர்வலம் நடத்துவதற்கு அச்சடிக்கப்பட்ட பிரசுரம் அல்லது சுவரொட்டி, அச்சடித்தற்கான ரசீது.

*4.* ஒலிபெருக்கி மற்றும் மேடை ஏற்பாட்டிற்கு முன்பணம் கொடுத்ததற்கான ரசீது.

*5.* அம்மாதத்தில் மாற்றுக் கட்சியினர் பொதுக்கூட்டங்கள்., ஊர்வலங்கள் நடத்தியிருந்தால் அது பற்றிய விவரம், அதற்கான ஆதாரங்கள் (பிரசுரம், சுவரொட்டி, பத்திரிக்கைச் செய்தி போன்றவை)

*6.* வழக்குச் செலவு

*3.* பொதுக்கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை புகைப்படம் எடுப்பதற்கும், "வீடியோ" எடுப்பதற்கும் ஒப்புதல் தெரிவித்தால் அனுமதி தருவதாக சில இடங்களில், சில காவல்துறை அதிகாரிகள் பேரம் பேசுகின்றனர். அவ்வாறு அவர்கள் கோருவதற்கு சட்டப்படி எந்த உரிமையும் கிடையாது. அவ்வாறு அவர்கள் கோருவதை எழுத்து மூலமாக பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

பொதுக்கூட்டங்களில் பங்கேற்கும் உரிமை பொது மக்களுக்கு உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொது மக்களை அழைக்காமல் நடத்தப்படும் கூட்டங்கள் தனியார் கூட்டங்கள் ஆகும். இக்கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ காவல்துறைக்கு எவ்வித உரிமையும் கிடையாது. இதுபோன்ற கூட்டங்களை நடத்துவதற்கு அவ்விடத்திற்கான உரிமையாளரிடம் அனுமதி பெற்றால் போதுமானது.

★ பொதுக்கூட்டம் நடத்துவதற்கான உரிமையை மறுப்பது மனித உரிமை மீறல் ஆகும்.
*(1994*-இல் சுப்பிரமணிய சுவாமி புகார் மீது,, தேசிய மனிதஉரிமை ஆணையத்தின் தீர்ப்பு)

**ஒலிபெருக்கி பயன்படுத்துதல்**

ஒருவர் நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் ஒலிபெருக்கி சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு உரிமை உண்டு. ஆனால் பொதுமக்களுக்கு இடையூறோ, தொல்லையோ ஏற்படுமாயின் நேரம், இடம் மற்றும் தன்மையைப் பொறுத்து ஒலிபெருக்கி சாதனங்கள் பயன்படுத்துவதை காவல்துறை கட்டுப்படுத்தலாம். எனவே ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கு காவல்துறையிடம் அனுமதி பெற வேண்டும். எந்த இடத்தில் ஒலிபெருக்கியை பயன்படுத்துவீர்களோ அவ்வெல்லைக்குட்பட்ட காவல்நிலைய ஆய்வாளரிடம் உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்து அனுமதி பெறவேண்டும்.

**தட்டி, சுவரொட்டி, சுவரெழுத்துப் பிரச்சாரம் மற்றும் பிரசுரங்கள் விநியோகம்.**

தட்டி, சுவரொட்டி, சுவரெழுத்து மற்றும் பிரசுரங்கள் ஒருவரது கருத்துக்களை தெரிவிப்பதற்கும், பிரச்சாரம் செய்வதற்குமான வடிவங்கள் ஆகும். இவை இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள பேச்சுரிமை மற்றும் கருத்துரிமையின் ஒரு பகுதியாகும்.

தட்டி, சுவரொட்டி,. சுவரெழுத்து மற்றும் பிரசுரங்கள் மூலம் பொது, அமைதி, பொது ஒழுங்கு, பொதுப்பண்பு, தேசியப் பாதுகாப்பு போன்றவற்றிற்கு பாதிப்பு இருந்தால் மட்டுமே காவல்துறை மேற்கண்டவற்றை கட்டுப்படுத்தலாம். அவ்வாறு இல்லாத போது காவல்துறையோ அல்லது வேறு எந்த நபரோ தட்டி, சுவரொட்டி, பிரசுரம் ஆகியவற்றை சேதப்படுத்தினாலோ, அபகரித்துச் சென்றாலோ அல்லது சுவரெழுத்தை சேதப்படுத்தினாலோ சம்பந்தப்பட்ட நபர்கள் மீது குற்ற இயல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஒருவருக்குச் சொந்தமான பொருளை மற்றொருவர் சேதப்படுத்தினாலோ அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அபகரித்துச் சென்றாலோ அல்லது தெரியாமல் எடுத்துச் சென்றாலோ எவ்வாறு காவல் நிலையத்தில் புகார் கொடுப்பீர்களோ அது போன்று மேற்கண்டவற்றிக்கும் செய்ய வேண்டும்.

## பகுதி IV பிற சட்டங்கள்

### மனித உரிமை பாதுகாப்புச் சட்டம்

### மனித உரிமைகள்

சமீப காலங்களில் மனித உரிமை மீறல்களும் அதற்கு எதிரான நடவடிக்கைகளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்தை ஐ.நா. சபை *1948*லேயே வெளியிட்டிருந்தாலும் பல ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்திய அரசு மனித உரிமைமீறல்கள் தடுப்பதற்கான மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தை *(1993)* நிறைவேற்றியது. சட்டம் வெளிவந்த நான்கு ஆண்டுகள் ஆன பிறகும் கூட இச்சட்டம் முழுமையாக அமுலாகவில்லை. மாவட்டம் தோறும் மனித உரிமை நீதிமன்றம் அமைக்கப்பட்ட போதும் மனித உரிமை நீதிமன்றத்தில் தரப்படும் புகார்கள் பெரும்பாலும் திருப்பப்படுகின்றன. மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிர்பந்தத்தை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே சட்டத்தின் பலன்களை, பாதிக்கப்பட்டவர்கள் பெற முடியும்.

### மனித உரிமைகளும், மனித உரிமை நீதிமன்றங்களும்

மனித உரிமைகள் பற்றிய *1948*-ஆம் ஆண்டு ஐ.நா. சபையின் சர்வதேசப் பிரகடனத்தில் மொத்தம் *30* பிரிவுகளில் விவரிக்கப்பட்டுள்ளது. இந்திய நீதிமன்றங்களில் அமுல்படுத்தக்கூடிய சர்வதேசப் பிரகடனங்கள் அல்லது இந்திய அரசியல் சட்டம் உத்திரவாதம் செய்துள்ள தனி நபரின் வாழ்வுரிமை, சுதந்திரம், சமத்துவம், மாண்பு ஆகியவை மனித உரிமைகள் என சட்டம் வரையறுக்கிறது.

மனித உரிமைகள் மீறப்படும்பொழுது இந்திய அரசியல் சட்டம் பிரிவு *14*-லிருந்து *24* வரை உள்ள பிரிவுகளின் கீழ் உயர்நீதிமன்றம் அல்லது உச்சநீதிமன்றம் மூலமேதான் நிவாரணம் பெற முடியும் என்ற நிலையில் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக நிவாரணம் பெற இயலாத சூழ்நிலைதான் இருந்து வந்தது. மாறாக மாவட்டம் தோறும் மனித உரிமை நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருப்பதால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிக்கப்பட்டவர்கள் உடனடி நிவாரணம் பெற வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தலைமை குற்றத்துறை நடுவர் மன்றமே மனித உரிமை நீதிமன்றமாக செயல்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் புகார்களை இச்சட்டத்தின் அத்தியாயம் *3*, பிரிவு *12 (அ) (1) (2)* -ன் கீழ் மனித உரிமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

நீதிமன்றுா் மூலம் நிவாரணம் கோரும் அதே நேரத்தில் தேசிய மற்றும் மாநில மனித உரிமை ஆணையத்திற்கு சட்டப்பிரிவு *12*-ன் கீழ் புகார் மனுக்களை அனுப்பி வைக்க வேண்டும்.

**மனித உரிமைகள் யாரால் மீறப்படுகிறது?**

பெரும்பாலும் மனித உரிமை மீறல் செயல்களில் ஈடுபடுபவர்கள் காவல்துறை, இராணுவம், துணை இராணுவம், சிறை நிர்வாகம் ஆகிய துறைகளைச் சார்ந்தவர்களே.

காவல் நிலைய மரணங்கள், காவல் நிலைய கற்பழிப்புகள், காவல்துறை அத்துமீறல், சித்திரவதைகள், பெண்களை இழிவுபடுத்துதல், .ராணுவத்தின் அத்துமீறல்கள் ஆகிய செயல்கள் மூலம் மனித உரிமைகள் பறிக்கப்படுகிறது. இவை தவிர ஆதிக்க சக்தியாக உள்ள ஒரு சில தனி நபர்கள் மூலமும் மனித உரிமைகள் பறிக்கப்படுகிறது. மேற்கண்டவர்களின் அத்துமீறல்களை தண்டிப்பதற்கு சாதாரண சட்டங்கள் பயன் அளிக்காத போதுதான் மனித உரிமை பாதுகாப்புச் சட்டம் நமக்கு உதவி செய்கிறது.

மனித உரிமையை மீறுபவர்கள் செல்வாக்கு பெற்றவர்களாக இருந்தால் பெரும்பாலும் தப்பித்து விடுகின்றனர். ஒருவேளை அவர்கள் தண்டிக்கப் பெற்றாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் ஏதும் கிடைப்பதில்லை. ஒருவர் காவல் நிலையத்தில் படுகொலை செய்யப்பட்டால், கொலைசெய்த காவலர்களை இடைநீக்கம் செய்தோ, பணி நீக்கம் செய்தோ, சிறையிலடைத்தோ தண்டித்து விட்டால் சட்டத்தின் பணி முடிவடைந்து விட்டதாகக் கூற முடியுமா? கொலையுண்டவரின் குடும்பத்தினருக்கு நிவாரணம் அளித்தால்தான் சட்டத்தின் பணி நிறைவு பெறுவதாகக் கருத முடியும்.

**மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்படுபவர்கள்**

பெரும்பாலும் அரசியல் மற்றும் சமூக இயக்கங்களைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள், குழந்தைகள், அகதிகள் ஆகியவர்களே மனித உரிமை பறிக்கப்படுவதால் பாதிக்கப்படுகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்ற பெயரில் அமுல்படுத்தப்படும் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவால் நாட்டில் அரசியல் - பொருளாதார - சமூக நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன. நாணயத்தின் மதிப்பு நாளுக்குநாள் சரிந்து வருகிறது. இலட்சக் கணக்கான மக்கள் வேலையிழந்து, வாழ வழியின்றி வறுமைப்பிடியில் தள்ளப்படுகின்றனர். இனி வாழ்வுரிமைக்கான மக்களின் போராட்டங்களும் அரசின் அடக்குமுறைகளும் அதிகரிக்கும்.

சாதி-மத - இன-மொழி - நில அடிப்படையில் மக்கள் பிளவுபடுத்தப்பட்டு, பாரபட்சமாக நடத்தப்படுவதால் சமூகத்தில் எப்பொழுதும் பதற்றம் நிலவி வருகிறது. பெண்கள் மீதான வன்முறைகளும், சுற்றுச் சூழல் சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன . சாதி-மத வெறியர்களின் ஆதிக்கமும் அடக்குமுறைகளும் அவற்றிற்கெதிரான ஒடுக்கப்பட்ட - சிறுபான்மை மக்களின் போராட்டங்களும் இனி தவிர்க்க முடியாதவை.

இத்தகைய சமூகச் சூழலில் அப்பாவிகள் காரணம் ஏதும் இன்றி கைது செய்யப்படுவதும் சிறையிலடைக்கப்படுவதும் அதிகரிக்கும். அடக்குமுறைக்கு எதிராக அமைப்பாக சேர்வதற்கும், அமைதியாக கூடுவதற்கும், கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்குமான சுதந்திரம் மறுக்கப்படும். *1995-96* ஆம் ஆண்டைவிட *1966-97*-ம் ஆண்டில் தேசிய மனித உரிமை ஆணையத்திற்கு வந்துள்ள மனித உரிமைமீறல் தொடர்பான புகார்களும் காவல் நிலைய/சிறைச்சாலை கொலைகளும் இரு மடங்கு அதிகரித்திருப்பதை வைத்துப் பார்க்கும்பொழுது மேற்கண்ட நெருக்கடிகளின் விளைவை இப்பொழுதே உணர முடிகிறது.

சட்டத்தின் ஆட்சி செயலிழக்கும்பொழுது மனித உரிமைகளும் பறிக்கப்படுகின்றன. ஒருவரின் வாழ்வுரிமை, சுதந்திரம், சமத்துவம், மாண்பு ஆகியவை பறிக்கப்படுமானால் மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நியாயமும் நிவாரணமும் பெற முயல வேண்டும்.

போக்குவரத்துச் சாலைகள், குடிநீர் வசதி, மாசுபடாத சுற்றுச் சூழலோடு வாழ்வதற்கு சூழலை மாசுபடுத்தும் ஆலைகளை மூடுதல், அதிகச் செலவின்றி மருத்துவ வசதி, அனைவருக்கும் கல்வி, திறந்த சாக்கடைகள் - குப்பைக் குவியல்கள் - குண்டும் குழியுமான சாலைகளை சரி செய்தல், கழிப்பிட வசதி போன்றவை வாழ்வுரிமை தொடர்பான கோரிக்கைகளாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**புகார் அனுப்பும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை**

சம்பவம் நடந்த உடன் புகார்களை அனுப்ப வேண்டும். தவறும் பட்சத்தில் ஒரு ஆண்டுக்குள் புகார் அனுப்பப்பட வேண்டும். புகார் எந்த மொழியிலும் அனுப்பலாம். ஆங்கிலத்தில் அனுப்புவது உடனடி நடவடிக்கைக்கு ஆவண செய்யும். எழுத்து மூலமாகவோ, ஃபேக்ஸ் மூலமாகவோ புகார் அனுப்பலாம். எழுத்து மூலமாக அனுப்பும்போது நான்கு நகல்கள் அனுப்பப்பட வேண்டும். புகார் கொடுப்பவரின் முகவரி, மனித உரிமையை மீறும் அதிகாரி, சாட்சிகளின் முகவரி ஆணையுறுதியுடன் (Affidavit) புகார் தொடர்பான ஆவணங்கள் (புகைப்படங்கள், மருத்துவச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் இதர) சம்பவ இடம், தேதி, நேரம் மற்றும் இதர விவரங்கள் அனைத்தும் புகாரில் இணைக்கப்பட வேண்டும். சட்ட நுணுக்கம் தெரிந்த வழக்கறிஞர் துணையுடன் புகார் அனுப்புவது சிறந்தது.

**புகார் அனுப்ப வேண்டிய முகவரி:**

தலைவர்,
தேசிய மனித உரிமைகள் ஆணையர்,
சர்தார் பட்டேல் பவன், நாடாளுமன்றத் தெரு,
புதுடெல்லி - *110 001.*
தொலைபேசி : *(011) - 311560, 3348477* ஃபேக்ஸ் *(011) 3340016*

தமிழகத்தில் மாநில மனித உரிமைகள் ஆணையம் நியமிக்கப்பட்டு *17-4-1997* முதல் இயங்கி வருகிறது. புகார்களை மாநில மனித உரிமை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்கலாம்.

**மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் முகவரி:**

தலைவர்,
மாநில மனித உரிமைகள் ஆணையம்,
சேப்பாக்கம்,
சென்னை - *600 005.*

உலக மனித உரிமை நாளையொட்டி மாநில மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள விளம்பரம் கீழே தரப்பட்டுள்ளது. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உதவியை நாடுவோருக்கு இவை பெரிதும் உதவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உலக மனித உரிமை நாள் - 10-12-1998**
**மாநில மனித உரிமைகள் ஆணையம்,**
**சேப்பாக்கம், சென்னை - 5.**

மனிதன் தன் குணங்களை மாற்றலாம். ஆனால் தன் உரிமைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அதே போல், சக மனிதன் உரிமைகளை அவன் பறிக்கவும் முடியாது. கூடாது. இதுவே மனித உரிமைகளின் அடிப்படைத் தத்துவம்.

**மாண்புமிகு நீதியரசர். எஸ் நைனார்சுந்தரம்,**
தலைவர், மாநில மனித உரிமைகள் ஆணையம்.

பலவிதமான மொழி, மதம், கலாச்சாரம் கலந்துள்ள நம் நாட்டில் ஏற்றத்தாழ்வு இருப்பது இயற்கை, இருப்பினும், அரசியல் சாசனத்தில் அனைவருக்கும் சம உரிமை அளிக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரையும் சம உரிமையுடன் நடத்துவதாகக் கூறிக் கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம்.

இந்நிலையிலும் தமிழக அரசு, தீண்டாமை ஒழிப்பு, கலப்புத் திருமணம், சமத்துவபுரம் ஆகிய சீரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தி இந்தியாவுக்கே முன்னோடியாக விளங்குகிறது.

**மாண்புமிகு நீதியரசர். கே. சாமிதுரை,**
உறுப்பினர். மாநில மனித உரிமைகள் ஆணையம்.

இந்நாளில் ஒவ்வொரு தனி மனிதனின் உரிமைகளையும் பேணவும், பாதுகாக்கவும், மதிக்கவும் நாம் மறு அர்ப்பணம் செய்துகொள்வோம். மேலும் நமது நாட்டு மக்களின் உரிமைகளை மதிக்கும் வகையான ஒரு கலாச்சாரத்தை வளர்த்துக் கொள்வோம்.

**மாண்புமிகு. திரு. ரத்தினசாமி,**
உறுப்பினிர், மாநில மனித உரிமைகள் ஆணையம்.

நமது நாட்டின் பாரம்பரியத்தில் இதிகாசங்களும், இலக்கியங்களும் கணக்கிலடங்கா, இவைகளில் மனிதாபிமானமும், மனித உரிமைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதில் ஐயப்பாடு இல்லை. *1948* டிசம்பர் திங்கள் பேரவைத் தீர்மானம் செயல்படுத்தி *50* ஆண்டுகளுக்குப் பின்னரும், உரிமைக்கும், நியாயத்திற்கும் போராட்டம் இன்னமும் நடக்கிறது. மனித உரிமைப் பேரவை தீர்மானத்தை முழுமையாகப் பயனடைய வேண்டுமென்றால் அனைவரும் அதை சமமாக பிரயோகப்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு. திருமதி. எம். சுசீலாராஜ்**
உறுப்பினர், மாநில மனித உரிமைகள் ஆணையம்.

சமுதாயத்தில் ஒவ்வொருவரும் மனித உரிமைகள் பண்பாட்டினைப் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும். அதில்தான் சமுதாயத்தின் வளர்ச்சியும் வளமையும் அடங்கும்.

**திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.,**
செயலாளர். மாநில மனித உரிமைகள் ஆணையம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் செயல்பாடுகள்

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் *1993*-ன் படி தேசிய அளவில் மனித உரிமைகள் ஆணையம் நிறுவப்பட்டது. அதையொட்டி தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட இவ்வாணையம் *17-4-1997* முதல் இயங்கி வருகிறது

தனி மனிதனின் வாழ்வு, சுதந்திரம், சமத்துவம் மற்றும் மாட்சி (Life/ Liberty, Equality and dignity) ஆகிய உரிமைகளுக்கு எவரேனும் பாதிப்பு விளைவித்தாலோ, பாதிப்புக்குத் துணை போனாலோ, அல்லது அந்த பாதிப்பைத் தடுக்க எந்த அலுவலரேனும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினாலோ, அதை விசாரித்து தொடர்புடையவர் மீது குற்ற நடவடிக்கை மேற்கொள்ளவும், பாதிப்புக்குள்ளானவர்களுக்கு இழப்பீடு வழங்க பரிந்துரைப்பது ஆகும்.

மேற்கண்ட சட்டத்திற்கிணங்க, இவ்வாணையம், தென்மாவட்டக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தொகையை உயர்த்தி வழங்க பரிந்துரை செய்து, அது அரசாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதல் பலன்கள் பெற்றுத்தரப்பட்டுள்ளது.

அது போன்று தருமபுரி விஷச்சாராய நிகழ்வில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கூடுதலாக வழங்கவும், விடுபட்ட இனங்களில் இழப்பீடு வழங்கவும் பரிந்துரை செய்துள்ளது.

இதுதவிர தமிழ்நாடெங்கும் இவ்வாணையம், காவல்துறை, வருவாய்த்துறை, நீதித்துறை போன்ற அரசு துறை அலுவலர்களுக்கு, மனித உரிமைகள் சட்டத்தின் விவரங்களைத் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. மற்றும் அரசுத்துறை மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து மனித உரிமைகள் பற்றிய கருத்தரங்கம் நடத்தி வருகிறது..

மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெற்று, மக்கள் மனித உரிமைகளைப் பேணி பாதுகாப்பதில்தான் மனித உரிமைகள் பற்றிய பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு என்று இவ்வாணையம் உறுதிபடக் கருதுகிறது.

***"மானுடப் பேறு பெற்றோம்***
***மனித உரிமைகள் காப்போம்"***

**திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.,**
செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனித உரிமை பறிக்கப்படுவதால் பாதிக்கப்படுபவர்கள் தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தை நாடினால் உரிய பலன் கிடைக்க வாய்ப்புண்டு. *1966-97*-ம் ஆண்டில் பெறப்பட்ட புகார்களில் *144* காவலர்கள் உட்பட *167* பேர்மீது மனித உரிமைகளை மீறிய குற்றத்திற்காக குற்ற வழக்குத் தொடரவும், *55* வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தலா ரூ. *50,000/-* முதல் ரூ. *150* இலட்சம் வரை நிவாரணம் வழங்கவும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. எனவே, மனித உரிமைகள் பறிக்கப்பட்டால் தனியாகவோ அல்லது மனித உரிமை அமைப்புகள் மூலமாகவோ தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தை அனுகலாம்.

**சில வழிகாட்டும் தீர்ப்புரைகள்**

★ வாழ்வுரிமை என்பது உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவுப் பொருட்களை தேடுவதற்கான நடவடிக்கைகள், வழிமுறைகள் A.I.R. 1955 Cal 98.

★ சட்ட ரீதியாக வழிவகை செய்யாமல் ஒருவருடைய விவசாய நிலத்தை அரசு நிர்வாகம் கைப்பற்றுவது உயிர் வாழும் உரிமையை மீறி செயலாகும். A.I.R. 1995 aP 208

★ விசாரணைக் கைதிகளை கைவிலங்கிட்டு அழைத்துச் செல்வது அவர்களது மாண்பைக் குலைக்கும் செயலாகும்.

A.I.R. 1995 SC 31.

★ பொருத்தமான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வாய்ப்பு அளிப்பதும், குற்ற வழக்குகளை விரைவாக முடிக்கக் கோருவதும் உயிர் வாழும் உரிமையாகும்.

A.I.R. 1992 (3) SCC 700

★ மாசுபடாத தண்ணீரையும், காற்றையும் அனுபவிப்பது உயிர் வாழும் உரிமையாகும் 1991 (1) UJ (SC) 533

★ சிறைக் கைதி உயிர் வாழ்வதற்கு பொருள் ஈட்டவும், அதற்கு ஊதியம் பெறவும் உரிமை உடையவர் A.I.R. 1988 A.P. 295

★ உயிர் வாழும் உரிமை என்பது ஒருவர் தன்னுடைய உடல் உறுப்புகள், கை, கால் ஆகியவற்றை தன்னுடன் வைத்துக் கொள்வதாகும். A.I.R. 1987 SC 2257

★ ஒரு குற்றச் செயலின் புலனாய்விற்காக எந்த வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திரவதை செய்தாலும் அது நீதிக்குப் புறம்பானது. குற்றம் சாட்டப்பட்ட நபரைக் காவல் நிலையத்தில் சித்ரவதை செய்வது, அந்த நபருக்கு அரசில் சட்டம் வழங்கியுள்ள சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமையையும் மீறிய செயலாகும்.

1995 Cr. L.J. 974 (978) Guj

★ உயிர் வாழும் உரிமை என்பது வாழ்க்கைத் தேவைகளை பெறுவதற்கான உரிமையாகும். வாழ்க்கைத்தேவைக்கான ஆதாரங்கள் இன்றி எந்த ஒரு நபரும் உயிர் வாழ முடியாது. A.I.R. 1986 Sc 180

★ உயிர் வாழும் உரிமை என்பது பணியிடங்களில் சுகாதாரமான சூழ்நிலை, மேம்பட்ட வாழ்க்கை முறை மற்றும் ஓய்வுக்கான அவகாசம் பெறுவதாகும். A.I.R. 1995 Sc 922

★ பொதுக்கூட்டம் நடத்துவதற்கான உரிமையை மறுப்பது மனித உரிமை மீறல் ஆகும். இந்திய அரசியல் சட்டம் பிரிவு *19 (1) (டி)* இன் கீழ் ஒரு இந்திய குடிமகன் இந்தியா முழுவதும் ஆயுதமின்றி அமைதியாக கூடுவதற்கும் செல்வதற்கும் உரிமை வழங்குகிறது. *(1994*-ல் சுப்பிரமணியசாமி புகார் மீது தேசிய மனித உரிமை ஆணையத்தின் தீர்ப்பு*)*

★ ஒரு மோசடி வழக்கில் தகுந்த சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் விடுதலை செய்யப்பட்ட ஒருவரை சந்தேகப்படும் நபர் பட்டியலில் சேர்த்து காவல்துறை அவரைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வீட்டுக்குத் தேடி வருவதும், தூக்கத்தில் கூட அவரை எழுப்பி விசாரிப்பதும் அவரது வாழ்வுரிமையை பறிக்கும் செயலாகும். A.I.R. 1963 SC 1295

★ எதேச்சதிகாரமாக ஒருவருக்கு கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) வழங்குவது மறுக்கப்படுவதும் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும். A.I.R. 1967 Sc 183.

★ பணிக்குச் செல்லும் பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்துவது பாலியல் சமத்துவ உரிமையை மீறுவதோடு, அவர்களது வாழ்வுரிமை மற்றும் சுதந்திரத்தை பறிப்பதாகும். A.I.R. 1997 SC3011



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்**

**சட்டத்தின் அவசியம்**

என்றைக்கு வர்ணாசிரம தர்மம் உருவாக்கப்பட்டதோ, அன்றே மக்கள் சாதிகளாகப் பிளவுப்படுத்தப்பட்டனர். ஒவ்வொருசாதியினருக்கும் இன்னின்ன வேலைகள் என ஒதுக்கப்பட்டு அவை பல ஆண்டுகளாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவே இந்து தர்மம் என்று பறைசாற்றப்படுகிறது. ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு இந்து மத இழிவுகளிலிருந்து விடுபட்டு கிறிஸ்தவ மதத்திற்கு மக்கள் மாறிய பின்பும் இதே நிலைதான் கிறிஸ்துவ மதத்திலும் நீடிக்கிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களே சாதிய இழிவுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். எப்பொழுதெல்லாம் சாதிய இழிவகளுக்கு எதிராக மக்கள் பேராடினார்களோ, அப்பொழுதெல்லாம் ஆதிக்கச் சாதியினரால் அடக்கி ஒடுக்கப்பட்டனர். தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களின் விளைவாக, அரசு தவிர்க்க முடியாத வகையில் அவர்களுக்கு சில சட்ட ரீதியான பாதுகாப்புகளைக் கொடுத்துள்ளது. குறிப்பாக இம்மக்கள் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்டவைகளில் சலுகைகளைப் பெறுவதற்கு இந்திய அரசியல் சட்டம் உறுதி செய்துள்ளது. ஆனாலும் இந்தியா "சுதந்திரம்" அடைந்து *50* ஆண்டுகள் ஆன பின்பும் கூட தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களில், பெரும்பான்மையினர் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் சமூகக் கலாச்சார மட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாக தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் சாதி இழிவுகளுக்கெதிராக குரல் கொடுக்கின்றனர். இதைப்பொறுத்துக்கொள்ளாத ஆதிக்கச் சாதியினர் மேலும் மூர்க்கமாக அம்மக்கள் மீது பாய்கின்றனர். இத்தகைய ஒடுக்குமுறைகளை தடுத்து நிறுத்தவும், பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறவும் *1989*-ம் ஆண்டு இந்திய அரசு வண் கொடுமை தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. சட்டம் இயற்றப்பட்டு *8* ஆண்டுகள் ஆன நிலையிலும் இச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அரசும், காவல் நிலைய அதிகாரிகளும் காட்டும் அலட்சியத்தால் சட்டத்தின் பலன்களை தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் பெறமுடியாமல் உள்ளனர். ஆதிக்க உயர் சாதியினரின் வர்ணாசிரமக் கொள்கையை கண்டித்துப் பேசினாலே இந்திய தண்டனைச் சட்டம் *153 (ஏ) (பி)* பிரிவுகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை புண்படுத்தியதாக வழக்குத் தொடுக்கும் அரசாங்கம், தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் தாங்கள் இழிவு படுத்தப்படுவது குறித்து புகார் கொடுத்தால் மேற்கண்ட பிரிவில் வழக்கு பதிவு செய்யப்படுவதில்லை என்பதிலிருந்து வன்கொடுமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுப்புச் சட்டத்தின் அவசியத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். மேலும் தீண்டாமைக்கு எதிராக ஏற்கனவே கொண்டுவரப்பட்ட குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை. எனவே இன்றைய சூழ்நிலையில் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் முக்கிய அம்சங்களை நுணுக்கமாகத் தெரிந்து கொண்டு அதற்காகப் போராடுவதன் மூலம் மட்டுமே சட்டத்தின் பலன்களை பாதிக்கப்பட்டவர்கள் பெற முடியும்.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களில் ஒருவரை அருவெறுப்பான பொருட்களைக் குடிக்கவோ உண்ணவோ வலியுறுத்துவதும், ஒருவரது வாழ்விடத்தை அசுத்தப்படுத்துவதும். ஒருவரது மாண்பினை இழிவுபடுத்தும் வகையில் உடைகளை அகற்றி அலங்கோலப்படுத்தி பிறர் காண அழைத்துச் செல்வதும், ஒருவரது நிலத்தை பறித்துக் கொள்வதும், ஒருவரது நிலத்தில் அல்லது இருப்பிடத்தில் உள்ள பொருட்களை அபகரிப்பதும், நீர்வழி மீதுள்ள உரிமையை மறுப்பதும், தேர்தல்களில் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வாக்களிக்க வேண்டும் என்றோ அல்லது வாக்களிக்கக் கூடாது என்றோ ஒருவரை மிரட்டுவதும், அலைக்கழிக்க வேண்டும் என்ற தீய நோக்குடன் ஒருவர் மீது பொய்யான உரிமை இயல் அல்லது குற்ற இயல் வழக்குகளைத் தொடர்வதும், ஒருவரை பொது இடத்தில் தாழ்வுபடுத்தும் நோக்குடன் அவமானப்படுத்துவதும், ஒரு பெண்ணுக்கு மானக்கேடு அல்லது நாணக்குலைவு ஏற்படுத்துவதும், ஒரு பெண்ணை ஏமாற்றி பாலுணர்வு செயல்களுக்கு பயன்படுத்துவதும், ஒருவரது நீர் ஆதாரங்களைக் கெடுப்பதும் மாசுபடுத்துவதும், ஒருவர் பொது இடத்தை பயன்படுத்துவதை தடை செய்வதும், குடியிருக்கும் இடத்தை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்துவதும் ஆகிய மேற்கண்ட செயல்களில் ஈடுபடும் ஆதிக்கச் சாதியினர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு *6* மாதம் முதல் *5* ஆண்டுகள் வரை தண்டனை வழங்கவும், அபராதம் விதிக்கவும் இச்சட்டத்தின் பிரிவு *3(1)* வகை செய்கிறது.

குற்றமற்ற தாழ்த்தப்பட்ட பழங்குயிடின மக்களுக்கு எதிராக பொய்ச் சான்று அளிப்பதும் அல்லது புனைவதும், ஒருவரின் சொத்து மற்றும் வழிபாட்டு இடம், வாழும் இடத்தை தீயிட்டோ அல்லது வெடிபொருள் பயன்படுத்தி சேதம் விளைவித்தோ, சொத்தழிப்பு செய்வதும், மேற்கண்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டும் குற்றவாளிகளைக் காப்பதற்காகச் சான்றுகளை மறைப்பதும், பொது ஊழியராய் இருந்து கொண்டு மேற்கண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குற்றச் செயல் செய்வதும் தண்டனைக்குரிய குற்றங்களாக இச்சட்டத்தின் பிரிவு *3(2)* வகை செய்கிறது.

வன்கொடுமை குற்றம் இழைத்த ஒருவர் மீது விசாரணை நடைபெறும்போது அவருடைய அசையும் மற்றும் அசையாத் சொத்துக்களை பற்றுகை (Attachment Before Judgement) செய்வதற்கும், மேலும் வன்கொடுமை குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றச் செயலை இழைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கும் இச்சட்டப் பிரிவு *7* வகை செய்கிறது. ஆதிக்கச் சாதியை சேர்ந்த பொது ஊழியர் ஒருவர் இச்சட்டத்தின் படி அவர் புரிய வேண்டிய கடமைகளை, வேண்டும் என்றே புறக்கணிப்பாராயின் அவரை *6* மாதம் முதல் *1* ஆண்டு வரை சிறையில் வைக்க இச்சட்டத்தின் பிரிவு *4* வகை செய்கிறது.

மேற்கண்ட குற்றச் செயல்களை ஒருவர் இழைக்கக் கூடும் என சிறப்பு நீதிமன்றம் தெளிவுறக் காணுமிடத்து அவரை அவ்வூரிலிருந்து குறிப்பிட்ட காலம் வரை வெளியே இருக்க வேண்டுமென உத்தரவிடலாம் என இச்சட்டத்தின் பிரிவு *10* கூறுகிறது.

மேறகண்ட உத்தரவை மீறி, காலக்கெடு முடிவதற்குள் அந்நபர் மீண்டும் பழைய இடத்திற்கு வருவாராயின் அவரைக் கைது செய்ய இச்சட்டத்தின் பிரிவு *11* வகை செய்கிறது.

மேற்கண்ட குற்றச் செயல் இழைக்கின்ற நபர்கள் எதிர்நோக்கும் பிணை *(முன்ஜாமீன்)* பெற முடியாது என்று இச்சட்டத்தின் பிரிவு *18* கூறுகிறது.

மேற்கண்ட குற்றத்தைப் புரியும் எந்த நபரும் குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம் *1958*-ன் கீழ் மன்னிப்புப் பெற முடியாது என இச்சட்டத்தின் பிரிவு *19* கூறுகிறது.

**சட்டத்தின் நடைமுறை**

தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் மீது இழைக்கப்படும் வன் கொடுமைகளை விசாரிப்பதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றமாக (Special Court) அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் இச்சட்டத்தின் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை புலனாய்வு செய்வதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் துணை கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத காவல் அதிகாரி ஒருவரின் பொறுப்பின் கீழ் தனிக்காவல் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாதிக்கப்பட்டவர்கள், வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, சம்பவம் குறித்த இடம், நாள், நேரம், பாதிப்புக்கு உள்ளானவது விவரம், பொருள் சேதம் பற்றிய விவரம், குற்றம் இழைத்தவர்களின் விவரம், சாட்சிகளின் விவரம் பாதிப்பின் அளவு, ஆகிய விவரங்களுடன் நேரடியாக மேற்கண்டக் காவல் பிரிவில் புகார் கொடுக்க வேண்டும்.

புகாரைப் பெற்றுக் கொண்ட காவல் அதிகாரி புகாருக்கான ரசீதையும், புகார் நகலையும் புகார்கொடுத்தவருக்கு உடனடியாக இலவசமாகத் தர வேண்டும். காவல் அதிகாரி புகாரை எடுத்துக் கொள்ள மறுத்தால், அப்புகாரை பதிவு அஞ்சல் மூலம் அம்மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

அவ்வாறு அனுப்பப்பட்ட பிறகும், குற்றவாளிகள் மீது வழக்கு தொடுக்கப்படவில்லை என்றால் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கை பதிவு செய்ய பரிந்துரை கோரலாம். அல்லது உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை மூலமும் வழக்கை பதிவு செய்ய உத்தரவு கோரலாம்.

சிறப்பு நீதிமன்றம் பரிந்துரை செய்த பின்பும், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் வழக்கை கைவிட்டாலும் அல்லது கொடுக்கப்பட்டப் புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சிறப்பு நீதிமன்றத்தில் தனி வழக்கு (private complaint) ஒன்றைத் தொடுக்கலாம்.

சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கை நடத்தும் அரசு வழக்கறிஞரின் மீது நம்பிக்கையில்லை என்றால், திறமையான மூத்த வழக்கறிஞர் ஒருவரை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குகளை நடந்த அமர்த்திக் கொள்ளலாம்.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர், அவரை சார்ந்திருப்பவர் மற்றும் சாட்சிகளுக்கு, வழக்கு விசாரணை அல்லது புலனாய்வு நடைபெறும் இடத்திற்கு அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து வந்து போவதற்கு ரயில் அல்லது பேருந்து அல்லது வாடகை கார் கட்டணம், மேற்கண்டவர்களுக்கு தினசரி பராமரிப்புச் செலவு, மருத்துவச் செலவு ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் அல்லது துணை கோட்ட நடுவர் அல்லது காவல் துறை துணை கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத காவல் அதிகாரி மூலம் வழங்கவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு பயணப்படி, தினப்படி, பராமரிப்பு மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அல்லது உடனடி நிவாரணத் தொகை அல்லது நட்ட ஈடு, குறித்த நேரத்தில் கிடைக்காத பட்சத்தில் சிறப்பு நீதி மன்றத்தின் மூலம் பரிகாரம் தேட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு நிவாரண தொகை வழங்கவேண்டும்.

**நிவாரணம் பட்டியல்**
**நிவாரணத் தொகைக்கான நடைமுறைகள்**

| குற்றச்செயல் | குறைந்தபட்ச நிவாரணத்தொகை |
|---|---|
| *1.* அருவருப்பான அல்லது உண்ணத்தகாத பொருளை குடிக்குமாறு அல்லது உண்ணுமாறு பலவந் தப்படுத்துதல் (பிரிவு *3(1)* (i)) | குற்றச் செயலின் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்தும், உடல்ஊறு, அவமதிப்பு, தரக்குறைவு ஆகியவற்றால் பாதிக்கப்படுபவருக்கு ஈடு செய்யும் வகையிலும் ரூ*25,000/* அல்லது அதற்கு அதிகமாக தொகை |
| *2.* உடல் ஊறு,. அவமதிப்பு அல்லது தொல்லை விளை வித்தல் (பிரிவு *3*(i) (ii)) | குற்றச் செயலின் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்தும், உடல் ஊறு,அவமதிப்பு, தரக்குறைவு ஆகியவற்றால் பாதிக்கப்படுபவருக்கு ஈடு செய்யும் வகையிலும் ரூ. *25,000* அல்லது அதற்கு அதிகமான தொகை. |
| *3.* இழிவுபடுத்தும் செயல் (பிரிவு *3 (1)* (iii) | கீழ்கண்டவாறு தொகை வழங்கப்பட வேண்டும்.<br>*1.* குற்றப் பத்திரிகை நீதிமன்றத்திற்கு அனுப்பும் போது *25* சதவிகிதம்.<br>*2.* குற்றம் சாட்டப்பட்டவர் குற்றவாளி என்று நீதிமன்றம் முடிவு செய் யும்போது *75* சதவிகிதம். |
| *4.* நிலம் முதலானவற்றை அநியாய முறையில் ஆக்கிரமிப்பு செய்தல் அல்லது பயிரிடுதல் பிரிவு (3 (i) (iv) ) | குற்றச் செயலின் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பொருத்து ரூ. *25,000/-* அல்லது அதற்குஅதிக மான தொகை, தேவைப்படுமானால் நிலம், இருப்பிடம், நீர், வசதி ஆகியவை அரசு செலவில் மீட்டுத் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| | தரப்பட வேண்டும். நீதிமன்றத்திற்கு குற்றப் பத்திரிக்கையை அனுப்பும் போது முழுத்தொகையும் வழங்கப்பட வேண்டும். |
| *5.* நிலம், இருப்பிடம் மற்றும் நீர் வசதி தொடர்பாக பிரிவு *3(1)* (v) | குற்றச் செயலின் இயல்பு மற்றும் 'முக்கியத்துவத்தைப் பொறுத்து குறைந்தது ரூ. *25,000/-* அல்லது அதற்கு அதிகமான தொகை, தேவைப்படுமானால் நிலம், இருப்பிடம், நீர் வசதி ஆகியவை அரசு செலவில் மீட்டுத் தரப்பட வேண்டும். நீதி மன்றத்திற்கு குற்றப் பத்திரிக்கையை அனுப்பும் போது முழுத்தொகையும் வழங்கப்படவேண்டும். |
| *6.* பேகார் முறையிலோ அல்லது வலுக்கட்டாயமாகவோ வேலை பிரிவு *3 (1)* (vi) | பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் ரூ.*25,000/-* முதல் தகவல் அறிக்கை நிலையில் *25* சதவிகிதமும் கீழ் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் *75* சதவிகிதம் வழங்கப்படவேண்டும். |
| *7.* வாக்களிக்கும் உரிமை தொடர்பாக பிரிவு *3(1)* (vii) | குற்றச் செயலைப் பொறுத்தும் அதன் இயல்பு மற்றும் முக்கியத்துவத்தைப் பொறுத்தும் பாதிக்கப்பட்ட ஒவ்வொருக்கும் ரூ. *20,000/-* வரை. |
| *8.* பொய்யான தீயநோக்குடைய அல்லது அலைக்கழிக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள் பிரிவு *3 (1)* (viii) | ரூ. *25,000/-* அல்லது வழக்கு தொடர்பான உண்மையான செலவு மற்றும் சேதத்தை ஈடு செய்தல் இவற்றில் எது குறைவோ அத்தொகையானது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான விசாரணை முடிந்தபின் வழங்கப்பட வேண்டும். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| *9.* தவறான அல்லது அற்பமான தகவல் பிரிவு *3 (1)* (ix) | ரூ. *25,000/-* அல்லது வழக்கு தொடர்பான உண்மையான செலவு மற்றும் சேதத்தை ஈடு செய்தல் இவற்றில் எது குறைவோ அத்தொகையானது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான விசாரணை முடிந்தப்பின் வழங்கப்பட வேண்டும். |
| *10.* தாழ்வு படுத்துதல் பயமுறுத் துதல் மற்றும் அவமானப்படுத்து தல் பிரிவு *3 (1)* (x) | குற்றச்செயல் மற்றும் அதன் இயல் பைப் பொறுத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ*25,000/-* வரை இதில் *25* சதவிதத் தொகையானது குற்றப் பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போதும் மீதித் தொகை குற்றம் நிரூபிக்கப்பட்ட பின்பும் வழங்கப்பட வேண்டும். |
| *11.* பெண் ஒருவருக்கு மானக் கேடு ஏற்படுத்துதல் பிரிவு *3(1)* (xi) | குற்றச் செயலில் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. *50,000/-* இதில் *50* சதவிகித தொகை மருத்துவ பரிசோதனை முடிந்த பின்பும் மீதமுள்ள *50* சதவிகித தொகை வழக்கு விசாரணை முடிந்த பின்பும் வழங்கப்பட வேண்டும். |
| *12.* பெண் ஒருவரை தன் பாலுணர்வு செயல்களுக்கு பயன்படுத்துவாராயின் பிரிவு *3 (1)* (xii) | குற்றச் செய்லில் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ*50,000/-* இதில் *50* சதவிகிதத் தொகை மருத்துவ பரிசோதனை முடிந்த பின்பும் மீதமுள்ள *50* சதவிகித தொகை வழக்கு விசாரணை முடிந்த பின்பும் வழங்கப்பட வேண்டும். |
| *13.* நீரைக் கெடுப்பாராயின் | ரூ. *1,00,000/-* வரை அல்லது |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| பிரிவு *3 (1)* (xiii) | கெடுக்கப்பட்ட நீரை சுத்தமாக்கி இயல்பு நிலைக்கு மீட்டுத் தருவதற்கான முழுச்செலவு. இத்தொகையானது மாவட்ட நிர்வாகம் உகந்தது என்று கருதும் கட்டத்தில் வழங்கப்பட வேண்டும். |
| *14.* வழக்கமான பாதையில் சென்று வருவதற்கான உரிமை மறுக்கப்பட்டால் பிரிவு *3(1)* (xiv) | ரூ. *1,00,000/-* வரை அல்லது பாதையில் செல்வதற்கான உரிமையை மீட்டுத்தர ஆகும் முழுச் செலவு, ஏற்பட்ட இழப்புகளுக்கு முழு நஷ்ட ஈடு, இதில் *50* சதவிதத் தொகை நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிக்கையை தாக்கல் செய்யும் போதும் *50* சதவிகிதம் தொகை கீழ் நீதிமன்றத்தில் தண்டனை அளிக்கப்படும் போதும் வழங்கப்பட வேண்டும் |
| *15.* குடியிருக்கும் இடத்தை விட்டு ஒருவர் விரட்டப்படும் போது பிரிவு *3(1)* (xv) | குடியிருக்கும் இடத்தை / உரிமையை மீட்டுத் தருதலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூ. *25,000/-* நஷ்ட ஈடாக வழங்குதலும், சேதமடைந்தால் அரசு செலவில் வீட்டைத் திரும்பக் கட்டித் தருதலும் கீழ் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்போது முழுத் தொகையும் வழங்கப்படவேண்டும். |
| *16.* பொய்சான்றளித்தல் பிரிவு *3(2) (1)* மற்றும் (ii) | குறைந்தபட்சமாக ரூ.*1,00,000/-* அல்லது இழப்பிற்கும், அடைந்த துன்பங்களுக்கும் முழு நஷ்ட ஈடு *50* சதவிகிதத் தொகையானது குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது *50* சதவிகிதத் தொகை கீழ் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படும் போதும் வழங்கப்பட வேண்டும். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| *17.* இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட கால அளவிற்கு சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கப்படத்தக்க குற்றச் செயல்கள் எத்தனையும் செய்வாராயின் பிரிவு *3(2)* (v) | குற்றச் செயலின் இயல்பு மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கும் குறைந்தபட்சமாக ரூ, *50,000/-* மற்றபடி இப்பட்டியலில் குறிப்பாக கொடுப்பதற்கு ஏற்பாடு இருந்தால் இத்தொகை வேறுபடும். |
| *18.* அரசு ஊழியர் ஒருவரால் பழிவாங்கப்பட்டால் பிரிவு *3(2)* (vii) | ஏற்பட்ட பாதிப்புகள் அல்லது இழப்புகள் அல்லது தொந்தரவுகளுக்கு முழுமையான நஷ்ட ஈடு, குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது *50* சதவிகிதமும் கீழ் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்படும் போது *50* சதவிதமும் வழங்கப்பட வேண்டும். |

*19.* **ஊனம்**

உடல் ஊனம் மற்றும் மனக் கோளாறு குறித்த வரையறைகள் மத்திய நலவாழ்வு அமைச்சகம் *6-8-1986* நாளிட்ட வெளியிட்ட அரசாணை எண் *4-2/83*H.W.III-ல் தரப்பட்டுள்ளது அறிக்கை நகல் ஒன்று இணைப்பு ii-ல் உள்ளது.

அ. **100 சதவிகித உடல் ஊனம்.**

| | |
|---|---|
| *(1)* ஒரு குடும்பத்தில் உள்ள வருவாய் ஈட்டாதவருக்கு ஏற்படுத்தினால் | வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சமாக ரூ. *1,00,000/-* இதில் *50 %* சதவிகிதம் முதல் தகவல் அறிக்கையின் போதும் *25* சதவிகிதம் குற்றப் பத்திரிக்கை தாக்கலின் போதும் *25* சதவிகிதம் கீழ் நீதி மன்றத்தில் தண்டனை |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| | அளிக்கப்படும் போதும் வழங்கப்பட வேண்டும். |
| *(2)* ஒரு குடும்பத்தில் உள்ள வருவாய் ஈட்டும் நபருக்கு ஏற்படுத்தினால் | பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்சமாக ரூ. *2,00,000/-* இதில் *50* சதவிகிதம் முதல் தகவல் அறிக்கை /மருத்துவ பரிசோதனை நிலையிலும் *25* சதவிகிதம் குற்றப்பத்திரிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போதும் *25* சதவிகிதம் கீழ் நீதிமன்றத்தில் தண்டிக்கப்படும் போதும் வழங்கப்பட வேண்டும். |
| ஆ. உடல் ஊனம் *100 %* குறைவாக இருந்தால் | மேற்கண்ட (i) மற்றும் (ii)-ல் குறிப்பிட்ட அளவுத் தொகையை ஊன சதவிகித அளவுக்கேற்றார் போல் குறைக்கப்பட்டு, மேற்சொன்ன நிலைகளிலேயே வழங்கப்படுதல் வேண்டும். இருப்பினும் வருவாய் ஈட்டாத நபருக்கு ரூ.*15,000/-* மும் வருவாய் ஈட்டும் நபருக்கு ரூ. *30,000/* க்கும் குறையாமல் வழங்க வேண்டும். |
| ***20.* கொலை/இறப்பு** அ. ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டாத உறுப்பினர் | ஒவ்வொரு வழக்கிற்கும் குறைந்தது ரூ. *1,00,000/-* இதில் பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் *75* சதவிகிதம் கீழ், நீதிமன்றத்தில் தண்டனை அளிக்கப்பட்ட பின்னர் *25* சதவிகிதம் வழங்கப்பட வேண்டும். |
| ஆ. ஒரு குடும்பத்தில் வருவாய் ஈட்டும் ஊறுப்பினர் | ஒவ்வொரு வழக்கிற்கும் குறைந்தது ரூ. *2,00,000/-* இதில் பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் *75* சதவிகிதம் கீழ் நீதிமன்றத்தில் தண்டனை அளிக்கப்பட்ட பின்னர் *25* சதவிகிதமும் வழங்கப்பட வேண்டும். |
| *21.* கொலை, மரணம், கொன்று | மேற்கண்டவாறு நிவாரணத்தொகை |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | |
|---|---|
| குவித்தல், கற்பழித்தல், பலர் சேர்ந்து கற்பழித்தல், நிரந்தர ஊனம் மற்றும் கொள்ளையால் பாதிக்கப்பட்டோர் | வழங்கப்படுவதோடு, கீழ்க்கண்டவாறு நிவாரணங்களையும் வன்கொடுமை நடந்து மூன்று மாதத்திற்குள் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். *(1)* மரணமடைந்த எஸ்.சி, எஸ்டியின் ஒவ்வொரு விதவைக்கும் அல்லது சார்ந்தவர்களுக்கும் மாதம் ரூ. *1,000/-* வீதம் உதவித் தொகை அல்லது மரணமடைந்தவரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு வேலை அல்லது விவசாய நிலம், ஒரு வீடு தேவைப்படின் விலைக்கு வாங்கியாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். *(2)* பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் பராமரிப்பில் முழுச்செலவு. குழந்தைகள் ஆசிரம பள்ளிகளிலோ, வரைபடங்களிலோ சேர்க்கப்படலாம். *(3)* பாத்திரங்கள், அரிசி, கோதுமை, பருப்பு, பயிறுகள், முதலியவை மூன்று மாதங்களுக்கு வழங்க ஏற்பாடு. |
| *22.* முற்றிலுமாக அழிக்கப்பட்ட/ எரிக்கப்பட்ட வீடுகள் | அரசாங்க செலவில் செங்கல் அல்லது கருங்கல்லால் ஆன வீட்டினை எங்கு எரிக்கப்பட்டதோ அல்லது அழிக்கப்பட்டதோ அதே இடத்தில் மீண்டும் கட்டித் தருதல் அல்லது குடியிருக்க ஏற்பாடு செய்தல். |

**புகார் கொடுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை**

பாதிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்று அவசியம் தேவை. எனவே புகார் கொடுக்கும்போது சாதிச் சான்றிதழின் நகலை இணைத்துக் கொடுக்க வேண்டும். ஆதிக்கச் சாதியினரால் வன்கொடுமைக்கு உள்ளாக நேரிடும் பகுதிகளில் வாழும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு தாழ்த்தப்பட்ட பழங்குடியினத்தை சேர்ந்தவர்கள், உடனடியாக வட்டாட்சியரிடம் மனு செய்து சாதிச் சான்றிதழை வாங்கி வைத்துக் கொள்ளவது

நல்லது. சம்பவம் நடந்த பிறகு உடனடியாக சாதிச் சான்றிதழ் பெறுவது என்பது இயலாத காரியம். சாதிச் சான்றிதழ் வாங்கி வைத்துக் கொள்ளவில்லை என்றால் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வது தாமதமாகும். இத்தாமத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் உரிய நேரத்தில் கிடைக்காது.

சம்பவத்திற்கான சாட்சிப் பட்டியல் தரும் பொழுது நேர்மையான, அதே நேரத்தில் காவல்துறை மற்றும் ஆதிக்கச் சாதியினரின் மிரட்டலுக்கு அஞ்சாதவர்களை சாட்சியாகத் தருவது நல்லது. மேலும் சாட்சிகளில் சமூக, ஜனநாயக உணர்வு கொண்ட தாழ்த்தப்பட்ட பழங்டியினத்தைச் சாராத பிற சாதியினர் குறைந்தது 4 பேர் இருப்பது வழக்குக்கு வலு சேர்க்கும். அவ்வாறு சேர்க்கப்படும்பிற சாதியினரும், சாதிச் சான்றிதழ் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும். வழக்கு விசாரணையின் போது இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சம்பவம் நடந்த இடம், தனிநபர் மற்றும் பொருட்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் சேதாரம் பற்றி புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். புகைப்படத்தின் படச்சுருளை பாதுகாப்பாக வைத்திருந்து தேவைப்படும்போது நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

பாதிப்புக்கு உள்ளான பொருட்களை பாதுகாப்பாக வைத்திருந்து விசாரணையின் போது காவல்துறை மற்றும் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

சம்பவம் பற்றிய புகாரை அந்தந்த மாவட்டத் தலை நகரங்களில் செயல்படும் குடியுரிமை பாதுகாப்பு காவல் பிரிவிடம் குறிப்பாக விசாரணை அதிகாரியான துணை கண்காணிப்பாளர் முகவரியிட்டு கொடுக்கவும்.

மேலும், புகார் நகல்களை அந்த மாவட்டத் தலைநகரில் செயல்படும் சிறப்பு நீதிமன்றத்திற்கும், மாவட்ட விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் (மாவட்ட ஆட்சியர்), மாநில விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கும் (முதல் அமைச்சர்) அனுப்ப வேண்டும். வசதி இருந்தால் தந்தி, பேக்ஸ் மூலம் புகார் கொடுக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை தவிர கீழ்க்கண்ட பிரிவுகளுக்கும் நகல்களை அனுப்பி வைக்கலாம்.

1. தலைவர்,
தேசிய மனித உரிமைகள் ஆணையம்,
சர்தார் பட்டேல் பவன்,
நாடாளுமன்றத் தெரு,
புதுடெல்லி - 110 001.
தொலைபேசி - (011) 311560. (011) 338477.
பேக்ஸ் - 011 - 3340016.

2. தலைவர்
தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் ஆணையம்,
சென்னை.

அனைத்து நகல்களையும் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும். பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் தொடுக்கப்படும் வழக்குகள் பிணைவிடாக் குற்றங்கள் என்றாலும் எதிரிகள் சரணடைந்து பிணை பெறுவதற்கு வழி உண்டு. இதனைத் தடுக்க வேண்டும் என்றால் சிறப்பு நீதி மன்றத்திற்கு தந்தி, பதிவு அஞ்சல் மூலம் எதிரிகளை பிணையில் விடக் கூடாது என தெளிவான மறுப்பை உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

மேலும், அவ்வாறு எதிரிகள் சரண் அடைகிறார்களா என்பதை உன்னிப்பாக கவனித்து பிணை மனு விசாரணைக்கு வரும்பொழுது ஊர்வலமாகச் சென்று பிணையில் விடக் கூடாது என்று மனு கொடுக்க வேண்டும். கூடுதலாக வழக்கறிஞர் மூலம் மூன்றாம் நபராக முன்னிலையாகி ஆட்சேபணையைத் தெரிவிக்க வேண்டும். 1

ஒரு வேளை பாதிக்கப்பட்டவருக்குத் தெரியாமல் எதிரிகள் பிணை பெற்று விட்டாலோ அல்லது ஆட்சேபணையை மீறி பிணை பெற்று விட்டாலோ இரு நாட்கள் கழித்து மேலும் பிரச்சனைகள் தொடர்கிறது எனக் கோரி பிணையை ரத்து செய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மனு தாக்கல் செய்ய வேண்டும். 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. 1995 2.L.W. Crl 708
1985 LW. Crl 219
1996 MLJ. Crl 37

2. 1977 Cr. LJ. 46
1975 Cr. LJ. 1416
(1986) 1 Crimes 325
1978 Cr. LJ. (NOC) 58
1989 Cr. LJ. 2016 (Ori)

## சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| A.I.R. | - | All India Reporter |
| Cr. LJ | - | Criminal Law Journal |
| NOC | - | Notes on Cases |
| SCC | - | Supreme Court Cases |
| SC | - | Supreme Court |
| All | - | Allahabad |
| A.P. | - | Andhra Pradesh |
| Bom | - | Bombay |
| Cal | - | Calcutta |
| Del | - | Delhi |
| Gau | - | Gauhathi |
| Guj | - | Gujarat |
| H.P. | - | Himachal Pradesh |
| Ker. | - | Kerala |
| Lah | - | Lahore |
| Mad | - | Madras |
| Mys | - | Mysore |
| Pat | - | Patna |
| Punj | - | Punjab |
| Raj | - | Rajasthan |
| Sim | - | Simla |
| U.P. | - | Uttar Pradesh |
| இ.த.ச. | - | இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) |
| கு.ந.ச. | - | குற்ற இயல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code) |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காவல் துறைக்கு உச்ச நீதி மன்றத்தின் 11 கட்டளைகள் (AIR 1997 SC 610)

1. கைது மற்றும் விசாரணை செய்யும் காவல் நிலைய அதிகாரி தன் பெயர் மற்றும் அடையாளம் காண்பிக்கும் பட்டை (பேட்ஜ்) அணிய வேண்டும். விசாரணை செய்யும் எல்லா காவல் துறை அதிகாரிகளின் பெயர் குறித்த பெயரேடு வைத்திருக்க வேண்டும்.

2. கைது செய்யும் காவல் நிலைய அதிகாரி உடனடியாக கைது விவரக் குறிப்பு (அரெஸ்ட் மெமோ) தயார் செய்து, அதில் கைது செய்தவுடன் குற்றம் சாட்டப்பட்டவரின் உறவினரோ அல்லது அந்த பகுதியில் வாழும் பிரமுகரிடமோ சாட்சி கையெழுத்துப் பெற்று, அதில் கைதியின் கையெழுத்து, கைது செய்யப்பட்ட நேரம், தேதி முதலியன குறிக்கப்பட வேண்டும்.

3. கைது செய்யப்பட்டபோது தயாரிக்கப்பட்ட கைது விவரக்குறிப்பில் (அரெஸ்ட் மெமோ) கைதியின் உறவினர் கையெழுத்து வாங்கப்படாதபோது, கைதியின் உறவினரோ அல்லது அவர் நலனில் அக்கறை கொண்டவருக்கு எவ்வளவு துரிதமாக முடிகிறதோ அவ்வளவு விரைவாக தெரிவிக்கப்படவேண்டும்.

4. கைது செய்யப்பட்டவர் வேறு மாவட்டத்தில் இருக்கும் பட்சத்தில் அந்த மாவட்டத்தின் சட்ட உதவி நிலையத்திற்கும், சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கும் கைது செய்யப்பட்ட நேரம், இடம் போன்ற தகவல்களை தந்தியின் மூலம் கைது செய்யப்பட்ட 8-லிருந்து 12 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும்.

5. தான் சம்பந்தப்பட்டவருக்கு தனது கைது பற்றி தெரிவிக்க தனக்கு உரிமை உண்டு என்ற தகவலை கைது செய்யப்பட்டவருக்கு கைது செய்யப்பட்டவுடன், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரி தெரிவிக்க வேண்டும்.

6. கைது செய்வது பற்றிய நாட் குறிப்பு (டைரி) எழுதப்பட்டு அதில் காவலில் வைக்கப்பட்ட இடம், கைது பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்ட கைதியின் உறவினர் பெயர், சம்பந்தப்பட்ட காவல் அதிகாரியின் பெயர் முதலியன இடம் பெற்றிருக்க வேண்டும்.

7. கைதி விரும்பும் பட்சத்தில் கைது செய்யப்பட்டபோது அவர் உடலில் உள்ள சிறிய மற்றும் பெரிய காயங்களை பரிசோதனை செய்து, ஒரு பரிசோதனை சான்றிதழ் தயார் செய்து அதில் கைதி மற்றும் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரியின் கையெழுத்திடப்பட்டு அதன் நகலை கைதிக்கு தர வேண்டும்.

8. கைது செய்யப்பட்டதிலிருந்து 48 மணி நேரத்திற்குள் ஒரு முறை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் குழு மூலம் கைதியை மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும்.

9. கைது சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகலை சம்பந்தப்பட்ட இலாகா குற்றத்துறை நடுவருக்கு அனுப்ப வேண்டும்.

10. விசாரணையின் மொத்த நேரத்தில் இல்லாவிடினும் விசாரணையின் போது கைதி தனது வழக்கறிஞரை பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்.

11. எல்லா மாவட்டத் தலைமையகங்கள் மற்றும் மாநிலத் தலைமையகத்திலும், காவல்துறை தகவல் நிலையம் நிறுவப்பட்டு அங்கு கைது பற்றிய எல்லாத் த்கவல்களும், கைது செய்யப்பட்டதிலிருந்து 12 மணி நேரத்திற்குள் கைது செய்த அதிகாரி தெரிவிக்க வேண்டும்.

வாழ்த்துக்களுடன் . . .

**வழக்கறிஞர் உரிமை பாதுகாப்புக் குழு**

பதிவு எண் 150/95, தமிழ்நாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்